# உதயன்

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 025 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 06, சனி 21.12.2013




மப்பான வானிலை
29 C 24 C



பக்கம் 06

தனித்தே தேர்தலை சந்திக்கும் அ.தி.மு.க.



பக்கம் 22

சென். மேரிஸ் பள்ளிமுனை லூட்சியா இறுதியாட்டத்தில் நாளை மோதல்



பக்கம் 23

ஷேன் வோர்ன் நடத்திய விருந்தில் ரியான் ஹரிஸுக்கு அனுமதி ம்றுப்பு

## வீதியில் குழி தோண்டிய வேளை வெளிப்பட்டன மனித எலும்புகள்

***திருக்கேதீஸ்வரத்தில் சம்பவம்***

மன்னார்,டிசெ.21

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் நேற்று வெள்ளிக் கிழமை மூன்று மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. மன்னார் திருக்கேதீஸ்வரம் கிராம சேவகர் பிரிவிலுள்ள மாந்தைச் சந்தியில் இருந்து

21 ஆம் பக்கம் பார்க்க



## இரு நாட்டு மீனவர்களும் ஜனவரி மாதத்தில் பேச்சு

***விசேட குழு இந்தியா செல்லும்***

யாழ்ப்பாணம்,டிசெ.21

இந்திய மீனவர்களின் அத்து மீறல் தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக விசேட குழு ஒன்று எதிர்வரும் ஜனவரி மாதம் இந்தியா செல்லவுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடிவர்த்தகத்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

எமது பகுதிக் கடலில் தென் பகுதி மீனவர்களின் அத்து மீறல்கள் தொடர்வதாகவும், அது தொடர்பாக மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனரட்னவுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## நிறைவேறியது பட்ஜெட்

***95 மேலதிகவாக்குகளால்***

கொழும்பு, டிசெ. 21

2014 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு 95 மேலதிக வாக்குகளால் நேற்று சபையில் நிறைவேற்றப்பட்டது. வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அரசும், அதன் பங்காளிக் கட்சிகளும் வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அதேவேளை, எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தேசிய கூட்டணி என்பன எதிராக வாக்களித்தன.

கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி ஜனாதிபதியும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவால் சமர்ப் பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மீது 22 ஆம் திகதி முதல் நேற்று

21 ஆம் பக்கம் பார்க்க

# தீர்வுக்கு கைகோர்க்குமாறு கூட்டமைப்புக்கு அழைப்பு

## *நாடாளுமன்றில் விடுத்தார் ஜனாதிபதி மஹிந்த*

கொழும்பு, டிசெம்பர் 21

உள்நாட்டுப் பிரச்சினைகளுக்குப் பிறநாடுகளில் தீர்வைத் தேடுவதை விட தேசிய நல்லிணக்கத்துக்கும் அபிவிருத்திக்கும் உள்நாட்டுக்குள்ளேயே தீர்வைக் காண்பதற்கு அரசுடன் கைகோர்க்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நேற்று அழைப்பு விடுத்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.



நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற 2014ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் நிதி திட்டமிடல் அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் பதிலளித்துப் பேசியபோதே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

வடக்கில் மாகாணசபை உருவாக்கப்பட்டு அங்கு ஜனநாயகம் ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலையில்தான் இந்த வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. வடக்கில் அரச சேவைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. விசேட சலுகைகள் அடிப்படையில் அரச சேவைக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

## வெளியாகியது உயர்தரப் பெறுபேறு: யாழ். இந்து, வேம்படி முன்னணியில்

யாழ்ப்பாணம்.டிசெ.21

நேற்று வெளியாகிய ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி யாழ்.மாவட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரியையும் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியையும் சேர்ந்த தலா 18 மாணவர்கள் ' 3 ஏ ' சித்திகளைப் பெற்றுமுன்னிலை பெற்றுள்ளனர்.

கணிதப் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன்னான இராஜசேகரன் யதுசன் ' 3 ஏ ' பெறுபேறுபெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தையும், தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தையும், வணிகப் பிரிவில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிநிருசாஜெயக்குமார் '3ஏ' பெறுபேறு பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும், உயிரி யல் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் சிவஞானசெல்வன் தினேஸ் ' 3 ஏ ' பெறுபேறுபெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் 6 ஆவது இடத்தையும், கலைப்பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி துளசி உமாகரன் ' 3 ஏ ' பெறுபேறு பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த அமிர்தநாதன் பிரவீன் ' 3 ஏ ' பெறுபேறு பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும், கலைப் பிரிவில் அதே பாடசாலையைச் சேர்ந்த மதுஷா தட்ஷணாமூர்த்தி முதலிடத்தையும் பெற்றுள்ளார்.

கணிதப் பிரிவில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த எம். பிரிசாந் '2 ஏ பி' பெறுபேறு பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்

21 ஆம் பக்கம் பார்க்க

## புலமைப் பரிசிலில் தோற்றாலும் விடாமுயற்சியால் சாதித்தேன்

***தேசிய ரீதியில் உயிரியலில் ஆறாமிடம் பெற்ற தினேஸ்***



யாழ்ப்பாணம், டிசெ.21

"தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறத் தவறியபோதும், சாதாரணதரப் பரீட்சையிலும் அதிகூடிய பெறுபேறை அடையமுடியாவிட்டாலும் நான் விட முயற்சியோடு கற்றதனால் தான் இன்று யாழ். மாவ்ட்ட ரீதியில் உயிரியல் துறையில் முதலிடம் பெற முடிந்தது." என்று தெரிவித்துள்ளார் யாழ். மாவட்டத்தில் உயிரியல் துறையில் முதலாம் நிலையையும், அகில

21 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. மட்டுமல்ல உறுப்பு நாடுகளும் இலங்கை இறுதிப் போரில் தோல்வி

***ஐ.நா பிரதிச் செயலர் தெரிவிப்பு***

யாழ்ப்பாணம், டிசெ. 21

இலங்கையின் இறுதிக் கட்டப் போரில்ஐ.நாபாது காப்புச் சபை மட்டுமல்ல உறுப்பு நாடுகளுமே தோல்வியைத் தழுவியுள்ளதாகக் குறிப்பிட்ட ஐ.நாவின் பிரதிச் செய லர் எலியாசன், இலங்கையில் நடந்ததைப் போன்று மீளவும் நடக்காமல் இருப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப் போகின்றோம் எனவும் கேள்வி யெழுப்பியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை யின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியா ழக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் போரின் இறுதிக் கட்டங்களில் மிகக் கொடுரமான சம்ப வங்கள் நடந்தன. அந்தக் காலத்தில் வெளிவந்த அறிக்கைகள் மற்றும், ஐ.நாவின் உள்ளக அறிக் கையாளர் சார்ள்ஸ் பெற்றியின் அறிக்

21 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். வந்த பஸ் விபத்து; ஒருவர் சாவு

துணுக்காய்.டிசெ.21

தென்பகுதியில் இருந்து சுற்றுலாப் பயணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் ஒன்று புளியங்குளம் பகுதியில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 25 க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்

எகலிய கொடப் பகுதியைச்

21 ஆம் பக்கம் பார்க்க

## கற்றலில் முழுக் கவனம் செலுத்தினால் வெற்றியே

***தேசிய ரீதியில் கணிதத்தில் மூன்றாமிடம் பெற்ற யதுசன்***



யாழ்ப்பாணம், டிசெ.21

"கணிதத் துறையில் மாவட்ட நிலையில் முதலாம் இடத் தினை பெற்றுள்ளமை மகிழ்ச்சி தருகின்றது. எதிர்காலத்தில் பௌதிகவியல் துறையில் ஓர் ஆய்வாளனாக வர வேண்டும் என்பதே எனது இலட்சியம் " என்கிறார்

யாழ். மாவட்ட நிலையில் கணிதத்துறை

21 ஆம் பக்கம் பார்க்க

# பரீட்சை எழுதிய மாணவிகளை மோதித் தள்ளியது 'படி' வாகனம்

## காயமடைந்த மூவர் வைத்தியசாலையில்

வலி.வடக்கு.டிசெ.21

ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எழுதி விட்டு வீடு திரும்பிய மாணவிகளை 'படி' ரக வாகனம் ஒன்று மோதியதில் மூன்று பேர் படுகாயமடைந்தனர்.




மானிப்பாய் வீதியில் மருதனார்மடம் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் இராமநாதன், கல்லூரி மாணவிகளான சிவானந்தராசா சாமினா (வயது 16), இராமச்சந்திரன் - லக்ஷனா (வயது -17) செந்தூர்ச் செல்வன் - றொபினா (வயது 16) ஆகிய மாணவிகளே படுகாயமடைந்தவர்களாவார்.

வாகனத்தால் மோதப்பட்டு மூவரும் சில அடி தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த மூன்று மாணவிகளும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் சாமினா, லக்ஷனா ஆகியோர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் விபத்துடன் தொடர்புடைய வாகனத்தையும் கைப்பற்றி பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர். (த-400-86)

# சிறுமி மீது வன்புணர்வு முயற்சி; ஒருவருக்கு ஒத்தி வைத்த சிறை

## நேற்றுமுன்தினம் நீதிமன்றம் தீர்ப்பு

தென்மராட்சி.டிசெ.21

தனித்திருந்த 12 வயதுச் சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்ய எத்தனித்த குடும்பஸ்தருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஏழு வருட கடுழியச் சிறைத் தண்டனையும் இரு குற்றங்களுக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதமும் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி புறநகர்ப் பகுதியில் கடந்த வருடம் வீட்டில் தனித் திருந்த 12 வயதுச் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தும் நோக்குடன் குற்றமுறையாகச் சென்றமை, சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த எத்தனித்தமை ஆகிய குற்றச் சாட்டுக்களுடன் சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசாரணையின் போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இரண்டு குற்றங்களுக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததுடன் ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஏழு வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (த-9)

# ரூபா 14 லட்சம் பெறுமதி கொண்ட பொருள்கள் கடந்த வாரம் திருட்டு

யாழ்ப்பாணம்.டிசெ.21

யாழ். குடாநாட்டில் கடந்த வாரம் நகைகள், பணம் கொள்ளையடிக்கப்பட்டமை உட்பட 14 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையுடைய பொருள்கள் திருடப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.

நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

சாவகச்சேரியில் வீதியால் சென்று கொண்டிருந்த பெண்ணிடமிருந்து 3 இலட்சம் ரூபா பெறுமதியான தாலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அளவெட்டி கிழக்கில் பெண் ஒருவர் அணிந்து சென்ற 21 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. ஐயனார் வீதியில் 2 இலட்சம் ரூபா பணத்துடன் சென்றவரைப் பின்தொடர்ந்த கொள்ளையர் அவரைத் தாக்கிவிட்டுப் பணத்தைப் பறித்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை.

யாழ். கொழும்புத்துறை வீதியில் வீடு புகுந்து 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளன. மிருசுவில் பகுதியில் கோயில் உடைத்து 71 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன.

நாரந்தனையில் வீடு உடைத்து ஒரு இலட்சத்து 71 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சந்கேத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்புத்துறையில் வீடு புகுந்து 24 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. ஈச்சமோட்டையிலும் அதே பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கொழும்புத்துறையில் 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளன.

திருநெல்வேலியில் வீடு புகுந்து 12 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன. ஊர்காவற்றுறையில் 21 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆடுகளும், வேலணையில் வீடு உடைத்து 68 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளும், அராலியில் -7 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிளும், 8 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசியும் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி, பத்தமேனியில் பாடசாலை ஒன்றின் தனி அறை உடைத்து பெறுமதிமிக்க கணினி உதிரிப்பாகங்கள் திருடப்பட்டுள்ளன - என்றார். (த-4-86)




கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் யாழ்.நகரில் களை கட்டியுள்ளன. நத்தார் தாத்தா பரிசுப் பொருள்களுடன் யாழ்.நகர வீதிகளில் இப்போது உலா வருகிறார். தனது ஆடல், பாடல்களால் அவர் சிறுவர்களை மகிழ்விக்கிறார்.

# இந்தியா செல்லும் பக்தர்களுக்கு மலேரியா மாத்திரை கட்டாயம்

யாழ்ப்பாணம்.டிசெ.21

இந்தியாவின் சபரிமலைக்கு யாத்திரையை மேற்கொள்ள இருக்கும் ஐயப்ப பக்தர்கள் மலேரியா தடுப்பு மாத்திரைகளை பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

இந்தியாவுக்கு யாத்திரையை மேற்கொள்ளும் காலப்பகுதியில் மலேரியா தொற்றில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதோடு இந்த நடைமுறையை பின்பற்றுமாறு அவர்கள் கோரியுள்ளனர். இந்த மாத்திரைகளை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

# தொண்டர் போராட்டத்துக்கு பொலிஸாரின் பாதுகாப்பு



யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்.போதனா வைத்தியசாலைத் தொண்டர்கள் ஒன்பதாவது நாளாகவும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில் பொலிஸார் அங்கு காவற்கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமக்கு நிரந்தர நியனம் வழங்கத் தவறின் மாடிக் கட்டடத்திலிருந்து குதித்து விபரீதமான முடிவுகளை எடுக்க வேண்டி வரும் என்று தொண்டர்கள் தெரிவித்த நிலையில், அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தவிர்க்கும் பொருட்டே பொலிஸார் அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-4)

# 30 இந்திய மீனவருக்கும் ஜன.3 வரை விளக்கமறியல்

**"மீனவர்களின் வழக்கு விசாரணை நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது.**

யாழ்ப்பாணம்.டிசெ.21


நெடுந்தீவுக் கடற்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டதாகத் தெரிவித்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 30 மீனவர்களின் விளக்கமறியல் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 5 ஆம் திகதி காங்கேசன்துறைக் கடற்படையினரால் ஏழு படகுகளுடன் 30 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மீனவர்கள் மீதான வழக்கு விசாரணை நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது. இதன்போது 30 மீனவர்களையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து மீனவர்களின் விடுதலை தொடர்பான அறிவுறுத்தல் வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# சுகாதாரத் தொண்டர்களிடம் வாங்கிக் கட்டினார் உயரதிகாரி




தனது அமைச்சின் கீழ் உள்ள சுகாதாரத் தொண்டர்களைப் பார்த்து, 'நீங்கள் சில வருடங்கள் தானே பணிபுரிந்திருக்கின்றீர்கள்?' என்று மாகாண சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் கூறியமையால் ஆக்ரோஷம் அடைந்த அவர்கள் 1997 ஆம் ஆண்டிலிருந்து பணிபுரிந்து வருவதற்கான ஆதாரங்களை எடுத்தக் காட்டினார். இதனால் வாயடைத்து போய் அங்கிருந்து திரும்பிச் சென்றார். வட மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சுச் செயலாளர் இ.ரவீந்திரன்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்து யாழ்.மாவட்ட சுகாதார தொண்டர்கள், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட அதிகாரிகளை அவர்களின் அலுவலகத்துக்குச் செல்ல விடாமலும் அலுவலகத்துக்குள் சென்றவர்களை வெளியேற விடாமலும் வாசலை மூடி இரண்டாவது நாளாகவும் போராட்டம் நடத்தினர்.

இதனால் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கூட நேற்று அவரது அலுவலகத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட சுகாதாரத்தொண்டர்கள் மேலும் தெரிவித்ததாவது:

நாம் 1997 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தொண்டர்களாகப் பணியாற்றி வருகிறோம். தொண்டராக இணைக்கும் பொழுது, நியமனத்தின் போது முன்னுரிமை அளிக்கப்படும் என்று வாக்குறுதி அழித்திருந்தனர். தற்போது நியமனம் வழங்குவதற்கென பெயர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் அதில் எமது பெயர்கள் இடம்பெறவில்லை. சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றாமல் உள்வாங்கியவர்களை உடனடியாக இடைநிறுத்துதல் வேண்டும் - என்றார்.

இவர்களின் போராட்டம் தொடர்பில் வட மாகாண சுகாதாரத சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆர்.ஜீட், வட மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சுச் செயலாளர் இ.இரவீந்திரன் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் இணைந்து அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அதில், 2005 இல் இங்கு சிற்றூழியர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு 205 சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது. கடந்த ஜீன் மாதம் சிற்றூழியர் வெற்றிடத்துக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு 94 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது. இங்கு 258 பேர் சமூக சுகாதாரப் பணியாளர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவுடன் பணி புரிகின்றார்கள். தற்போது சிற்றூழியர் வெற்றிடங்கள் எதுவும் இல்லை. மேலதிக ஆளணியை உருவாக்கி வெற்றிடங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## உணவகங்கள் மீது திடீர் பரிசோதனை

தென்மராட்சி, டிசெ.21
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையங்கள் மீது நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகர சபையின் சுகாதாரக் குழு வினர் திடீர் பரிசோதனை நடத்தினர்.
நகரசபையின் சுகாதாரக் குழுத் தலைவர் த.சுதர்சன் தலைமையில் நகரசபை செயலாளர், பொதுசுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் உணவு கையாளும் நிலையங்களின் சுகாதாரம் மற்றும் குடிதண்ணீர் போன்றவற்றைப் பார்வை 'யிட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (வ-9)

## திருவடி நிலை ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ.21
சுழிபுரம் திருவடிநிலை வாகை வைரவர் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. ஆலயத்தில் கட்டப்பட்டிருந்த ஆலயக் கண்டாமணி உட்பட ஏனைய பூசை மணிகளும், வைர வரின் வாகனம் என்பனவும் களவாடப் பட்டுள்ளன. ஆலயக் கண்டா மணி சுமார் 40 கிலோ நிறையுடையது என்றும் அதன் பெறுமதி ஒன்றரை இலட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-14,28)

## படு வேகமாக வந்த ஹைஏஸ் வேட்டையாடியது 3 மாடுகளை

*அவற்றின் பெறுமதி ரூ.1 லட்சம்*

தென்மராட்சி, டிசெ.21
வீதியோரத்தில் நடந்து சென்ற மாடுகளை படுவேகமாக வந்த ஹைஏஸ் வாகனம் மோதியதில் மூன்று மாடுகள் கொல்லப்பட்டன. வாகனத்தின் முற் பகுதியும் சேதமடைந்தது.

> "–" அதிகாலை ஐந்து மணிக்கு சாவகச்சேரி மடத்தடி ஏ-9 வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை ஐந்து மணிக்கு சாவகச்சேரி மடத்தடி ஏ-9 வீதியில் இடம்பெற்றது.
மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடப்பட்ட சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மாடுகளே அநியாயமாக இறந்து மடிந்தன. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் இறந்த மாடுகள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டன. (ஓ-9)

## போதையில் வாகனம்செலுத்திய 10 பேர் கடந்தவாரம் கைது

யாழ்ப்பாணம், டிசெ.21
மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கடந்த வாரம் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.
யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 13 பேரும், சட்ட விரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 23 பேரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 4 பேரும், கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 2 பேரும், சந்தேகத்தின் பேரில் 12 பேரும், விபத்து ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 5 பேரும், சூழல் மாசடையும் வகையில் செயற் பட்ட குற்றச்சாட்டில் 2 பேரும், திருட்டு மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் 4 பேரும் கைது செய்யப் பட்டுள்ளனர்-என்றார். (வ-4)

## கோண்டாவில் இ.போ.ச. டிப்போ; குறைத்ததா குறுந்தூர சேவைகளை?

*சாவகச்சேரி நகரசபைக் கூட்டத்தில் தெரிவிப்பு*

தென்மராட்சி,டிசெ.21
இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையினர் தூர இடங்களுக் கான பஸ் சேவைகளை ஆரம்பித்து குறுந்தூர சேவைகளைக் குறைத்துள்ளமை தொடர்பாக சாவகச்சேரி நகரசபைக் கூட்டத்தில் உறுப்பினர்களால் பிரஸ்தாபிக்கப்பட்டது.




குறிப்பாக முன்னர் அரை மணித்தியாலத்துக்கு ஒரு சேவையாக கொடிகாமம்-யாழ்ப்பாணம் சேவை இடம் பெற்றது. ஆனால் தற்போது தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் அதிகரிக்கப்பட்டு 769 மார்க்க சேவையில் பஸ் சேவைகள் குறைந்துள்ளன.
இதனால் பயணப் பருவச்சீட்டுப் பெற்ற மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் நீண்ட நேரமாக பஸ்ஸின் வருகைக்காகக் காத்திருக்கின்றனர்.
இந்த நிலையில் தூர இடங்களுக்குச் செல்லும் பஸ்களும் தூர இடங்களில் இருந்து வரும் பஸ்களும் கூடிய பயணிகளுடன் சேவையில் ஈடுபடுவதால் மாணவர்கள், அரச பணியாளர்கள் தனியார் பஸ்களில் தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்ற பிரஸ்தாபித்தனர்.

> "–" 769 மார்க்க சேவையில் பஸ் சேவைகள் குறைந்துள்ளன. இதனால் பயண பருவச்சீட்டுப் பெற்ற மாணவர்கள். அரச உத்தியோகத்தர்கள் நீண்ட நேரமாக பஸ்ஸின் வருகைக்காகக் காத்திருக்கின்றனர்.


இது தொடர்பாக இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ்.சாலை முகாமையாளர் எஸ்.குலபாலசெல்வத்துடன் தொடர்புகொண்டு கேட்ட போது:-
கொடிகாமம்-யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவைகள் குறைக்கப்படவில்லை. போதுமான சேவை இடம்பெறுகிறது. இது தொடர்பாக சாவகச்சேரி நகர சபையால் எந்தவிதமான கோரிக்கைகளும் அனுப்பப்படவில்லை. அவ்வாறான பிரச்சினைகள் இருந்தால் சபைக்குத் தெரியப்படுத்தினால் சபை நடவடிக்கை எடுக்கும்-எனத் தெரிவித்தார். (வ-14-9)



நத்தார் தினத்தின் மையமான பாலன் குடிலை அலங்கரிக்கும் சவுக்கு மரக் கிளைகளின் விற்பனை யாழ்.நகரில் அமோகமாக நடைபெறுகிறது. கரையோரப் பகுதிகளின் பிரதான வீதிகள், சந்தைகள், சந்திகள் போன்ற இடங்களில் சவுக்கு மரக் கிளைகளை வாங்குவதில் மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர். (வ-135)

## கைத்தொழில் துறையினருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.21
ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண வர்த்தகத் தொழில் துறை மன்றம் நடத்திய சுய தொழில் மற்றும் கைத்தொழில் துறை சார்ந்தோர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நேற்று யாழ். கிறீன் கிறாஸ் விடுதியில் நடைபெற்றது.



யாழ்.மாவட்டத்தில் உள்ள சுயதொழில் முயற்சியை முன்னெடுப்பதற்கு ஆர்வமுள்ளவர்களை ஒன்றிணைத்து நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கில் யாழ்.மாவட்ட கைத்தொழில் அதிகார சபையைச் சேர்ந்த எஸ்.சிவகங்காதரன், வி.குகநேசன்ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்.
இதன் போது பொருத்தமான சுய தொழில் வாய்ப்புக்களை இனங்கண்டு நிலைபேறான வளர்ச்சியுடன் சந்தைப்படுத்துவதன் ஊடாக தத்தமது சுய பொருளாதாரத்தை மேம்படுத்தி சாதனையாளர்களை உருவாக்குவதற்கு தேவையான கருத்துரைகள் வழங்கப் பட்டன.
இந்தக் கருத்தரங்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.(வ-14)

## 39 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி; 5 பேர் கைது

*வாராந்த பொலிஸ் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.21
யாழ்.குடாநாட்டில் 39 லட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் மோசடி செய்யப் பட்டுள்ளமை தொடர்பில் 5 பேர் கடந்த வாரம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளனர். எனினும் இது தொடர்பாக இதுவரை இதுவரை எவரும் கைது செய்யப்பட வில்லை என்று யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.
நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
யாழ்.பலாலி வீதியைச் சேர்ந்த ஒருவர், 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையைக் கொடுத்து மோசடி செய்துள்ளதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
சுதுமலை தெற்கில் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.
யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வெளிநாட்டுக்கு அனுப்புவதாக் கூறி 3 இலட் சத்து 50 ஆயிரம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
யாழ்.முதலாம் குறுக்குத் தெருவில் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை வழங்கி பணம் வைப்பிலிடாது மோசடி செய்துள்ளதாக பாதிக்கப்பட்டவர் முறைப்பாடுசெய்துள்ளார்.
20 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கி மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் துன்னாலை வடக்கைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.
மற்றொருவரும் 7 இலட்சம் ரூபாபெறு மதியான காசோலை வழங்கி மோசடி செய்தமை தொடர்பில் துன்னா லையைச் சேர்ந்த அதே நபர் முறைப்பாடு செய்துள்ளார். (வ-4)

## வலி.தென் மேற்கில் இரத்தப் பரிசோதனை

*டெங்கு, மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்டதை அடுத்து*

வலி.தென்மேற்கு, டிசெ.21
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் இந்த மாதம் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட நால்வரும் மலேரியா நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரும் இனங்காணப்பட்டதையடுத்து தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பிரிவினர் அந்தப் பகுதியில் இரத்தப் பரிசோதனையையும், புகையூட்டல் நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளனர்.

> "–" இரத்தப் பரிசோதனையையும். புகையூட்டல் நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளனர்.

மானிப்பாய் அரசடியைச் சேர்ந்த ஒருவர் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டதை அடுத்து அந்தப் பகுதிச் சுற்றாடலில் வசிக்கும் மக்களுக்கு இரத்தப் பரிசோதனையை மேற்கொண்ட சுகாதாரப் பகுதியினர் குறித்த நோய் மேலும் பரவாமல் தடுக்கும் வகையில் மருந்து விசிறும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.
இதேவேளை, குறித்த பிரதேசத்தில் பரவலாக டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட நால்வர் இனங்காணப்பட்டதையடுத்து புகையூட்டல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ள சுகாதாரப் பகுதியினர் டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்பு குறித்த விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளனர்.(வ-115)

## 5 பேரை கடித்த நாயின் தலை கொழும்புக்கு

வலி.தென்மேற்கு, 21
ஒரே நாளில் 5 பேரைக் கடித்துக் குதறிய நாயின் தலை பரிசோதனைக்காக வெட்டிக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மாதகல் பகுதியில் ஒரே நாளில் இரு சிறுவர்கள் உட்பட ஐவரைக் கடித்துக் குதறிய குறித்த வளர்ப்பு நாய் மறுநாள் இறந்துவிட்டது.
அதையடுத்து, புதைக்கப்பட்ட நாயின் தலையை வெட்டி பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ள சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த சுகாதார உத்தியோகத்தர்கள் அந்தப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நாய்த் தடுப்பூசி ஏற்றுவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளனர். (ஓ-115)

# உள்ளூராட்சி மன்றத்தை நடத்தமுடியாத நமக்கு தனிநாடு, சுயாட்சி தேவைதானா?

*வடக்கு முதல்வர் கேள்வி*

யாழ்ப்பாணம், டிசெ. 21

உள்ளூராட்சி மன்றங்களையே கொண்டு நடத்தத் தெரியாத எமக்கு எதற்குதான் சுயாட்சி, தனிநாடு என்று சர்வதேசம் கேட்கும் நிலையை உருவாக்கக் கூடாது .எமது உறுப்பினர்களே எமது வரவு செலவுத் திட்டத்தை முறியடித்தல் என்பது மன்னிக்க முடியாத குற்றம் - என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம், வடக்கு மாகாணத்துக்கான கூட்டத்தை யாழ். பொதுநூலகத்தில் நேற்று நடத்தியது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போதுஅவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒருபுறம் பிரச்சினை இருக்கின்றது. மறுபுறம் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் சுயநலம் கட்டுக் அடங்காமல் அதிகரித்துச் செல்கின்றது. எமது கட்சியின் அங்கத்தவர்களே, தங்களுக்குள் அடிபட்டு தங்களின் வரவு - செலவுத் திட்டத்தை முறியடிக்க முற்படுகின்றார்கள்.

பொதுவாக பதவியிலிருக்கும் ஒருவருடன் ஒத்துப் போக முடியாது விட்டால், அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம். ஒத்துப் போகாதவர் பதவியிலிருந்து விலகலாம்.

அதைவிடுத்து எமது கட்சி சார்பில் கொண்டு வரப்படும் வரவு - செலவுத் திட்டத்தை சபையில் முறியடித்தல் என்பது மன்னிக்க முடியாத குற்றம். ஏனென்றால் அந்த திட்டத்தில் ஏதாவது குறைகள் இருந்தால் முன்னரே அதனைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கு மாறாக நடவடிக்கைகள் எடுத்து தமது வரவு - செலவுத் திட்டத்தை தாமே முறியடித்தவர்கள் வெட்கப்பட வேண்டும்.

எமது உள்ளூராட்சி மன்றங்கள் போதிய புரிந்துணர்வைப் பெறவில்லை. போரின் தாக்கமும் உள்ளூராட்சி மன்றங்களின் வளர்ச்சியில் படியாமல் இல்லை. கூட்டுறவு அடிப்படையில் அல்லாது ஒருவித இராணுவ ஆணையிடும் அடிப்படையில் உறவுகள் இருந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றின் திறன் மீள் விருத்தி செய்யப்பட வேண்டிய காலம் வந்துள்ளது. உறுப் பினர்களின் கடமைகள், தவிசாளர் கடமைகள், செயலாளர் கடமைகள். என்று பலதையும்நாம் அறிய வேண்டும்.

இது தொடர்பில் நாம் நிபுணர்களைக் கொண்டு கருத்தரங்குகளை நடத்தவுள்ளோம். தொழில் ரீதியான அறிவு கிடைத்தால், ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களையே பதவி இறக்கும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட மாட்டோம் என்றுநம்ப முடியும். மேலும் பதவியிலிருப்பவர்களும் தான்தோன்றித் தனமாக செயற்படமாட்டார்கள்.

உள்ளூராட்சி மன்றங்களை நாங்கள் தொழிற்திறனுடன் நடத்தினால்தான் எமக்குப் போதிய நிர்வாகச் செயலாட்சி, மேலாண்மைத் திறன்களும் தகுதிகளும் உண்டென்று சர்வதேசம் நம்பும். இல்லாவிட்டால், உள்ளூராட்சி மன்றங்களையே நடத்தத் தெரியாதவர்கள் ஏன்தான் சுயாட்சி, தனிநாடுஎன்றெல்லாம் கோஷம் போட்டுத் திரிகின்றார்களோ தெரியவில்லை என்று எங்களை உலகம் பழிக்கும்.

எமது கட்சி உட்பூசல் அம்பலத்துக்கு வருவதை நாங்கள் தவிர்க்க வேண்டும். விரைவில் வடமாகாண சபையானது உள்ளூராட்சி மன்றங்களின் உட்பூசல்கள், நிர்வாகத் திறனின் குறைநிறைகள், லஞ்ச ஊழல்கள் போன்ற பலதையும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் - என்றார். (ஙு-5)

அதிரடி மலிவு விற்பனை
10% - 50%கழிவு
மங்களா
சகல தளபாடங்களுக்கும்
10% - 50% விலை குறைப்பு
தெரிவுக்கு முந்துங்கள்
இல. 536, கே.கே.எஸ் வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 - 2228367, 0777 286069

# வீதிப் புனரமைப்பில் ஏற்பட்ட தேக்கத்தால் அலுவலகத்தில் புகுந்து மக்கள் அட்டகாசம்

யாழ்ப்பாணம், டிசெ. 21

சாவகச்சேரியிலுள்ள வீதியொன்றின் புனரமைப்பில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையினால், கொதிப்படைந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் நேற்றைய தினம், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினுள் புகுந்து அட்டகாசம் செய்துள்ளனர்.

நேற்று மதியம் 12 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் வரையில், அலுவலகத்தின் செயற்பாடுகளைப் பாதிக்கும் வகையில்செயற்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி தனங்கிளப்பு பகுதியில் காரியான்தூக்கு வீதி (பொன்னையா வீதி) 'என்றிப்' திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்குரிய ஒப்பந்தம் சாவகச்சேரி பிரதேச சபையினால் வழங்கப்பட்டிருந்தது.

ஒப்பந்தகாரரால் வீதிப்புனரமைப்புக்குரிய முதல் கட்ட பொருள்களும் பறிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் திடீரென ஏற்பட்ட விலை அதிகரிப்புக் காரணமாக மேலதிக பொருள்கள் பறிக்கப்படவில்லை. இதன் காரணமாக ஒப்பந்தகாரருக்கும், திட்ட அலுவலகத்துக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.


இதன் பின்பு மேற்படி பொருள்களை பிரதேச சபை பொறுப்பெடுத்து அதனை நடைமுறைப்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் திட்டத்தை மேற்பார்வை செய்யும் அலுவலகமாக செயற்பட்ட யாழ்.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்குள் மக்கள் புகுந்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர். வீதிப் புனரமைப்புத் தொடர்பில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்வது மாவட்ட செயலக திட்டக் கிளையே என்று தெளிவுபடுத்தியும் அங்கிருந்தவர்கள் மக்கள் கேட்கவில்லை.

இறுதியில் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்ட பின்னரே அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

(ஙு-5)

அந்தியேட்டி அழைப்பு





கடந்த 19.11.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர் சரவணமுத்து விமலகாந்தன்

அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் மதிய போசனமும் இன்று (21.12.2013) சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் சுன்னாகம் கதிரமலைசிவன் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம் கிழக்கு சுன்னாகம். குடும்பத்தினர்.

# கிளி. பெண்ணின் மரண விசாரணை உரிய வகையிலேயே நடத்தப்பட்டது

*மரண விசாரணை அதிகாரி தகவல்*

யாழ்ப்பாணம், டிசெ. 21

கட்டாயக் கருத்தடைக்குட்பட்டு உயிரிழந்த கிளிநொச்சிப் பெண்ணின் மரண விசாரணை உரிய வகையிலேயே மேற்கொள்ளப்பட்டதாக மரண விசாரணை மேற்கொண்ட பதில் திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ.ந. பிரேமகுமார்உதயனுக்குத்தெரிவித்தார்.

கிளிநொச்சி மலையாளபுரத்தில் கட்டாயக் கருத்தடைக்கு உள்ளாக்கப்பட்டவர்களில் சதீஸ்குமார் மஞ்சுளா என்ற இளம் தாய் கடந்த நவம்பர் மாதம் உயிரிழந்திருந்தார்.

இவரது மரண விசாரணை உரிய வகையில் இடம் பெறவில்லை என்று அவரது கணவர் நீதி மன்றில் தெரிவித்திருந் தார்.

இது தொடர்பில் மரணவிசாரணை அதிகாரி குறிப்பிடுகையில், கடந்த நவம்பர் 28 ஆம் திகதி மரண விசாரணை உரிய வகையிலேயே மேற்கொள்ளப்பட்டது.

உயி ரிழந்தவரின் கணவர் மற்றும், உயிரிழந்த பெண்ணின் தாய் இருவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

உயிரிழந்தவருக்கு காய்ச்சல் ஏற்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையிலும் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பலனின்றியே உயிரிழந்தாகவும், உயிரிழந்தவரின் மரணத்தில் எவரிலும் எவ்வித சந்தேகமும் இல்லை என்று இருவரும் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் கர்ப்பமாக இருந்தது பற்றியோ, கருத்தடை செய்தது பற்றியோ மரண விசாரணையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை – என்று குறிப்பிட்டார். (ஙு-5)

மரண அறிவித்தல்

கந்தையா அருளம்பலம்



அளவெட்டி அலுக்கையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி கேணிக்கரையை வசிப்பிடமாகவும் கொண்ட அளவெட்டி அருணோதயாக் கல்லூரி முன்னாள். உப அதிபரும். ஓய்வு நிலை விஞ்ஞானக் கல்வி ஆலோசகருமான கந்தையா-அருளம்பலம் நேற்று முன்தினம் (19.12.2013) வியாழக்கிழமை காலமாகிவிட் டார்.

அனனார் அளவெட்டி காலஞ்சென்ற கந்தையா -வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், அளவெட்டி காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை -கனகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும். மங்களேஸ்வரியின் அருமைக்கணவரும். பார்த்தீபன் (நோர்வே). பவானி ஆகியோரின் அன்புத் தந்தையும். அர்ச்சுன் (நோர்வே). அங்குசன் -அகலவன் ஆகியோரின் அருமைப் பேரனும். சிவபாலசுப்பிரமணியம் (மலேசியா). காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் நாகலிங்கம் (ஓய்வு நிலை மருந்தாளர்) . காலஞ்சென்ற சத்தியமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22/12/2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணிக்கரை, அளவெட்டி.
தொ.பே:- 021 300 2597

தகவல்: மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

திருமதி இரத்தினம்(பாக்கியம்) இராமசாமி



யாழ்ப்பாணம் சுதுமலையைப் பிறப்பிடமாகவும் 15 ஆம் ஒழுங்கை பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் இராமசாமி நேற்று (20.12. 2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராமசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தவராசா. சின்ராசு மற்றும் கௌரீஸ்வரி. கலாதேவி (இந்தியா). சிவகுருநாதன். இராசன் ஆகியோரின் அன்புத்தாயும். காலஞ்சென்ற துரைராசா. இராசமாணிக்கம் (இந்தியா). உருத்திராதேவி , கமலேஸ்வரி ஆகியோரின் மாமியும். தசி. விசி. தேவி. விமலா. நாதன் (கனடா). காஞ்சி (கனடா). கவிதா (சுவிஸ்). கிருஸ்ணா (ஜேர்மனி). வாணி, சுதன். குஞ்சன் (உரிமையாளர். நியூ பரந்தன் எலக்ரிக்கல்). நிசா. ரூபன் ஆகி யோரின் அன்புப் பேர்த் தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21.12.2013) சனிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக பரந்தன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15 ஆம் ஒழுங்கை, பரந்தன்.

தகவல்:
குடும்பத்தினர்.

# சுன்னாகம் வங்கி முன்பாக தேங்கி நிற்கும் கழிவுநீர்

சுன்னாகம் மக்கள் வங்கியின் முன்பாக உள்ள வாய்க்காலில் தேங்கும் கழிவு நீரால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசும் நிலைமை காணப்படுகின்றது.
குறித்த பகுதியில் அமைக்கப் பட்டுள்ள கழிவு நீர் செல்லும் வாய்க்கால் உரிய முறையில் அமைக்கப்படாமையால் கழிவு நீர் வழிந்தோட முடியாதவாறு தேங்கிக் காணப்படுகின்றது.
இதனால் சுன்னாகம் நகரப் பகுதிக்கு வரும் பொதுமக்கள் துர்நாற்றத்தைத் தாங்கிய வண்ணமே செல்ல வேண்டிய நிலைமை காணப்படு வதுடன் பணப்பரிமாற்று இயந்திரத்தில் இருந்து பணத்தை பெற வருவோரும் துர் நாற்றத்தின் மத்தியில் பணம் பெறும் நிலைமையும் காணப்படுகின்றது.
குறிப்பிட்ட வாய்க்கால் சிமெந்துத் தட்டுக் கொண்டு மூடப் பட்டுள்ளமையால் அதனை திறந்து பிரதேச சபைகூட துப்புரவு செய்ய முடியாத நிலைமையும் காணப்படுகின்றது.
குறிப்பிட்ட கட்டுமானப் பணியாளர்களுடன் இது குறித்து தொடர்பு கொண்டபோது குறித்த இடத்தில் மண் வந்து சேர்ந்ததும் நீர் தேங்கும் நிலைமை அற்றுவிடும் எனக் கூறி உரிய நடவடிக்கை எடுக்காது சென்றுள்ளார்கள் என அந்தப் பகுதியில் வர்த்தக நிறுவனங்களை நடத்துவோர் தெரிவித்தனர். (வ-86)

## கொழும்புத்துறையில் நகைகள் திருட்டு

*கொழும்புத்துறை, வளன்புரம் பகுதியில் உள்ள வீடொன்றில் பட்டப் பகலில் சுமார் 6 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன.*
*கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் சங்கிலி, காப்பு, மோதிரம் என்பன கொள்ளையடிக்கப்பட்டன.*
*வீட்டு உரிமையாளர் வீட்டைப்பூட்டி விட்டு வெளியே செல்லும்போது மின்மானிப் பெட்டிக்கு மேல் திறப்பை வழமையாக வைப்பதை அவதானித்து அதை எடுத்து வீட்டினுள் சென்று அலுமாரியில் இருந்த நகைகளை திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.*
*வீட்டுக்காரர் திரும்பி வந்தபோது கதவில் திறப்பு இருந்ததால் திருட்டு இடம்பெற்றமையை தெரிந்துகொள்ள முடிந்தது.*
*இது தொடர்பாக யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-135)*

## சாவகச்சேரி வீதிகளில் குறியீட்டுப் பலகைகள்

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஏற்படும் வீதிப் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்கும் விதமாக குறியீட்டுப் பலகைகள் பொருத்தப்படவுள்ளன.
சாவகச்சேரி நகர சபையும், சாவகச்சேரி பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவும், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றமும் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.
வீதியோரங்களில் முக்கியமான இடங்களில் வாகனங்கள் நிறுத்தக்கூடாது என்னும் குறியீடும், தினமும் வீதியின் ஒரு மருங்கில் பொருள்களுடன் வரும் வாகனங்களை நிறுத்தும் குறியீடும் நடப்படவுள்ளன.
சாவகச்சேரி மருத்துவமனை தொடக்கம் ரயில் நிலைய வீதிச் சந்தி வரை நகரப் பகுதியை உள்ளடக்கி இந்த குறியீட்டுப் பலகைகள் அமைக்க முடிவு செய்யப்படவுள்ளதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.
இந்தப் பகுதியில் வைத்தியசாலை, பிரதேச செயலகம், பாடசாலை, வர்த்தக நிலையங்கள், வங்கிகள், எரிபொருள் நிலையம் போன்றவை அமைந்துள்ளதாலும் ஏ-9 வீதியோரங்களின் இரு புறங்களும் தினமும் பெருமளவு வாகனங்கள் நிறுத்தப்படுவதாலும் தினமும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## துண்டி இந்து மயானத்தில் மடம் அமைக்கும் பணி

கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தில் இறுதிச் சடங்கை நிறைவேற்றச் செல்வோருக்கான இளைப்பாறும் மடம் மற்றும் அந்தியேட்டி மடம் என்ப வற்றை நிர்மாணிக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.
துண்டி இந்து மயான அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் போர்க் காலத்தில் சேதமடைந்த இளைப்பாற்று மடமும் புதிதாக அந்தியேட்டி மடமும் அமைக் கப்படுகின்றன.
இளைப் பாறும் மடத்துக்காக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில் வெஸ்திரி அலன்ரின் வழங்கிய நிதிப் பங்களிப்புடன் பொதுமக்களின் உதவிகளையும் பெற்று பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன் அந்தியேட்டி மடத்தை அமைப்பதற்கு யோகர் சுவாமிகள் சமாதிக் கோயிலின் நிர்வாகத்தினர் அனுசரணை வழங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-135)



நெடுந்தீவில் அமைக்கப்பட்டு வரும் பிரதேச செயலகத்தின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளது. (வ-7)

# சுதந்திரமாக தொழில் செய்ய முடியாத நிலை

*யாழ்.வணிகர் கழகத் தலைவர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.21
எமது பிரதேச மக்கள் தமது பகுதிகளில் எந்த ஒரு தொழிலையும் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் மேற்கொள்ள முடியாதநிலை உள்ளதாக யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்தார்.
நேற்று முன்தினம் யாழ். வணிகர் கழகத்தில் இடம் பெற்ற வர்த்தகர்கள், வங்கியாளர்கள், மாகாண வர்த்தக அமைச்சர் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தொடர்ந்து பேசிய தலைவர்:
இங்கே உள்ளவர்கள் ஒரு ஹோட்டலை நடத்தினால் தென்பகுதியில் சுற்றுலாத் துறையினர் காங்கேசன் துறையிலும் பலாலியிலும் உள்ள ஹோட்டல்களுக்குச் செல்லுமாறு சுற்றுலாப் பயணிகளுக்குக் கூறுகின்றனர்.

> “ – ”
> எமது வர்த்தகர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாதவாறு பல்வேறு நிறுவனங்கள் தமது பொருள்களைக் கொண்டு குறைந்த விலைக்குக் கொடுக்கின்றனர்

விவசாய உற்பத்திகளை இங்கு விற்க முடியாத நிலை உள்ளது. தம்புள்ளவில் இருந்து மரக்கறி வகைகளை எடுத்து வந்து குறைந்த விலைக்கு விற்பனை செய்கின்றனர்.
எமது வர்த்தகர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாதவாறு பல்வேறு நிறுவனங்கள் தமது பொருள்களைக்கொண்டுவந்துகுறைந்த விலைக்குக் கொடுக்கின்றனர்.
வங்கிகளில் பெற்ற கடன்தளை மீளச் செலுத்த முடியாத நிலையில் வர்த்தகர்கள் தமது வியாபார நிலையங்களை மூட வேண்டியுள்ளது. ஒரு சிலர் நாட்டை விட்டே வெளியேறிவிட்டனர். போர்க் காலத்தில் இருந்ததைவிட தற்போது வர்த்தகர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இதுபோன்று பலதரப்பட்ட பிரச்சினைகளால் வர்த்தகர்கள் தமது தொழிலை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. வங்கியாளர்கள், வர்த்தகர்கள் கலந்துரையாடி தகுந்த முடிவை எட்ட வேண்டியது அவசியம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-7)

## வர்த்தகரின் பணப்பை மாயம்

*வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை*

வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஒருவரின் கைப்பையினுள் வைக்கப்பட்டிருந்த பணப்பை திருடப்பட்டுள்ளது.
இந்தச்சம்பவம்நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பொதுச் சந்தை மரக்கறிப்பிரிவில்இடம்பெற்றது.
வியாபாரப் பொருள்களைக் கொள் வனவு செய்தபின்னர் பணப்பையை கைப்பைக்குள் வைத்துவிட்டு வியாபாரத்தில் குறித்த வியாபாரி ஈடுபட்டிருந்த வேளையில் பணப்பை திருடப்பட்டுள்ளதாகவும் வாடிக்கையாளருக்கு மிகுதிப் பணம் கொடுப்ப தற்கு பணப்பையை எடுக்கமுற்பட்ட வேளையிலேயே காணாமலேயே போனமை தெரியவந்ததாக வும் தெரிவிக் கப்பட்டது.
மரக்கறி கொள்வனவு செய்த பின்னர் 15 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை பணப் பையினுள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.
சாவகச்சேரி மீன்சந்தை விற்பனைப் பிரிவில் இரு வாரங்களுக்கு முன்னரும் மீன் வியாபாரி ஒருவருக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த பணப்பையுடன் 22 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## நீதிமன்றில் கைபேசியை அலறச் செய்தவர் எச்சரிக்கப்பட்டார்

தென்மராட்சி.டிசெ.21
நீதிமன்ற நடவடிக்கைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கையடக்கத் தொலைபேசியை அலற வைத்த நீர்வேலிவாசி நீதிமன்றில் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் இடம் பெற்றது.
நீதிமன்றச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அதைப் பார்த்துக் கொண்டிருந்த நபரின் கையடக்கத் தொலைபேசி திடீரென அலறியது. உடனடியாக அவரைக் கைது செய்த நீதிமன்றப் பொலிஸார் அவர்மீது வழக்குத் தாக்கல் செய்தனர்.
குறித்த நபர் நீதிமன்றில் மன்னிப்புக் கோரியதை அடுத்து எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். (வ-9)

## மாம்பழத்துக்கு திடீர் கிராக்கி

சாவகச்சேரி சந்தையில் மாம்பழத்தின் விலை திடீரென உயர்ந்துள்ளது.
சந்தையில் மாம்பழத்தின் விலை குறைந்துள்ளதாக வெளியான தகவலை அடுத்து ஏனைய பிரதேசங்களிலிருந்து பெருமளவு மக்கள் மாம்பழக் கொள்வனவுக்கு வந்ததால் ஒரு ரூபா வீதம் விற்பனை செய்த விளாட் மாம்பழம் 10 ரூபா வாகவும் ஐந்து ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்ட கறுத்தக் கொழும்பான் மாம்பழம் 30 ரூபாவா கவும் விலை உயர்ந்துள்ளது.
மாம்பழத்தைக் கொள்வனவு செய்ய தினமும் பெருமளவு மக்கள் வருவதால் மாம்பழத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வியா பாரிகள் தெரிவித்தனர். (வ-9)

# பெயர், விவரம் தெரிவு மட்டுமே; விருதுகள் வழங்கப்படவில்லை

*ஏன் இன்னும் இழுத்தடிப்பு - கிராம அலுவலர் கேள்வி*

யாழ்ப்பாணம், டிசெ.21
மாவட்ட மட்டத்தில் சிறந்த கிராம அலுவலர் விருதுக்காக பெயர், விவரம் தெரிவு செய்யப்பட்டபோதும் விருதுகள் இதுவரை வழங்கப்படவில்லை.
09.07.1995 இல் நவாலி சென்ற் பீற்றர்ஸ் ஆலயத்தில் கடமையின் போது விமானத் தாக்குதலில் உயிரிழந்த கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜா ஞாப கார்த்தமாக 2009 ஆம் ஆண்டு முதல் மாவட்ட மட்டத்தில் விருதுகள் வழங் கிக் கௌரவிக்கப்பட் டன.
இதற்கான அனுமதியை பொது நிர்வாக பொது நிர்வாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சு வழங்கியிருந்தது.
இதற்கமைய முன்னாள் அரச அதிபர் க. கணேஷ், அவரை அடுத்து கடமையைப் பொறுப் பேற்ற முன்னாள் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரது நிர்வாக காலத்தில் தொடர்ந்து மறைந்த கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜாஞாபகார்த்த விருதுகள் வழங்கப் பட்டு வந்தன.
தற்போது கடந்த 2011 - 2012 ஆகி இரண்டு ஆண்களுக்கான சிறந்த கிராம அலுவலர்களின் பெயர்கள் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட போதும் குறித்த விருது வழங் கப்படாத நிலை குறித்து கிராம அலுவலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.
இந்த வருடம் முடிவ டைவதற்கு இன்னும் சில தினங்களே உள்ள நிலை யில் இந்த விருதுகள் வழங்குவதில் தற்போதைய அரச அதிபர் ஏன் காலம் தாழ்த் துகிறார் என்று விருதுக்குத் தெரிவாகிய கிராம அலுவலர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (வ-41)

## மத்திய அமைச்சர் நாராயணசாமியின் மனைவி காலமானார்

புதுடில்லி, டிசெ.21

இந்திய மத்திய அமைச்சர் நாராயணசாமியின் மனைவி கலைச்செல்வி (வயது 55) புதுடில்லியில் நேற்றுக் காலமானார்.

மத்திய அமைச்சர் நாராயணசாமியின் மனைவி கலைச்செல்விக்கு, கடந்த மே மாதம் புதுச்சேரியில் இடம்பெற்ற சாலை விபத்து ஒன்றில் தலையில் அடிபட்டது. அதையடுத்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். அவரது தலையில் தையல்களும் போடப்பட்டிருந்தன.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் கலைச்செல்வியின் தலையில் போடப்பட்ட தையலில் இருந்து இரத்தம் கசிந்தது. அதையடுத்து புதுடில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். மருத்துவமனையில் சேர்ந்த அன்று இரவே அவர் கோமா நிலைக்கு சென்று விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்தநிலையில் தொடர்ந்து சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வந்த கலைச்செல்வி நேற்று அதிகாலை 4 மணிக்கு உயிரிழந்தார்.

புதுடில்லியில் இருந்து விமானம் மூலம் கலைச்செல்வி உடல் நேற்று சென்னைக்கு கொண்டு வரப்பட்டது.

அதேவேளை, மத்திய அமைச்சர் நாராயணசாமியின் மனைவியின் மறைவுக்கு பல்வேறு அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி ஆகியோரும் கலைச் செல்வியின் மறைவுக்கு வருத்தம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கடந்த 18ஆம் திகதியே நாராயணசாமியின் மனைவி கலைச்செல்வி சாவடைந்து விட்டார் என்று வதந்தி பரவியிருந்தது. (ற)

# தனித்தே தேர்தலை சந்திக்கும் அ.தி.மு.க.

## பொதுக் குழுக் கூட்டத்தில் ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை, டிசெ.21

"அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து அனைத்துத் தொகுதிகளிலும் அ.தி.மு.க. போட்டியிடும். 40 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெறுவதே எமது இலக்கு" - என்று அறிவித்துள்ளார் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழக முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா.

அ.தி.மு.க.வின் செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் அவைத் தலைவர் மதுசூதனன் தலைமையில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதாமுன்னிலையில்தொடங்கி நடைபெற்று வருகிறது. அந்தக் கூட்டத்தில் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் பங்கேற்றுள்ளனர். அங்கு உரையாற்றும் போதே ஜெயலலிதா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"நாடாளுமன்ற தேர்தலில் தனித்து போட்டியிட்டு 40 தொகுதிகளையும் கைப்பற்ற வேண்டும். அதுவே அ.தி.மு.க வின் இலக்கு. செங்கோட்டையை அ.தி.மு.க. அடைவதை யாராலும் தடுக்க முடியாது. 40 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றால்தான் நாட்டை வழி நடத்தும் சக்தியாக அ.தி.மு.க. திகழமுடியும். 2014 ஆம் ஆண்டு அ.தி.மு.க. பொதுக் குழு கூட்டம் நடைபெறும்போது, நாட்டை வழி நடத்தும் சக்தியாக அது திகழ வேண்டும். தமிழகம் தப்பிப் பிழைக்க வேண்டுமென்றால் மத்திய ஆட்சியில் இருந்து காங்கிரஸ் ஆட்சி அகற்றப்பட வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார்.

பொதுக்குழுக் கூட்டத்தில் 16 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

அவற்றில், இலங்கைக் கடற்படைக்கு இந்தியா பயிற்சியளிப்பதை அ.தி.மு.க. கடுமையாக எதிர்த்தல், தமிழகத்திலிருந்து பிரதமரை தேர்ந்தெடுக்கும் சூழலை உருவாக்குதல், இந்தியாவை வழிநடத் திச் செல்லும் சூழலை உருவாக்க அ.தி.மு.க. பாடுபடுதல் என்பன போன்றவையும் அடங்கும். (ற)

## டில்லியில் ஆட்சியமைக்க ஆம் ஆத்மிக்கு அவகாசம்



புதுடில்லி, டிசெ.21

புதுடில்லியில் ஆட்சி அமைப்பதற்கு ஆம் ஆத்மி கட்சிக்கு இந்திய மத்திய அரசு சில நாள்கள் அவகாசம் வழங்கியுள்ளது என்று மத்திய அமைச்சர் சுஷி ல்குமார் ஷிண்டே தெரிவித்துள்ளார்.

புதுடில்லி மாநிலத்துக்கு நடந்த சட்டசபைத் தேர்தலில் யாருக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதையடுத்து பா.ஜ.க. ஆட்சி அமைக்க உரிமை கோர மாட்டோம் என்று அறிவித்தது. அதே வேளை பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகள் தங்களது 18 நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் ஆட்சி அமைக்கத் தயார் என்று ஆம் ஆத்மி கட்சி அறிவித்தது. காங்கிரஸ் கட்சி ஆம் ஆத்மி கட்சியின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு ஆதரவு அளிக்க முன்வந்தது. ஆட்சி அமைப்பது குறித்து முடிவெடுக்க மக்களிடம் கருத்துக் கேட்கப்பட்டுள்ளது. மக்களின் கருத்தை அடுத்தே கூட்டணி குறித்து முடிவு எடுக்கப்படும் என்று அந்தக் கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார்.

இந்தநிலையில், புதுடில்லியில் ஆட்சி அமைப்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே, "புதுடில்லியில் ஆட்சி அமைக்க ஆம் ஆத்மி கட்சி எவ்வளவு நாள்கள் அவகாசம் கேட்கிறது என்று ஆளுநரிடம் மத்திய அரசு கேட்டறிந்தது. அதையடுத்து மத்திய அரசு ஆம்ஆத்மிகட்சிஆட்சிஅமைக்க சில நாள்கள் அவகாசம் வழங்கியுள்ளது" என்று தெரிவித்துள்ளார்

(ற)

## ஒருங்கிணைந்த ஆந்திராவுக்காக இறுதிவரை போராடுவேன் *-கிரண்குமார் ரெட்டி*

பாட்னா, டிசெ.21

ஒருங்கிணைந்த ஆந்திராவுக்காக கடைசிவரை போராடுவேன் என்று தெரிவித்துள்ளார் ஆந்திர மாநில முதல்வர் கிரண்குமார் ரெட்டி.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கிரண்குமார் ரெட்டி,

"கடைசிப் பந்து இன்னமும் வீசப்படவில்லை. ஒரு வீரனாக நின்று ஆந்திராவை பிரிப்பதைத் தடுத்து நிறுத்தும் வரை போராடுவேன். ஆந்திராவை பிரிக்க நினைக்கும் மத்திய அரசுக்கும், காங்கிரஸ் கட்சிக் கும் எதிராக வலிமையாக போராடி, ஆந்திராவைப் பிரிக்கும் முயற்சியை நிறுத்தும் வரை எமது போராட்டம் நீடிக்கும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**பொதுப்பட்டமளிப்பு வைபவம்**
**ஒளிப்பதிவு செய்தல், புகைப்படம் எடுத்தல் ஆகியவற்றுக்கான விலைகோரல்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பொது பட்டமளிப்பு வைபவம் **10.01.2014 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவ நிகழ்வுகளை ஒளிப்பதிவு செய்ய வேண்டி இருப்பதுடன் அண்ணளவாக 3000 புகைப்படங்கள்(4R அளவுள்ள வர்ணப்புகைப்படம்) மற்றும் 1400 DVD பிரதிகள் வரையில் எடுக்க வேண்டியுள்ளது.

அத்துடன் பட்டமளிப்பு வைபவத்தினை மண்டபத்தினுள் சென்று நேரடியாக பார்க்க முடியாதவர்களின் நலன் கருதி அந்த வைபவத்தின் நிகழ்வுகளை வெளியில் நின்று பார்வையிடுவதற்காக 15'X15' அளவுள்ள கொட் டகைகள் இரண்டினை அமைத்து அதில் அகலத்திரை மூலமாக ஒளிபரப்புவதற்கான ஒழுங்கினையும் மேற் கொள்ள வேண்டியுள்ளது. எடுக்கப்படும் புகைப்படங்கள் விநியோகிப்பதற்கு இலகுவாக இலக்கமிடப்பட்டிருக்க வேண்டும். மாணவர்களுக்கான புகைப்படங்கள், DVD இக்கள் யாவும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தங்களாலேயே வழங்கப்பட வேண்டும்.

எனவே இவற்றுக்குரிய விலைக்கூற்றினை **26.12.2013 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தகுதி வாய்ந்த வீடியோ படப்பிடிப்பாளர்கள், புகைப்படப்பிடிப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பப் படிவங்களை **உதவிப் பதிவாளர் / கல்விக் கிளையில்** பெற்று விண்ணப்பிக்கவும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பட்டமளிப்பு வைபவத்தினை புகைப்படம் பிடித்தல், ஒளிப்பதிவு செய்தல் என தெளிவாக குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

பதிவாளர் - யாழ்.பல்கலைக்கழகம். (சி/10383)(4.6.3)

**விற்பனைக்கு**
DAIHATSU (TOYOTA) ROCKY, 1987, BRAND NEW,டீசல், 4வீல்,JAPAN, 32 - XXXX Jeep அத்துடன் CD 200, TV-8XXX மோட்டார் சைக்கிளும்.
தொடர்பு:
071 435 8578, சுண்டுக்குளி

**விற்பனைக்கு**
இறைச்சிக்கோழி 1½ மாதம் நிரம்பிய நில்பாம் பேட்டுக் குஞ்சு விற்பனைக்குண்டு.
தொடர்பு : K.S. சிவகுமாரன் பண்ணை, கல்வியங்காடு.
077 684 5519 (42800) (7.6)

**பதவி வெற்றிடம்**
பிரபல கல்லூரியின் புதிய வவுனியா கிளைக்கு கீழ்க் காணும் பதவிகளுக்கு தகுதியானவர்களை எதிர்பார்க்கின்றோம்.
1. Receptionist (Female)
2. Course Counselor
3. Accounts Clerk
4. Instructors Computing
5. Office Boy/Girl
ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 24.12.2013 செவ்வாய்க்கிழமை அன்று மு.ப 10.00 முதல் ந.ப. 12.00 மணி வரை நேரடியாக வரவும்.
BRITISH COLLEGE OF EDUCATION
103, Mannar Road,
Vavuniya.
Tel: 077 053 8523 (43555) (7.6)

**வீடும் வளவும் விற்பனைக்கு**
இராசபாத வீதியில் முன்பு கிறேசர் இருந்த இடத்திற்கு அண்மையில் நல்ல சூழலில் வருமானமுள்ள 4¼ பரப்பு கல்வீடும் வளவும் விற்பனைக்குண்டு. (42793) (7.6.3)
தொடர்பு : 077 123 7063, 021 491 1206

**வீடு விற்பனைக்கு**
உடுப்பிட்டி இமையாணன் வதிரி றோட்டில் 2½ பரப்பு காணியில் புதிதாக கட்டப்பட்ட 4 அறைகள், குசினி, இணைந்த குளியல் அறை மற்றும் சகல வசதிகளுடன் பாதுகாப்பான சூழலில் அமைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 874 1192 (43004) (7.6.3)

**காணி விற்பனைக்கு**
A-9 வீதி எழுதுமட்டுவாள் எல்லை போர்டுக்கு முன்னால் உள்ள காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 875 9401 (42779) (7.6.3)

**காணி விற்பனைக்கு**
பருத்தித்துறை பிரதான வீதி, முதலாம் கட்டைக்கு அருகில் 3பரப்புக் காணி கிணறுடன் விற்பனைக் குண்டு. வியாபார, அலுவலகப் பாவனைக்குப் பொருத்தமானது.
தொடர்பு:
077 791 0500

**Softlogic உடன் பண்டிகை கால குதூகலத்தில் இணையுங்கள்.**




பண்டிகைக் காலத்தில் எங்கும் இல்லாத சலுகை யாழ்ப்பாணம் **Softlogic** காட்சியறையில் மாத்திரம்

☞ மொத்த விலைக்கோ, வட்டி இல்லாத தவணைக் கொடுப்பனவுக்கோ கொள்வனவு செய்யும் ஒரு TVஇக்கு Panasonic DVD Player + Panasonic Rice Cooker அல்லது ஒரு Toaster இலவசம்.

புதிய Panasonic 32" LED TVஒன்றை 5,999/= மாத்திரம் முற்பணமாக செலுத்தி வட்டியில்லாத 12 மாத கால தவணைக் கொடுப்பனவு முறையில் பெற்றுக்கொள்ளுங்கள்.
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**2013 டிசெம்பர் 31 வரை மட்டுமே**

உடனே விரையுங்கள்:
இல. 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
077 791 4272, 077 739 7734
(C/10376)(10.14)

# ஐ.நா. அலுவலகம் மீது அதிரடியாகத் தாக்குதல்

## நுவர் இன தீவிரவாதிகள் அட்டகாசம்: தென்சூடானில் பெரும் பதற்றம்

**ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான தெற்கு சூடான் தலை நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென கலகம் ஏற்பட்டது. முன்னாள் துணை ஜனாதிபதி ரிக் மச்சரின் ஆதரவு இராணுவ வீரர்கள் நாடு முழுவதும் கலவரத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதி சால்வா கீருக்கு எதிராக நடந்த இந்த கலகம் 2 நாள்களில் முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த இராணுவப் புரட்சியின் போது 400 முதல் 500 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்று ஐ.நா. அறிவித்துள்ளது. இராணுவப் புரட்சியின் விளைவாக சுமார் 20 ஆயிரம் பேர் ஜூபாவில் உள்ள ஐ.நா. வளாகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர். முன்னாள் துணை ஜனாதிபதி ரிக் மச்சரின் ஆதரவு கலகக்காரர்கள் தலைநகர் ஜூபாவிலிருந்து 200 கி.மீ தொலை வில் உள்ள ஜாங்லீ மாநிலத்தின் தலைநகரான போர் நகரத்தைக் கைப்பற்றியுள்ளனர்.**

அபோக்கோ, டிசெ.21
தெற்கு சூடானில் உள்ள ஜொங்கோலி மாநிலத்தின் அபோக்கோ நகரில் உள்ள ஐ.நா. அலுவலகத்தின் மீது சுமார் 2 ஆயிரம் நுவர் இனத் தீவிரவாதிகள் நேற்று அதிரடித் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் ஐ.நா. அமைதிப்படையினர் மூவரும், சூடான் இராணுவத்தினர் பலரும் உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பயங்கர ஆயுதங்களுடன் ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிட்ட அவர்கள் உள்ளே இருந்த சர்வதேச அமைதிப்படையினரை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதல் நடந்தபோது இந்தியாவைச் சேர்ந்த 43 அமைதிப் படையினர் அலுவலகத்தில் கடமையில் இருந்தனர். ஜூபாவில் உள்ள ஐ.நா. வளாகத்தில் சுமார் 20 ஆயிரம் பேர் தஞ்சம் அடைந்துள்ளமை போன்று போக்கோ நகரின் ஐ.நா. அலுவலகத்திலும் தீவிரவாதிகளுக்கு பயந்து சுமார் 50க்கும் மேற்பட்டவர்கள் தஞ்சம் அடைந்திருந்தனர்.

அவர்களைக் கொல்லும் நோக்கத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. தாக்குதலில் படுகாயமடைந்த பலர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு ஐ.நா தலைமை அலுவலகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (ற)

## வளரும் நாடுகளின் வளர்ச்சி குறையும்

நியூயோர்க், டிசெ.21
ஆசிய-பசுபிக் பிரதேசங்களில் வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 2014ஆம் ஆண்டில் மந்தமாகவே இருக்கும் என்று தெரிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

இதுகுறித்து ஐ.நாவின் ஆசிய-பசுபிக் சமூகப் பொருளாதாரக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: "உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சினைகளால் எதிர்வரும் 2014ஆம் ஆண்டு ஆசிய-பசிபிக் பிரதேச வளரும் நாடுகளின் பொருளாதார நிலை மந்தமாகவே இருக்கும்." என்று கூறப்பட்டுள்ளது. (ற)

## சூட்டில் மேயர் சாவு

மணிலா, டிசெ.21
பிலிப்பைன்ஸ்தலைநகர்மணிலா விமான நிலையத்தில் மர்ம மனிதன் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் தெற்கு பிலிப்பைன்ஸ்மேயர்உகோல்தலும்பா மற்றும் அவரது மனைவி ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

"விமான நிலையத்தின் வாசலில் மேயர் உகோல் தலும் பாவும் அவரது மனைவியும் வந்து கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவன் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினான். படுகாயமடைந்த மேயர்மற்றும்அவரது மனைவி ஆகியோர் அருகில்உள்ளமருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டுசெல்லப் படும்வழியில் உயிரிழந்தனர்" என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற)

## பாகிஸ்தானில் நிலநடுக்கம்

இஸ்லாமாபாத், டிசெ.21
பாகிஸ்தானின் தெற்குப் பகுதியான சிந்த்தில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவுகோலில் 5.7 ஆகப் பதிவாகியுள்ள அந்த நிலநடுத்தால் உயிரிழப்போ, பொருள் சேதமோ ஏற்பட்டதாக இதுவரை எந்தத் தகவலும் இல்லை.

நிலநடுக்கத்தை உணர்ந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறிப் பாதுகாப்பாகத் திறந்த வெளிகளில் தங்கவைக்கப் பட்டனர். (ற)

## தென்சூடான் விரைந்தது பிரிட்டனின் விமானம்

### தமது நாட்டுப் பிரஜைகளை மீட்பதற்கு நடவடிக்கை

லண்டன், டிசெ.21
தென் சூடானில் ஏற்பட்டிருக்கும், அரசியல் நெருக்கடி நிலையை அடுத்து, அங்குள்ள தமது பிரஜைகளின் பாதுகாப்புக் கருதி விமானமொன்றை அங்கு அனுப்பியுள்ளது பிரிட் டன்.

தென்சூடானில் அரசியல் நெருக்கடி நிலை உக்கிரமடைந்துவரும் நிலையில் அங்குள்ள தனது பிரஜைகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவரும் நோக்கி லேயே அந்த விமானத்தை அனுப்பியுள்ளது பிரிட்டன்.

இதுவரை 150 பிரிட்டன் பிரஜைகள் தம்மைக் காப் பாற்றுமாறு தமது தூதரகத் துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் தென் சூடானில் உள்ள பிரிட்டன் தூதரகத்தின் சில பணியாளர்களும் நாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தென்சூடான் அரசைக் கவிழ்க்க சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று வெளியான தகவல்களை அடுத்து நெருக்கடி நிலைமை வலுப்பெற்றுள்ளது. தென் சூடானில் தொடரும் வன்முறைகளில் நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளதுடன் சுமார் 20 ஆயிரம் பேர் அங்குள்ளஐ.நா. அலுவலகத்தில் அகதிகளாக தஞ்சம் கோரியுள்ளனர்.

தென்சூடான் ஜனாதிபதி சல்வா கிர்ருக்கும் பதவி விலக்கப்பட்ட பிரதி ஜனாதிபதிக்கும் இடையிலான அதிகாரப் போட்டியே அங்குவன்முறைகளை தோற்றுவித்துள்ளது. (ற)

## ஒருநாள் வருமானம் 230 கோடி ரூபா

*நியூயோர்க், டிசெ.21*
*பிரபல அமெரிக்க முதலீட்டாளரும், நட்சத்திர விடுதி உரிமையாளருமான வாரன் பபே, தினமும் 230 கோடி ரூபா சம்பாதிக்கின் றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.*

*சிங்கப்பூரில் உள்ள 'வெல்த் எக்ஸ்' என்ற நிறுவனம் நடத்திய ஆய்விலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. அதுகுறித்து அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலில்,*

*"இந்த ஆண்டின் மிக அதிக வருமானம் உள்ள கோடீஸ் வரர்கள் பட்டியலில் வாரன் இரண்டாவது இடம் பெற்றுள்ளார். முதலாவது இடத்தில் மைக்ரோசொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ் உள்ளார். வாரன் பபேயின் நடப்பு ஆண்டு வருமானம் 80 ஆயிரம் கோடி ரூபாவாக அதிகரித்து மொத்த சொத்துகளின் மதிப்பு 3.70 லட்சம் கோடி ரூபாவாக உயர உள்ளது" என்று கூறப்படுகின்றது. (ற)*

## 'லைக்' இருந்தால்தான் திருணம் செய்யலாம்

லண்டன், டிசெ.21
ஏமனில் தனக்கு வரப்போகும் மருமகனிடம் வித்தியாசமான ஒன்றை வரதட்சணையாகக் கேட்டுள்ளார் ஒருவர்.

ஏமனில் உள்ள தாய்ஸ் நகரைச் சேர்ந்தவர் சலீம் ஆயஷ். இவர் ஒரு கவிஞர். அவர் தனக்கு வரப்போகும் மருமகனிடம் வித்தியாசமான ஒன்றை வரதட்சணையாக அளித்தால்தான் தனது மகளைத் திருமணம் செய்து வைப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

தனது மகளைத் திருமணம் செய்ய வேண்டும் என்றால் தனது பேஸ்புக் பக்கத்திற்கு 10 இலட்சம் லைக்ஸ் (like) பெற வைக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும்.

தற்போது சலீமின் பேஸ்புக் பக்கத்தை 30 ஆயிரம் பேர் 'லைக்' செய்துள்ளனர். இந்த நிலையில் அந்த வாலிபர் சலீமின் பக்கத்திற்கு 10 இலட்சம் 'லைக்ஸ்' பெற வைக்க ஒரு மாதம் அல்லது ஒரு வருடமோ 2 வருடமோ கூட எடுத்துக் கொள்ளலாம் என்று கால அவகாசம் வழங்கப்பட் டுள்ளது. ஆனால் 10 இலட்சம் லைக்ஸ் பெறாமல் அவரால் சலீமின் மகளை திருமணம் செய்ய முடியாது. (ற)



பிரிட்டனின் தலைநகர் லண்டனில் உள்ள திரையரங்கு ஒன்றின் மேற்கூரை திடீரென இடிந்து வீழ்ந்ததில் 88 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் மீட்பு குழுவினர் சென்று காயமடைந்தவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்தனர். சம்பவம் இடம் பெற்ற வேளையில் அந்த திரையரங்கில் 700க்கும் மேற்பட்டவர்கள் இருந்ததாக கூறப்படுகிறது. எனினும் அது குறித்த உறுதியான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ற)

## அமெரிக்க கப்பலை அழித்தது சீனா

பிஜிங், டிசெ.21
அமெரிக்காவின் போர்க் கப்பல் ஒன்றைத் தாக்கி அழித்ததாக சீனா தற்போது ஒப்புக் கொண்டுள்ளது. கடந்த 5ஆம் திகதி தமது கப்பல் ஒன்று சீனாவினால் நிர்மூலமாக்கப்பட்டது என்று அமெரிக்கா குற்றம் சுமத்தியிருந்தது. எனினும் அது தொடர்பில் தொடர்ந்து மௌனம் காத்து வந்த சீனா, தற்போது தங்களின் கப்பல் ஒன்று அமெரிக்கக் கப்பலைத் தாக்கி அழித்தது என்று ஒப்புகொண்டுள்ளது.

சீனாவின் கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்தமையாலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக சீனாவின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மரண அறிவித்தல்



### குலசிங்கம் சுரேஸ்குமார்

(உரிமையாளர் எல்.என்.எஸ் வாடகைப்பொருள் விற்பனை நிலையம், பெற்ரா, மன்னார்.
எல்.என்.எஸ் கட்டடத் தொகுதி பள்ளிமுனை வீதி, உப்புக்குளம், மன்னார்)

மன்னார் உப்புக்குளத்தினைப் பிறப்பிடமாகவும், பெற்ராவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் குலசிங்கம் சுரேஸ்குமார் கடந்த 20.10.2013 சவுதிஅரேபி யாவில் அகால மரணமானார்.

அன்னார் குலசிங்கம் (உரிமையாளர்-ரதுஷன் கெஸ்ற் இன், புதிய மூர் வீதி, மன்னார்)-ஈஸ்வரி (தேவி-முன்னாள் கிளை முகாமையாளர் மன்/ப.நோ.கூ.சங்கம்) தம்பதியரின் அன்பு மகனும், லுக்ஷிகா (பிரான்ஸ்), நிஷாந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரனும், ராஜ் குமார்(பிரான்ஸ்), திருச்செல்வம்(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், ரதுஷன் (பிரான்ஸ்), ரிஷிகேசன் (சுரேஸ்-பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், சிவானந்த மூர்த்தி-வசந்தா(பிரான்ஸ்), காலஞ்சென்ற தியாகராசா-முத்துப்பிள்ளை, ராஜன் (பொதுமுகாமையாளர் மன்/ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் மருமகனும், ஜெகநாதன்-பத்மலோஜினி(பிரான்ஸ்), தெய்வேந்திரன்-புஷ்பராணி(பிரான்ஸ்), நவராசா-பானுமதி(இலங்கை) ஆசியோரின் பெறாமகனும், சதீஸ்(பிரான்ஸ்), பிறேம் (பிரான்ஸ்), கண்ணா(பிரான்ஸ்), மயூரன்(பிரான்ஸ்), குமரன்(பிரான்ஸ்), செந்தூரன் (பிரான்ஸ்), எலிசா (பிரான்ஸ்) காலஞ்சென்ற சூரியபிரகாஷ், பிரதீப் (மலேசியா), கஸ்தூரி(யூனியன் [illegible]), திவ்யா(சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), பிரியதர்சினி (தென்கிழக்கு பல்கலைக் கழகம்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், ஜெயா (பிரான்ஸ்), யுவனா (பிரான்ஸ்), மெரியம்(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் மன்னார் பொது சேமக்காலையில் தகனம் செய்யப்படும்.

(சி/10387)(3.6.4) தகவல்: குடும்பத்தினர்.

# மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.21

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த இடங்களுக்கு மேலதிகமாக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு மற்றும் கட்டமைப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை ஈஞ்சை வைரவர் பிரதேசத்திலும்-

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரை மல்வில், முகாவில் பிரதேசங்களிலும் மின் விநி யோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம்: அரசு கவனம் செலுத்தவேண்டும்

## யாழ்.போதனா வைத்தியசாலை நிலைமை தொடர்பில் நாடாளுமன்றில் தமிழ்க் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

"யாழ். போதனா வைத்திய சாலையின் சுகாதாரத் தொண்டர்கள் முன்னெடுக் கும் போராட்டம் தொடர்பில் அரசு கவனம் செலுத்தவேண்டும். ஏழு நாள்களுக்கும் மேலாக அவர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கடந்த காலங்களில் அவர்கள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தனர். எனவே, அவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும்."

இவ்வாறு நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பா.அரியநேத்திரன்.



போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு இந்திய வீடமைப்புத் திட்டம் போதுமானதல்ல. எனவே, வடக்கு, கிழக்கில் பொது வீடமைப்புத் திட்டங்கள் உருவாக் கப்படவேண்டும் என்றும் அவர் சபையில் கோரிக்கை விடுத்தார்

மலையக மக்களின் நிலவுரிமையைப் பறிப்பதற்காகவே மாடி வீடமைப்புத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நகர அபிவிருத்தித் திட்டத்தினூடாகத் தலைநகரில் வீட்டுத் திட்டங்கள் உருவாக் கப்பட்டு வந்தாலும் 30 வருடகால ஆயுதப் போராட்டத்தைச் சந்தித்த வடக்கு, கிழக்கு பகுதிகளில் பொது வீட்டுத்திட்டங்கள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. இந்திய வீடமைப்புத் திட்டமும் போது மானதல்ல. மீள்குடியேற்ற வீடமைப்புத் திட்டங் களுக்குப் புறம்பாக வீடுகள் உருவாக் கப்பட வேண்டும். பொதுவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண் டும். ஆனால் எமது மக்கள் இன்னமும் பொது வசதிகள் கூட அற்றவர்களா கவே வாழ்கின்றனர்.

அதேவேளை, மட்டக்களப்பில் யானைகள் பிரச்சினை உக்கிரம டைந்துள்ளது. பட்டிப்பளை, வெல்லாவெளி, வவுணதீவு, செங்கலடிபோன்ற பகுதிகளில் பல வீடுகளைத் தாக்கி யானைகள் சேதப்படுத்தியுள் ளன. உயிர் அச்சுறுத்தல் பிரச் சினைக்குப் புறம்பாக இந்தப் பிரச்சினையும் பெரும் நெருக்க டியாக இருக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை. வீடுகளை இழந்த மக்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக் கின்றேன்.

குறிப்பாக, 2009 ஆம் ஆண்டு மே 19ஆம் திகதிக்குப் பின்னர் முன் வைக் கப்பட்ட பட்ஜெட்களில் போரி னால் பாதிக்கப்பட்ட மக்களுக் காக விசேட முன் மொழிவுகள் எதுவும் இல்லை. எனவே, அடுத்த வருடத்திலாவது விசேட முன் மொழிவுகள் இடம்பெற வேண்டும். அம் பாறை மாவட்டத் தில் எமது முஸ்லிம் சகோதரர்களின் சுனாமி வீட்டுத்திட்டம் இன்னமும் கையளிக்கப் படாமல் உள்ளது. அவர்களுக்கு சகல வசதிகளுடனும் இதை வழங்குமாறு கேட்டுக்கொள்கின் றேன்.

அத்துடன், ஊடகவியலாளர்க ளுக்கும் மானியம் அல்லது கடன் அடிப்படை யில் நிரந்தர வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மலையக மக்கள் நிலவுரிமை இல்லாமலேயே வாழ்கின்றனர். இதைத் தொடர்ந்தும் அதே நிலையில் வைத்திருக்கவா மாடி வீட்டுத்திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளது? தனி வீட்டுத் திட்டம்தான் மலையக மக்களுக்கு சிறந்த தீர்வாகும். 50 ஆயிரம் அல்ல 25 ஆயிரம் வீடுகளை வழங்கினால்கூட அவற்றைத் தனித் தனியாக வழங்குங்கள் - என்றார்.

# கள்ளன் தப்பினான் சைக்கிள் மீண்டது

வலி. வடக்கு, டிசெ. 21

சைக்கிளைத் திருடியவரைப் பிடிக்க எடுத்த முயற்சி இறுதி நிமிடத்தில் திருடனின் சாதுரியத்தினால் கைநழுவியது. எனினும் திருடன் களவெடுத்த சைக் கிளைக் கைவிட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளான்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை மாலை உடுவில் நாகம்மாள் கோயிலடியில் இடம் பெற்றது.

சுன்னாகம் காங்கே சன்துறை வீதியில் அமைந்துள்ள வாகனம் செலுத்தப்பயிற்று விக்கும் இடத்துக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெண்கள் பயன்படுத்தும் சைக்கிள் பூட்டை உடைத்து சைக்கிளை ஒருவர் அவசரமாக எடுத்துக்கொண்டு செல் வதை அயலில் உள்ள இளைஞர் ஒருவர் கண்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் குறிப்பிட்ட நபரை தொடர்ந்து சென்று பிடிக்க முற்பட்ட வேளையில் அவன் சைக்கிளை வீதியில் போட்டு விட்டு அயலில் உள்ள வெற்றுக்காணியின் ஊடாக தப்பிச் சென்றுள்ளான்.


அயலில் உள்ளவர்களின் உதவியுடன் திருடனை தேடிய போதிலும் அவனைப் பிடிக்க அவர்களால் முடியவில்லை. (ந-86)


யாழ் மண்ணில்

A/L இன் பின்னர் சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

BTEC HND in...

- Computing & Systems Development
- Quantity Surveying
- Civil Engineering
- Business Management
- Biomedical Science
- Law
- Pshycology



Leading to BSc (Hons) / LLB (Hons) / BA (Hons) / BEng (Hons)

மேலதிக விபரங்களுக்கு

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
0777 102 131 / 077 311 4105
Email : info@bcas.lk

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar

www.bcas.lk








**காணி விற்பனைக்கு**

நெல்லியடி பெற்றோல் ஷெட் வீதியில் 2 பரப்பு காணியும், வீட்டுடன் கூடிய $1\frac{1}{2}$ பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. (42863) (7.6)

தொடர்பு : 077 711 3097

**வீடு விற்பனைக்கு**

உரும்பிராய் சேமப்புலம் வீதியில் $1\frac{3}{4}$ பரப்பு காணியில் அமைந்துள்ள வீடு உடன் விற்பனைக்குண்டு, விலை பேசித் தீர்மானிக்கலாம். (42853) (7.6)

தொடர்பு : 077 706 1181, 077 914 6033

**மணமகள் தேவை**

- 1983இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும், 34 பாவமுடைய சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 1985இல் பிறந்த 10இல் சூரியனும்,செவ்வாயும் 58 பாவமுடைய Bsc, MPEL முடித்து அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 1982இல் பிறந்த 7இல் செவ்வாய், $35\frac{1}{2}$ பாவமுடைய, MSc அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 1978இல் பிறந்த 12இல் செவ்வாய் $25\frac{1}{2}$ பாவமுடைய வங்கியில் பணியுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 1978இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 30 பாவமுடைய MSc மணமகனுக்கு அரச நிறுவனத்தில் பணிபுரிகின்ற பட்டதாரி மணமகள் தேவை.
- 1981இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 5 பாவமுடைய லண்டனில் எக்கவுண்டனாக பணிபுரியும் மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.

நாலக் கண்ணன் திருமண சேவை
இல. 435/3, கோவில் வீதி, நல்லூர்.
077 607 0862 (42797) (7.6)

**தேவை** நான்கு பேர் கொண்ட உத்தியோகம் பார்க்கும் குடும்பத்திற்கு பலாலி றோட், திருநெல்வேலி, கந்தர்மடம், நல்லூர், பிறவுண் வீதி ஆகிய பகுதிகளில் வசதியான வீடு வாடகைக்கு தேவை. (42865)(7.6)

தொடர்பு : 077 508 4646, 077 945 2085

**விற்பனைக்கு**

JOHNDEE ரக்டர் பெட்டியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 480 1734 (42794) (7.6)

**Personal/Group Classes (A/L)**

கலை, வர்த்தக பாடங்கள்
T & E Medium
யாழ். தேசிய பாடசாலை ஆசிரியர்கள்
"A" சித்திக்கு கற்பிக்கப்படும். (42856) (7.6)
தொடர்பு: 077 878 0814, 071 814 7923

**தேவை**

யாழ். நகரில் உள்ள
ஆங்கில மருந் தகத்திற்கு மருந்தாளர் (Pharmacist) தேவை.
சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல : 4481
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (42856) (7.6)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

**பிள்ளையார் 'இன்' னின் நத்தார் புதுவருட விசேட விலைக்கழிவு!**

5kg லாவ் காஸ் சிலிண்டர்
3400/= மட்டும்
காஸ் இலவசம்
தொடர்பு: 077 960 0998
பிள்ளையார் இன்
31, மானிப்பாய் றோட்,யாழ்ப்பாணம். (42851)(7.6)

**காணவில்லை**

**கணபதிப்பிள்ளை தர்மலிங்கம்**




நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட V.M.R&Co(கொழும்பு) புகையிலைக் கடை முகாமையாளருமான கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் கடந்த 04.09.2013 மாலை முதல் காணவில்லை. தயவுசெய்து இவரைக் காண்பவர்கள் மேற்படி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (42860) (2.6)

075 042 2291/ 011 236 2883

# மரக்கறிகளின் விலை வீழ்ச்சியால் வவுனியாவில் விவசாயிகள் பாதிப்பு

வவுனியாவில் மரக்கறி விலைகள் திடீரென வீழ்ச்சியடைந்ததால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விரத காலங்களில் மரக்கறிகள் அதிக விலையில் விற்கப்பட்டதால் இவற்றைச் செய்கை பண்ணுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டினர். தற்போது பெருமளவு மரக்கறிகள் விற்பனையாகாது சந்தைகளில் தேங்கிக் கிடப்பதால் அவற்றின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதேவேளை தம்புள்ளபகுதியில் இருந்தும் மரக்கறி வகைகள் இங்கு கொண்டு வரப்படுவதால் விவசாயிகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



மரக்கறிவகைகளின் விலையில் தளம்பல் நிலை காணப் படுவதால் உற்பத்தியாளர்கள் தயக்கத்துடன் அவற்றைச் சந்தைக்குக் கொண்டு வருகின்றனர். வியாபாரிகள் தம்மிடமிருந்து குறைந்த அளவான மரக்கறி வகைகளையே கொள்வனவு செய்வதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தம்புள்ள பகுதியில் இருந்து வரும் மரக்கறி வகைகள் குறைந்த விலைகளில் கொள்வனவு செய்யப்படுவதால் சில சந்தர்ப்பங்களில் தமது மரக்கறிகளை வியாபாரிகள் கொள்வனவு செய்யாது திருப்பிவிடுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (க-402)

# மல்லாவிப் பிரதேசத்தில் எரிபொருள் தட்டுப்பாடு



துணுக்காய், டிசெ.21

மல்லாவியில் இயங்கி வரும் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள்களை விநியோகம் செய்வதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபன வாகனங்கள் வருவதில் ஏற்பட்ட தாமதத்தால் இங்கு எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

மல்லாவி நகர்ப் பகுதியில் துணுக்காய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரி பொருள் நிரப்புநிலையமொன்று இயங்கி வருகின்றது. இங்கு நேற்றுமுன்தினம் 19 ஆம் திகதி முற்பகல் தொடக்கம் எரிபொருள் விநியோகம் நிறுத் தப்பட்டதால் பயனாளிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மல்லாவிப் பிரதேசத்தின் பல்வேறு இடங்களையும் சேர்ந்த வாகன உரிமையாளர்கள் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்துபவர்கள் போக்குவரத்துச் சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். (க-415)

“ ” மல்லாவி நகர்ப் பகுதியில் துணுக்காய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையமொன்று இயங்கி வருகின்றது.

## வரவு-செலவு திட்டம் நிறைவேறியது

வவுனியா, டிசெ.21

வவுனியா தமிழ் தெற்கு பிரதேச சபை 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

நேற்றுமுன்தினம் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தலைவர் க.சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேறியது.

இந்தக் கூட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான அபிவிருத்தி குறித்து உறுப்பினர்கள் கலந்துரையாடினர்.

மக்களின் வேண்டுகோளையடுத்து வீதி அபிவிருத்தி உட்பட பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதெனவும் இந்தக் கூட்டத்தில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. (க-402)

# உல்லாசப் பயணிகளை கவரும் குடியிருப்பு பூங்கா



வவுனியா, டிசெ.21

வவுனியா குடியிருப்பு பூங்காவுக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

வவுனியாவிலுள்ள குடியிருப்பு பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள பூங்காவுக்கு சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை தினமும் வருகை தருகின்றனர். குறிப்பாக உல்லாசப் பயணிகளை இந்தப் பூங்கா வெகுவாகக் கவர்ந்துள்ளது.

சிறுவர் சறுக்கி விளையாடுவதற்கான உபகரணம், ஊஞ்சல், குரங்கு, யானை ஆகியவற்றின் உருவச் சிலைகள், அழகு தரும் மரங்கள் என்பன இங்கு காணப்படுகின்றன.

இங்கு வருபவர்கள் அமர்வதற்கான இருக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன. பூங்காவுக்கு அருகில் குளமொன்று அமைந்துள்ளதுடன் காற்றோட்டம் நிறைந்த வெளிகளும் இங்குள்ளன. இவை உல்லாசப் பயணிகளைக் கவர்கின்றன.

மேலும் இந்தப் பூங்கா உரிய வகையில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது. இங்கு வருபவர்களிடமிருந்து சிறு கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றது. இதன் மூலம் கிடைக்கும் வருமானம் பூங்காவின் பராமரிப்புக்காகச் செலவிடப்படுகின்றது.

இந்தப் பூங்காவில் குறும்படப் படப்பிடிப் புக்கள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். (க-402)

## குற்றவாளிகள் மூவருக்கு கடூழியச் சிறை

முல்லைத்தீவு, டிசெ.21

முல்லைத்தீவு கருநாட்டுக்கேணிப் பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து உடைமைகளுக்குச் சேதம் விளைவித்த மூவருக்கு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன் றம் விதித்துள்ளது.

கருநாட்டுக்கேணிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த பெறுமதியான பொருள்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பாக, முல்லைத்தீவுப் பொலிஸார் இந்த மூவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவர்களுக்கு எதிரான விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கடந்த 17 ஆம் திகதி மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிவான் ம.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கின் விசாரணைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# கசிப்பு, சாராயம் விற்பனை செய்தவர்களுக்கு தண்டம்

கிளிநொச்சி, டிசெ.21

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த மூன்று தினங்களில் கசிப்பு மற்றும் அனுமதியின்றி சாராயம் வைத்திருந்த குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்ட நான்கு பேருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன் றம் 3 லட்சத்து 55 ஆயிரம் ரூபா தண்டமாக விதித்துள்ளது.

கிளிநொச்சி கல்மடு நகர்ப் பகுதியில் சுமார் 47 போத்தல் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்குரிய உபகரணம் மற்றும் 234 போத்தல் கோடா என்பவற்றை கைப்பற்றிய கிளிநொச்சிப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இரண்டு பேரைக் கைது செய்தனர். கடந்த 16 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்கள் 18 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப் பட்டனர். சந்தேக நபர்களில் ஒருவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மற்றைய சந்தேகநபர் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை கிளிநொச்சி கோணாவில் காந்தி கிராமத்தில் 750 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்த ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அத்துடன் பளைப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சீல் சாராயத்தை விற்பனை செய்த ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது. (க-6)

# இரும்பு கடத்தியோர் பொலிஸாரால் கைது

முல்லைத்தீவு, டிசெ.21


அனுமதியில்லாது இரும்பைக் கடத்திச் செல்ல முற்பட்டவர் கள் ஒட்டுசுட்டான் பொலிஸா ரிடம் மாட்டிக் கொண்டனர்.

தென்பகுதியைச் சேர்ந்த இருவர் பெரிய இத்திமடு, தண்டுவான் ஆகிய பகுதிகளிலிருந்து சேகரித்த சுமார் 22 ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்பை அனுமதி பெறாது வாகனமொன்றில் எடுத்துச் சென்றனர். ஆனால் ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இவர்கள் மாட்டிக் கொண்டனர்.

வாகனமும் இரும்பை ஏற்றிச் சென்ற இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டதாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (க-500)

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
07 ★ 02 ★ 1947



மறைவு
16 ★ 12 ★ 2008

அமரர்
நல்லையா தவகுலசீங்கம் (துவம்)

திதி:மார்கழி சதுர்த்தி [21.12.2013]

தாய் தந்தையருக்கு தவப்புதல்வனாக
தரணியிலே அவதரித்த தந்தையே!
மக்களுக்கு மகத்தான சேவை அளித்து
மானிட வாழ்க்கைக்கு பெருமை சேர்த்த வள்ளலே
நல்ல நண்பர்களை தன்னகத்தே கொண்டு
நட்புக்கு இலக்கணமாக விளங்கியவரே!
கடமையே கண்ணாக நினைத்து
கருமம் ஆற்றிய தர்ம சீலரே!
உங்கள் சிரித்த முகத்தைப்பார்த்து
உள்ளம் உருகி கலங்குகின்றோம்

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.”

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்.

“மதுரை”
நீதி மன்ற வீதி, மல்லாகம். (42775)(3.6.4) குடும்பத்தினர்



தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு காத்தான்குடி நகரசபை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும் பொலிஸார் இணைந்து நடத்திய டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நடைபெற்றன. இந்த விழிப்புணர்வு நடவடிக்கையில் காத்தான்குடி நகரசபை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், காத்தான்குடி பொலிஸார் மற்றும் கிராம சேவையாளர்கள் பங்குபற்றினர்.
இதன் போது வீடுகளில் பரிசோதனை நடவடிக்கை இடம்பெற்றதுடன் டெங்கு நோயின் தாக்கங்கள் தொடர்பாகவும் வீட்டு உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

# உறவு விரிசலடைய முன் பேசித் தீர்த்து விடுங்கள்

## கல்முனைப் பிரதேச செயலக சிக்கலைத் தீர்க்க அப்துல் கபூர் அழைப்பு

கல்முனை.டிசெ.21

கல்முனை பிரதேச செயலக எல்லை நிர்ணய விடயத்தை தமக்கிடையே தமிழ் முஸ்லிம் கட்சிகள் பேசித் தீர்க்க வேண்டும். இரு தரப்பு அரசியல் வாதிகளும் பார்வையாளர்களாகப் பார்த்துக் கொண்டிருந்தால் தமிழ் - முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்பட்டு விடும். இரு இனங்களுக்கும் இடையிலான பேச்சுக் கூடத் தடைப்பட்டு, எதிர்காலத்தில் கிழக்கு மாகாண சபையில் தமிழ் முஸ்லிம் கட்சிகள் இணைந்து ஆட்சியமைக்க முடியாத நிலையும் ஏற்படலாம்.

இவ்வாறு கல்முனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.அப்துல் கபூர் தெரிவித்தார். அண்மையில் நற்பிட்டிமுனையில் நடைபெற்ற கல்முனை பிரதேச செயலக எல்லை பிரிப்பு சம்பந்தமான கலந்துரையாடலில் அவர் உரையாற்றினார். கூட்டம் ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர் வை.எம்.அலிபா தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் அப்துல் கபூர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்முனை பிரதேச செயலக எல்லை நிர்ணயம் தீர்க்கப்படாமல் இழுபட்டு வருகிறது. சில அரசியல்வாதிகளும், இனவாதிகளும், மதவாதிகளும் இந்த விடயத்தில் தீர்க்கதரிசனமின்றி செயற்பட்டு வருகின்றார்கள்.

கடந்த முப்பது வருடங்களாக நீறுபூத்த நெருப்பாக இருந்து வந்த இனப்பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. தமிழ், முஸ்லிம் மக்கள் புரிந்துணர்வுடன் இணக்கப்பாட்டுக்கு வருவதன் மூலமாகத்தான் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காணமுடியும் என்ற உண்மையை தமிழ், முஸ்லிம் மக்கள் உணர்ந்திருப்பதை இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமூகமும் அறிந்து வைத்துள்ளது.

இதனாலேதான் தமிழ், முஸ்லிம் உறவை வளர விடக் கூடாது என்பதில் அம்பாறை மாவட்ட அமைச்சர்கள் சிலர் முனைப்புடன் செயற்படுகின்றனர்.

கல்முனை ஸ்ரீ சுபத்திராராமய விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர் கூரை மீது ஏறி உண்ணாவிரதம் இருப்பேன் என்று கூறுவது தமிழ் மக்கள்மீது கொண்ட பாசத்தினால் அல்ல. தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே உறவு இறுக்கமாகி விடக் கூடாது என்பதற்காகவே ஆகும். இந்த உண்மையை தமிழ், முஸ்லிம் மக்கள் விளங்கிக் கொள்வது காலத்தின் தேவையாகும்.

போரும் இனரீதியான கடத்தல்களும் நடந்த காலத்தில் களத்தில் நின்று தமிழ் முஸ்லிம் மக்களின் உறவு பாதிக்கப் படக் கூடாதென்று சமாதானத்தையும் ஒற்றுமையையும் நிலை நாட்டியவர்கள் நாங்கள். அன்று தமிழ், முஸ்லிம்கள் மத்தியில் கூறிய சமாதானத்துக்கான ஒற்றுமையைத்தான் இன்றும் கல்முனை பிரதேச செயலக விடயத்திலும் வலியுறுத்துகின்றோம்.

சிவில் சமூகத்தைச் சேர்ந்த தமிழ்த் தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் ஒரு மேடையில் சந்தித்துப் பேசி நியாயமான தீர்வுக்கு வாருங்கள் என்று கேட்கின்றேன். இவ்வாறு எடுக்கப்படும் தீர்வை எமது அரசியல் தலைமைகளிடம் ஒப்படைத்து இனியும் நாம் பிரிந்து விடாது ஒற்றுமையாக வாழவேண்டும் அப்போதுதான் நமது விடுதலைப் பயணம் வெற்றி பெறும்.

இனரீதியாக பிரதேச செயலகங்கள் எதிர்காலத்தில் பிரிக்கப்படமாட்டாதென்று பொது நிர்வாக அமைச்சர் கூறிக் கொண்டு கல்முனையில் மட்டும் இனரீதியான பிரதேச செயலகங்களைப் பிரிப்பதற்கு முனைவது ஏன்?

கல்முனையில் தமிழ் முஸ்லிம் மக்களின் முரண்பாட்டுக்கு மத்தியில் பிரதேச செயலக பிரிவை ஏற்படுத்தினால் காரைதீவு, நாவிதன்வெளி போன்ற இடங்களில் முஸ்லிம்கள் தனியான் பிரதேச செயலகங்களை கேட்கலாம். இதனால் தமிழ் முஸ்லிம் உறவில் பெரும் விரிசல் ஏற்படும். இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்து மாகாண சபையில் அரசமைக்க இடமில்லாமல் போய்விடும் என்றும் வடக்கு கிழக்கில் தமிழ், முஸ்லிம் உறவை வளர விடாமல் தடுக்கவும் முடியும் என்றும் சில பேரினவாத சக்திகள் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றன.


இந்த ஆபத்திலிருந்து தமிழ், முஸ்லிம் மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமக்கிடையில் பேசித் தீர்வு காண வேண்டும் - என்றார்.

# விபத்தில் சிக்கிய முதியவர் சாவு

திருகோணமலை, அநுராதபுர சந்தைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கிய முதியவர் மேலதிக சிகிச்சைக்காக கண்டிக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் காந்திநகர் கிராமத்தைச் சேர்ந்த 76 வயது மதிக் கத்தக்காளி கோணாமலை என்பவராவார். அவர் அநுராதபுர சந்தையில் உள்ள கடையொன்றில் தேநீர் அருந்தி விட்டு வீதியைக் கடக்க முற்பட்ட போது வேகமாக வந்த சிறியரக லொறி ஒன்றுடன் மோதுண்டதால் உயிருக்கு ஆபத் தான நிலையில் திருகோணமலை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும்வழியில் உயிரிழந்தார். (வ-40)

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்,
வரதர் வெளியீடு நிறுவன சாதனையாளர்
"சாகித்ய இரத்தினம்"
தி.ச. வரதராசன் (வரதர்)
அவர்களின்
7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
01★07★1924
உதிர்வு
21★12★2006
ஏழு வருடங்கள் தந்தையற்ற
ஏழ்மையை உணர்ந்தோம்
ஏழு ஜென்மங்களும் தாலாட்டும்
எழுதிய படைப்புகள்
பிள்ளைகள்.
திதி:02.01.2014
யாழ்ப்பாணம். (42638)(3.6.4)

# இரண்டு நியமனக் கடிதங்களை பெற்றுக்கொண்ட பட்டதாரிகள்

## அமைச்சர் அதாவுல்லாவின் அடாவடி

அம்பாறை.டிசெ.21



அம்பாறை மாவட்டத்தில் அமைச்சர் அதாவுல்லாவின் செயற்பாட்டால் பட்டதாரிப் பயிலுநர்கள் ஒரே நியமனக் கடிதங்களை இரண்டு தடவைகள் பெற்றுக் கொண்டுள் ளனர்.

அம்பாறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு, கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்ட அரச அதிபர் நீல் த அல்விஸினால் நிரந்தர நியமனத்துக்கான கடிதங்கள் வழங்கப்பட்டன. ஆனால் இந்த நியமனக் கடிதங்களைப் பெற்ற பட்டதாரிகளுக்கு மீண்டும் இரண்டாவது தடவை அமைச்சர் அதாவுல்லா கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் மாவட்ட செயலரால் வழங்கப்பட்ட நிரந்தர நியமனத்துக்கான கடிதங்களைப் பெற்ற, அந்தப் பட்டதாரிகள் தங்களது கடமைப் பொறுப்பேற்றலையும் ஏற்கனவே செய்து முடித்து விட்டார்கள். அதற்கான சம்பள நிலுவைகளையும் பெற்று விட்டனர்.

இந்த நிலைமையில் அந்தப் பட்டதாரிகளின் நியமனக் கடிதங்களை மீளப்பெற்று, மீண்டும் குறிப்பிட்ட பட்டதாரிகளுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் திரும்பவும் அதாவுல்லாவால் வழங்கப்பட்டன.

பட்டதாரிகளை அரச சேவைக்குள் உள்வாங்கும் அரசின் செயற்றிட்டத்தின் கீழ், பட்டதாரிகள் அனைவரும் உள்வாங்கப்பட்டு ஒருவருட காலம் பயிற்சியளிக்கப்பட்டனர். அவ்வாறு ஒரு வருட காலத்தை பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது. (ச)

# மேல், தென் மாகாணங்களில் அரசைத் தோற்கடிக்க வியூகம்

## *ஐ.தே.க. - ஜே.வி.பி. தனித்தனி வழியில்*

கொழும்பு,டிசெ.21

2014 ஆம் ஆண்டு மார்ச் மாத முற்பகுதியில் நடைபெறவுள்ள மேல், தென் மாகாண சபைத் தேர்தல்களில் அரசைத் தோற்கடிப்பதற்கான புதிய வியூகங்களை வகுத்து முடுக்கி விட்டுள்ளதாக பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் தலைவர்கள் மற்றும் ஜே.வி.பியினர் தெரிவித்துள்ளனர்.

இக்கட்சிகளினால் தற் போதே தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவை குறித்து ஐ.தே.க வின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவிக்கையில்,

"அடுத்த வருடம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முக்கியமான ஆண்டாகவே காணப்படும். காரணம், எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள தேர்தல்களில் அரசை தோற்கடிப்பதற்கான புதிய வியூகங்களை எமது தலைமைத்துவ சபை தற்போதே வகுத்து விட்டது.

அதாவது, 'ஜன ஜய மெக யும' (மக்கள் வெற்றிக்கான செயற்றிட்டம்) என்பதன் மூலமாகவே தற்போது பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராமங்களில் மட்டுமன்றி தேர்தல் நடைபெறுகின்ற களங்களிலும் இந்தப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்தச் செயற்றிட்டம் மூலம் இம்முறை தேர்தல்களில் ஐ.தே.கவுக்கு சிறந்ததொரு பயன் கிடைக்கும் என நிச்சயமாகக் கூற முடியும்." என்றார்

அதேவேளை ஜே.வி.பி யின் ஊடகப் பேச்சாளரும், மேல் மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளருமான லால் காந்த தெரிவிக்கையில்,

> "2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல்களுக்கு இப்போதிலிருந்தே நாம் தயாராகிக் கொண்டு வருகிறோம்.

"2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல்களுக்கு இப்போதிலிருந்தே நாம் தயாராகிக் கொண்டு வருகிறோம். மாகாணசபைத் தேர்தல்களைப் பொறுத்தவரை மேல் மாகாணத்திலும், தென் மாகாணத்திலும் எமது வெற்றி உறுதியாகவே இருக்கும்.

அதேவேளை, ஜனாதிபதி தேர்தலுக்கு நாம் ஒரு புதுக் கொள்கையுடன் இறங்கப் போகிறோம். அக்கொள்கையை நாம் ஜனவரி மாதம் நடுப்பகுதிக்குள் வெளிப்படுத்துவோம். அதுமட்டுமல்லாது, இப்போதே எமது பரப்புரை நடவடிக்கைகளையும் நாம் ஆரம்பித்துவிட்டோம். இதன் மூலம் சிறந்த ஒரு பயன் கிடைக்கும் என்றே நாம் நம்பு கிறோம்.

எதிர்க்கட்சிகள் பெற்றுக்கொள்ளும் வாக்குகளினால் இந்த அரசைப் படுதோல்வியடையச் செய்து அடுத்த வருடத்திலிருந்து அரசிலுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதே எமது பிரதான நோக்கமாகும். இது நிச்சயமாக நிறைவேறும்" என்றார்.

# கவிழ்ந்தது கார் தப்பினார் சாரதி

*தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் சம்பவம்*



கொழும்பு,டிசெ.21

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ நுழைவாயில் பகுதியில் நேற்று முன்தினம் காலை கார் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் காருக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சொத்துகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், காரின் சாரதி எவ்வித காயங்களுமின்றி உயிர் தப்பியுள்ளார். (ஒ-சி)

# தொழுகைக்குக் தடை விதிப்பு; மத உரிமையை மீறும் செயல்

*அமைச்சர் றிஷாத் கண்டனம்*



கொழும்பு,டிசெ.21


கொழும்பு மாவட்டத்திலுள்ள மூன்று இஸ்லாமிய பள்ளிவாசல்களில் தொழுகை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பொலிஸாரினால் தடை விதிக்கப்பட்டுள்ளமை மத உரிமையை மீறும் செயல் என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றிஷாத் பதியுதீன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

களுபோவில மஸ்ஸிதுல் தாருல் சாபீஸ், தெஹிவளை தாருல் அர்க்கம் மற்றும் தெஹிவளை அத்திடிய மஸ்ஜிதுல் ஹிபா ஆகிய பள்ளிவாசல்களின் பரிபாலன குழுவினருக்கு தொழுகைகளை நிறுத்துமாறு பொலிஸாரினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மதத் தலங்களின் மீது இவ்வாறான தடைகள் மற்றும் இடையூறுகள் விளைவிக் கப்படுவது சட்டத்துக்கு முரணானது. சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே இந்தப் பள்ளிவாசல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தொழுகை நடத்த தடைவிதிப்பது என்பது தவறானது. இதனால் முஸ்லிம் சமூகத்தவர் கடும் அச்சத்துக்கு உள்ளாகியுள்ளனர்- என்றார். (ஒ-10)



இந்திய கரையோர பாதுகாப்பு படைக்குச் சொந்தமான 'விஷ்வாஸ்ட்' மற்றும் 'ராக்கமல்' ஆகிய இரு கடற்படைக் கப்பல்கள் இலங்கைக்கு வந்துள்ளன. இலங்கை இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு இடையில் நடைபெறவுள்ள முத்தரப்பு கடற்படைப் பயிற்சியில் கலந்து கொள்ளும் பொருட்டே இந்தக் கப்பல்கள் திரு

# பாக். சபாநாயகர் கொழும்பு வந்தார்

கொழும்பு,டிசெ.21

பாகிஸ்தான் தேசிய பேரவையின் சபாநாயகர் சர்தார் அயாஸ் சாதிக் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு வியாழக்கிழமை இலங்கை வந்துள்ளார்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் அழைப்பின் பேரிலே யே இரண்டு நாள் பயணம் மேற்கொண்டு அவர் கொழும்பு வந்துள்ளார். இலங்கை-பாகிஸ்தான் நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுடனான கலந்துரையாடலிலும் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

# 'பட்ஜெட்'டுக்கு எதிராக வாக்களிக்கும் உறுப்பினர்களுக்கு கடும் மிரட்டல்

## *இதுதான் மஹிந்த சிந்தனையின் கொள்கையா? - ஐ.தே.க .கேள்வி*

கொழும்பு,டிசெ.21

பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களிக்கும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களை மிரட்டும் அடாவடி நடவடிக்கையில் சில உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று நேற்று நாடாளுமன்றில் சுட்டிக்காட்டிய எதிரணியின் பிரதம கொறடாவும் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன் அமரதுங்க இதுதான் மஹிந்த சிந்தனையின் கொள்கையா என்றும் கேள்வி எழுப்பினார்.

20இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளின் பட்ஜட்கள் இதுவரையில் தோற்கடிக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்

> அதிகளவு மோசடிகள் இடம்பெறும் இடங்களாக உள்ளூராட்சி சபைகள் மாறி வருகின்றன.

காட்டிய அவர், அதிகளவு மோசடிகள் இடம்பெறும் இடங்களாக உள்ளூராட்சி சபைகள் மாறி வருகின்றன என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதா வது:-

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆளுகையின் கீழ் தான் நாட்டில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் இருக்கின்றன.

இந்த உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களின் முறைகேடான - மோசடி யான செயற்பாடுகள் காரணமாக பல்வேறு உள்ளூராட்சி சபைகளில் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்கள் ஆளுந்தரப்பு உறுப்பினர்களின் உதவியு டன் தோற்கடிக்கப்பட்டு வருகின்றன.



இந்நிலையில், இரண்டாவது முறையாகவும் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும்போது அதற்கு எதிராக வாக்களிக்கும் ஆளுந்தரப்பு மற்றும் எதிரணி உறுப்பினர்களை அடாவடித்தனங்கள் மூலம் மிரட்டி, தடுத்து நிறுத்தும் நடவடிக்கையில் சில உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

உள்ளூராட்சிச் சபைகளின் பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டால் குறித்த சபையின் தலைவரை நீக்கிவிட்டு அடுத்துள்ளவருக்கு அந்தப் பதவியை வழங்க முடியும் - என்றார்.

# இரகசிய வாக்கெடுப்பை முடிந்தால் அரசு நடத்திக் காட்டட்டும்

கொழும்பு,டிசெ.21

"2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் குறித்து நாடாளுமன்றில் இன்று முடிந்தால் இரகசிய வாக்கெடுப்பை நடத்திக் காட்டுங்கள்" என்று அரசுக்குச் சவால் விடுத்துள்ளது ஜே.வி.பி.

"தற்போது அரசிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதலமைச்சர்கள் வரை ராஜபக்ஷ அதிகாரத்தின் கீழேயே இயங்க வேண்டியுள்ளது. இதனால் இரகசிய வாக்கெடுப்பில் பட்ஜட் நிச்சயம் தோல்வியையே சந் திக்கும்" என்றும் ஜே.வி.பி தெரிவித் தது.

இன்று நாடாளுமன்றில் பட்ஜெட் குறித்தான இறுதி விவாதம் நடைபெறவுள்ள நிலையிலேயே அரசுக்கு மேற்கண்டவாறு சவால் ஜே.வி.பி விடுத்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் பிரதான காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க மேலும் தெரி வித்ததாவது:-

"சென்ற வாரம் வத்தளை பிரதேச சபையில் பட்ஜெட் தோல்வியடைந்தது. இதன்போது அங்கு வந்த சில காடையர்கள் பிரதேசசபை அலுவலகத்தைப் பூட்டி பெரும் அட்டகாசம் புரிந்துள்ளனர். இதனால், உறுப்பினர்களும் உள்ளே செல்ல முடியாது பெரும் சிரமப்பட்டுள்ளனர்.

வத்தளை மட்டுமல்லாது பெரும்பாலான பிரதேச சபைகளிலும் பட்ஜெட் தோல்வியடை[illegible]ள்ளது.

இதற்கெல்லாம் பிரதேசசபைத் தலைவர்களும் இந்த ராஜபக்ஷ அதி காரமுமே காரணமாகும். இன்று அனைத்தும் ராஜபக்ஷ அதிகாரத்தில் கீழேயே இயங்குகின்றன. தற்போதுள்ள நகரசபை, மாநகர சபை, பிரதேச சபைகள் என அனைத்தையும் இல்லாதொழித்து திவிநெகுமவை கட்டியெழுப்புவதே அரசின் பிரதான நோக்கமாகும். இதற்காகவே பஸில் ராஜபக்ஷ முயற்சித்து வருகிறார். இதை நாம் ஒருபோதும் ஒற்றுக் கொள்ளவே மாட்டோம் - என்றார்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எந்த நாட்டிலும் எல்லாக் காலங்களிலும் எதேச்சாதிகாரம் கூத்தாட முடியாது

பங்களாதேஷில் ஜனவரி ஐந்தாம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைப் பகிஷ்கரிக்கப்போவதாக பிரதான எதிர்க்கட்சிகளில் ஒன்றான பங்களாதேஷ் தேசியக் கட்சியும் மற்றும் 17 உதிரிக் கட்சிகளும் அறிவித்துள்ளன. ஜமா அதே இஸ்லாமி கட்சியின் தலைவர் அப்துல் காதிர் முல்லா மீது போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அவர் தூக்கிலிடப்பட்ட நிலையில், தேர்தல் நடைபெற்றால், மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று அஞ்சப்படுகிறது.

தனது தந்தையாரான முஜிபுர் ரஹ்மான் வழியில் நாட்டில் ஒரு கட்சி ஆட்சி முறைமையை ஏற்படுத்தி சர்வாதிகாரப் பாதையில் நாட்டை இட்டுச்செல்ல பிரதமர் ஷேக் ஹசீனா வியூகம் வகுத்துச் செயற்படுவதை அவரது நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.

1971இல் கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேஷ் என்ற பெயரில் சுதந்திர தனிநாடாக உருவான பின்பு ஆட்சிக்கு வந்த அரசியல் தலைவர்களால், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை உண்டாக்க முடியவில்லை. ஷேக் ஹசீனாவின் ஆட்சியிலும் அது தொடர்கிறது. எதிர்க்கட்சிகள் மீது அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. எதிர்க்கட்சிகளை நசுக்குவதன் மூலம் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் வெற்றிபெறுவதற்கு ஷேக் ஹசீனா திட்டமிட்டு வருகிறார்.

பங்களாதேஷின் பெரிய இஸ்லாமியக் கட்சியான ஜமா அதே இஸ்லாமியின் தலைவர் அப்துல் காதிர் முல்லா தூக்கிலிடப்பட்டதன் பின்னணியும், எதிர்க்கட்சிகள் மீதான அடக்குமுறைகளில் ஒன்றே.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டக் காலத்தில் பாகிஸ்தான் இராணுவத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டதாகவும் சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவான ஆறு பேர் கொண்ட குடும்பம் ஒன்றைக் கொலைசெய்ததாகவும் அப்துல் காதிர் முல்லா மீது குற்றஞ்சாட்டப்பட்டு, சம்பவம் நிகழ்ந்தபோது 13 வயதாக இருந்த ஒரு தனி நபரின் சாட்சியத்தை ஏற்று, அனைத்துலக போர்க்குற்ற நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியுள்ளது. அவரது மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டு கடந்த 12ஆம் திகதி அவர் தூக்கிலிடப்பட்டார்.

2010இல் பங்களாதேஷில் அமைக்கப்பட்ட போர்க்குற்ற நீதிமன்றம் பெயரளவில்தான் போர்க்குற்ற நீதிமன்றமாகும். பங்களாதேஷில் 1973 இல் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் அது அமைக்கப்பட்டது. அதற்குப் பிந்திய நாற்பது ஆண்டுகளில் அனைத்துலகச் சட்டங்களில் கணிசமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. ரோம் உடன்படிக்கையின் அடிப்படையில் 1998இல் அனைத்துலக நீதிமன்றம் அமைக்கப்பட்டுவிட்டது. இதன் தரத்தை பங்களாதேஷ் சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றம் சிறிதளவாவது கொண்டிருக்கவில்லை. 1973ஆம் ஆண்டு சட்டத்தின் உள்ளடக்கமும் பங்களாதேஷ் அரசமைப்பில் செய்யப்பட்ட திருத்தங்களும் பங்களாதேஷ் போர்க்குற்ற நீதிமன்றத்தின் தரத்தை கேலிக்கிடமாக்கிவிட்டுள்ளன.

அத்தகைய ஒரு நீதிமன்றத்திலேயே அப்துல் காதிர் முல்லா விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டு அவசர அவசரமாகத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஜமா அதே இஸ்லாமி கட்சியைக் கருவறுப்பதன் மூலம் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் சுலபமாக வெற்றியைச் சுருட்டிக்கொள்ளவும், எதிர்க்கட்சிகளைத் தடைசெய்து நாட்டை ஒரு கட்சி சர்வாதிகார ஆட்சி முறைமைக்குக் கொண்டுசெல்லவும் ஷேக் ஹசீனா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பங்களாதேஷில் இருந்துவரும் ஜனநாயக பாரம்பரியங்களுக்கு விடுக்கப்படும் மிகப்பெரும் சவாலாகும்.

சுதந்திரத்தின் பின்னர் அரசியல் குழப்பங்கள் மலிந்த பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு முறையான அரசு ஜனநாயக ரீதியில் இயங்கிவரும்போது, அதிலிருந்து பிரிந்து சுதந்திர நாடான பங்களாதேஷ் சர்வாதிகாரப் பாதையில் செல்வது துரதிர்ஷ்டம் வாய்ந்ததாகும். எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் உண்மையான குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். அனைத்துலக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிகளின் ஊடாகவே அது இடம்பெறவேண்டும். போர்க்குற்றங்கள் இடம்பெற்றிருப்பின் அவை அனைத்துலக நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும். ஆனால் பங்களாதேஷில் நாடு சிக்கலான பொருளாதார சவால்களை எதிர்கொண்டுவரும் நிலையில், அவற்றிலிருந்து மக்களைத் திசைதிருப்பவும், எதிர்க்கட்சிகளை நசுக்கி தனி நபர் சர்வாதிகார ஆட்சியை நிறுவவும் பங்களாதேஷின் போர்க்குற்ற நீதிமன்றம் பயன்படுத்தப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். அந்த நாட்டில் ஜனநாயக பாரம்பரியங்கள் குழிதோண்டிப் புதைக்கப்படுமானால் 1971இல் இலட்சக்கணக்கான மக்களை இழந்து பெற்ற சுதந்திரம் பொசுங்கி, அர்த்தமற்றதாகிவிடும்.

ஜனநாயகத்தைச் சர்வாதிகாரமாக மாற்றி தமது நலன் சார்ந்த, தமது குடும்பத்தின் அல்லது குழுமத்தின் செல்வாக்கை மக்களிடம் திணிக்க முயல்பவர்கள், அரசியல் தலைமைத்துவத்தில் எழுவதற்குப் பதிலாகத் தறுக்கணித்து வீழ்வதே வரலாறு. அதனை மனதில் கொள்ளாமல், மக்களின் நலனை நசுக்கி உயர்வோர், சில காலத்துக்கு மட்டுமே ஏதேச்சாதிகாரக் கூத்தாட முடியும்.

பங்களாதேஷில் மட்டுமன்றி இலங்கை உட்பட பல நாடுகளிலும், இந்தக் "கோட்பாடு" தோல்வி காணும் காலம் சுழன்று வரலாம்.

# களங்கம்

## கழுவப்பட்டு விட்டது



நான் களைத்துப் போகவில்லை. உற்சாகம் அடைந்திருக்கிறேன். எந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எனக்குத் தூக்குத் தண்டனை விதித்தார்களோ, அந்த வாக்குமூலமே பொய் என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. சதிகாரன், கொலைகாரன் என்று என் மீது சுமத் தப்பட்ட களங்கம் கழுவப்பட்டு விட்டது. நீதிக்கான இந்தப் போராட்டத்தில் நான் இறுதிப் பகுதியில் நிற்கிறேன். இந்த ஒளி, இந்தியாவின் அனைத்துச் சாவுத் தண்டனைக் கைதிகளின் கழுத்தின் மீதும் தொங்கிக்கொண்டிருக்கும்தூக்குக்கயிற்றை அறுத்தெறியட்டும்- என்று கூறும் பேரறிவாளனுக்கு இப்போது வயது 42. தன் வழக்கின் இறுதித் தீர்ப்புக்காகக் காத் திருக்கும் பேரறிவாளனிடம் அவரது வழக்கறிஞர்கள் மூலம் பேசினேன்.

***உங்களின் கருணை மனு நிராகரிக்கப்பட்ட இரவில், உங்கள் மனநிலை எப்படி இருந்தது?***

ஒவ்வொரு முறை தூக்கு உறுதிப்படுத்தப்படும்போதும் எனது தாயாரை நினைத்து மிகவும் கவலை கொள்வேன். கடந்த 1991-ஆம் ஆண்டு நான் கைது செய்யப்பட்ட தில் இருந்து இன்றுவரை ஒரு தாய்க்கும் மகனுக்குமான தனிப்பட்ட சந்திப்பாக மட்டும் இருக்க வில்லை எங்கள் அன்பு. சென்னைக் கும் வேலூருக்கும் அலைந்தே, அவரது வாழ்நாளில் பெரும்பகுதி கழிந்து விட்டது. மகன் என்ற உரிமைக்கு அப்பால், இரக்கமே இல்லாமல் அவரது உழைப்பை நான்உறிஞ்சியிருக்கிறேன். ஆனால், சட்டத்தின் சகல சாத்தியங்களையும் பயன்படுத்தி நீதிக்காகப் போராடுவது என்ற முடி வையும், கருணை மனு நிராகரிக்கப்பட்ட அந்த இரவில்தான் எடுத்தேன்!

***சிறை உங்களுக்குப் பழகிப் போனதா, சிறையில் உங்கள் நண்பர்கள் யார்?***

வேலூரில் நான் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன். பலவிதமான கைதிகள் சுமார் 1,000 பேர் உள்ளனர். இவர்களில் விசாரணை, தடுப் புக்காவல் சிறைவாசிகளுடன் பழகும் வாய்ப்பு இயல்பாகவே எனக்கு அமையவில்லை. மற்றப்படி ஏராளமான தண்டனைச் சிறைவாசிகள் நண்பர்களாக உள்ளனர். உயரமான நான்கு மதில் சுவர்களுக்குள் அடைக்கப்பட்டுள்ள எங்களுக்கு சிறைக்குள்ளேயே வேறு பணிகள் ஒதுக்கப்படுகின்றன. என்னை மேம்படுத்திக் கொள்ள கலை, இலக்கிய நிகழ்வுகளை எவ்வளவு பயன்படுத்திக்கொள்ள முடியுமோ... அவ் வளவு தூரம் பயன்படுத்திக்கொள்கிறேன்.

***சிறையில் இருந்தபடியே வழக்குகளை நடத்துவது, காணொலி விசாரணைமூலம்முன்னிலைப்படுவது... என இந்த அனுபவம் புதியதா?***

19 வயதில் நான் கைது செய்யப்பட்டபோது, சட்டம் பற்றிய அறிவு எனக்குத் துளியும் கிடையாது. தடா போன்ற கறுப்புச் சட்டங்கள் பற்றி எதுவும் அறியாதவனாக இருந்தேன். கைது செய்யப்பட்டு சிறையில் கழித்த இந்த 22 ஆண்டுகளில், என் வழக்கை நானே எதிர்கொள்ளும் அளவுக்கு சட்டரீதி யான அறிவோடு என்னைத் தயார்ப் படுத்திக்கொண்டேன். வழக்கறிஞர்கள் பிரபுவும் பாரியும் பல்வேறு தீர்ப்புகளை எனக்கு வாசிக்கக் கொடுத்து என் சட்ட அறிவை வளர்த்தார்கள். 2011-இல் புல்லர், மகேந்திரநாத் இருவரின் கருணை மனுக்களும் நிராகரிக்கப்பட்டபோது, எனக்கும் அதுபோன்ற முடிவுதான் என்பதைமுன்கூட்டியேஉணர்ந்த நான், உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் காலின் கன்சால்வேஸுக் குக் கடிதம் எழுதி, எனக்காக உயர் நீதிமன்றத்தில் வாதாட முடியுமா? என்று கேட்டு அவரது ஒப்புதலைப் பெற்றேன். அவரும் வாதாடி, உயர் நீதிமன்றத்தில் தடை கிடைத்தது. அம்மாவும் தங்கையும் அவருக்குப் பணம் கொடுத்தபோது, பெருந்தன்மையோடு அதை வாங்க மறுத்துவிட்டார். பல்வேறு சட்ட வழக்குகளை நானே கையாண்டபோது காணொலி விசாரணையிலும் பங்கு பெற்றேன். அது சிறை வரலாற்றிலேயே புதிய அனுபவம். சகல கதவுகளையும் தட்டிவிட்டேன். இனி நான் சொல்ல ஏதும் இல்லை. முடிவை உங்கள் கைகளுக்கே விட்டுவிடுகிறேன்.

***19 வயதில் நீங்கள் கைதான போது, உங்களது அரசியல் நண்பர்கள் உங்களைக் கைவிட்டு விட்டார்கள் இல்லையா?***

என்னைக்கைவிட்டுவிட்டார்கள் என்பதைவிட, என் பெற்றோரைக் கைவிட்டார்கள். என்னை அறிந்த வர்கள், அன்பு பாராட்டியவர்கள் விலகிச் சென்றார்கள். எங்கள் குடும்பத்தினரிடம் இருந்து தங்களை மீட்டுக் கொள்ள பரிதாபகரமான முயற்சி களில் ஈடுபட்டனர். ஆனால்,என்னைநம்பிய என் உறவுகளும் நண்பர்களும் என்னோடு இருக்கிறார்கள். முன்னர் என்னைச் சந்தேகப்பட்டவர்கள் இப்போது நெருங்கி வருகிறார்கள். இது நிரபராதிகளின் காலம் போலும்.

***உங்களது வாக்குமூலத்தை முழுமையாகப் பதியவில்லை என்று சி.பி.ஐ. முன்னாள் எஸ்பி, தியாகராஜன் சொன்னபோது எப்படி இருந்தது?***

ஒப்புதல் வாக்குமூலத்தின் நம்பகத்தன்மை குறித்து, நானும் அவரும் மட்டுமே கூற முடியும் என்ற நிலையில் தண்டிக்கப்பட்டவன், குற்றம் இழைத்தவன் என முத்திரை குத்தப்பட்டதால், எனது கருத்து இத்தனை ஆண்டுகளாக அங்கீகாரம் இன்றிப் புறந்தள்ளப்பட்டது. தற்போது வாக்குமூலம் பெற்ற தியாகராஜனே வாக்கு மூலத்தை முழுமையாகப் பதியவில்லை என்று கூறியிருப்பதன் மூலம், எனது கருத்துகள் உண்மை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனது தாயாரின் இத்தனை ஆண்டுகால உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம் இது!

***உங்களது வாக்குமூலத்தை முழுமையாகப் பதியவில்லை என்ற தியாகராஜன், ராஜீவ் காந்தியைக் கொல்லத்தான் பற்றறி வாங்கினார் என்று எழுதாமல், வாக்குமூலத்தில் ஒரு வெற்றிடத்தை, வேண்டுமென்றே உங்களுக்குச் சார்பாக விட்டுச்சென்றேன் என்கிறாரே... அதை நீங்கள் கவனிக்கவில்லையா?***

தியாகராஜன் சாமானிய மனிதர் அல்ல. அவர் பொலிஸ் உயர் பதவியை அலங்கரித்து ஓய்வு பெற்றவர். இத்தனை ஆண்டுகால நீதிக்கான எனது போராட்டத்தில் அவரை நான் மிகக் கடுமையாக விமர்சனம் செய்து வந்திருக்கிறேன். அவரது நீதிமன்றச் சாட்சியத்தை ஏற்கக் கூடாது என அழுத்தமாகப் போராடி வந்திருக்கிறேன். அவரது இந்தக் கூற்றை நான் முழுமையாக ஏற்கவில்லை. மொழி மயக்கம் தரும் ஒரு வெற்றிடத்தை அவர் விட்டுச் சென்றார் என்பது உண்மையே. அதே நேரம் அது குறித்துச் சாட்சியம் அளித்தபோது, அவரிடம் நேரடியாக ஏதும் கேள்வி எழுப் பப்பட்டிருந்தால், காவல் அதிகாரியா, மனச்சாட்சியா என்ற போராட் டத்தில் காவல் அதிகாரியாகத்தான் அன்றைய நாளில் சாட்சியம் அளித்திருப்பார். அது மிக ஆபத்தான முடிவாக இருந்திருக்கும். அதேநேரம் இது குறித்து உச்ச நீதிமன்றத்தில் என் வழக்கறிஞர் சுட்டிக்காட்டி வாதிட்டபோது, அது உச்ச நீதிமன்றத்தால் கருத்தில் கொள்ளப்படவில்லை.

***தவறு செய்துவிட்டேன் என்று சொல்லும் காவல் அதிகாரி தியாக ராஜனை, நீங்கள் மன்னிக்கத் தயாரா?***

உறுதியாக! ஆனால், ஒரு மனிதன் எதை எல்லாம் இழக்கக் கூடாதோ, அதை எல்லாம் கடந்த 22 ஆண்டுகளில் இழந்திருக்கிறேன். நான் மீண்டு வந்தாலும்கூட இழந்தவற்றை எவரும் திருப்பித்தர முடியாது. இத்தனை இழப்புகளுக்கும் எனது தண்டனைக்கும் காரணம் அந்த ஒப்புதல் வாக்குமூலம்தான். அந்த ஒற்றை ஆவணத்தை நீக்கிவிட்டு இந்த வழக்கை எடைபோட்டால் இந்த வழக்கின் உண்மை நிலை தெரிந்துவிடும். அன்றைய காலச்சூழலில் தடா சட்டத்தின் கொடூரமான ஒரு சட்டப்பிரிவின் ஆபத்தை அறியாதவராக தியாகராஜன் இருந்திருக்கலாம். ஒரு வகையில் தடா என்ற சட்டப்பிரிவுக்கு நாங்கள் மட்டும் பலியாகவில்லை... தியாக ராஜனே பலியாகியிருக் கிறார்.

***உங்களது தாயார் இந்த வயதிலும் உங்களுக்காக அலைந்துகொண்டிருக்கிறார். அவரது நினைவு உங்களிடம் என்னவாக இருக்கிறது?***

இது பற்றி யார் கேட்டாலும் நான் பதில் சொல்வது இல்லை. காரணம், என் தாயார் பற்றிய உணர்வுகளை வெளிப்படுத்தினால் எங்களுக்கு இடையிலான இயல்பான உற வுக்கு அது இடையூறாகிவிடும் என்கிற தயக்கம் எனக்கு இருக்கிறது. அது போல அவரும் என்னைப் பற்றி என்ன பதிவு செய்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதிலும் எனக்கு ஆர்வம் இல்லை. 22 ஆண்டுகளுக்கு முன் னர் என் அம்மாவுக்கு நான் எப்ப டியோ... இப்போதும் அப்படியே. அப்படி இருந்து விட்டுப்போகவேவிரும்புகிறேன்.

***புல்லரின் மேல் முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டிருக்கும் நிலையில், எஞ்சியிருக்கும் உங்கள் வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும் என எதிர்பார்க்கிறீர்களா?***

புல்லர் வழக்கின் தீர்ப்பு, எனது வழக்கில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை நாங்கள் உணர்ந்த அளவுக்கு, தமிழகத்தில் உள்ள பலர் உணரவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பாக தியாகராஜன் தெரிவித்திருக்கும் கருத்தும், அவர் எனக்கு சட்டரீதியாக உதவுவதாகச் சொல்லியிருப்பதையும் வைத்து சட்டரீதியான போராட்டத்தை முன்னெடுப்பதே சரி என நம்புகிறேன். 1951-இல் தந்தை பெரியாரின் போராட்டத்தால் முதன்முதலாக அரசியல் சாசனம் திருத்தப்பட்ட பின்னர், சுமார் 90 முறைக்கு மேல் திருத்தப்பட்டுள்ளது. என் மீதான வழக்கால் மற்றொரு திருத்தம் வரும் என உறு தியாக நம்புகிறேன். உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு நிரபராதி என்பதற்கான புதிய ஆதாரங்கள் கிடைத்தால், வழக்கை மீளாய்வு செய்யும் வகையில் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். தற்போதைய நிலையில், என்னை நிரபராதி எனக் கூறி விடுதலை செய்ய வேண்டும் என்பதே எனது போராட் டமாக இருக்கும். இதற்காக அனைத்து தரப்பினரின் ஆதரவையும் கோரி நிற்கிறேன்!

(நன்றி: ஆனந்தவிகடன்)

## ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் விவாதம்

# நீதியான ஆட்சி இருந்தால்தான் உண்மையான அமைதி இருக்கும்

ரம்யன்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

**பிணக்குக்கு குடியேற்றம் காரணம்**

**பேர்ன்ட் பொசெல்ட-ஜேர்மனி:**

இலங்கையில் ஒரு பிணக்கு இருக்கிறது. அது குடியேற்றங்கள் காரணமாக உருவானது. கடந்த காலங்களில் குடியேற்ற வல்லரசுகள் செய்த தவறுகளை ஐரோப்பிய யூனியனாகிய நாமும் செய்யலாகாது.

அங்கு போர் ஓய்வு இருக்கிறது. ஆனால் அமைதியைக் காணோம். நீதி ஆட்சி புரிந்தால்தான் உண்மையான அமைதியைக் காணலாம். இதற்கு சிறுபான்மை பெரும்பான்மையினரின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உண்மையான சமத்துவம் திகழ வேண்டும். நல்லிணக்கம் இடம்பெறுவதற்கான உறுதிப்பாடு இருக்க வேண்டும். இந்த உள்ளக சமத்துவம் இருந்தால்தான் உள்ளக அமைதி ஏற்பட முடியும். சிறுபான்மையினரின் உரிமைகள் அங்கீகரிக்கப்படுவது முக்கியம்.



**திருமதி லிடியா ஜெரிங்கா டி ஒயெடென்பேர்க்-ஜேர்மனி:**

இலங்கையில் 26 ஆண்டுகளுக்கு மேல் நீடித்த சிவில் போரின்போது இடம்பெற்ற குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்தாதது குறித்து இலங்கை அதிகாரிகள் குற்றஞ்சாட்டப்படுகிறார்கள். இந்தப் போரின் போது 80 அல்லது 100 ஆயிரம் பேர் கொல்லப்பட்டும் 6 ஆயிரம் பேர் காணாமற்போயும் உள்ளதுடன் 400 ஆயிரம் பேர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். வடக்கை சாதாரண நிலைக்கு கொண்டு வருவதற்கு படிப்படியாக அகதி முகாம்கள் மூடப்பட்டு, கண்ணிகள் அகற்றப்பட்ட பகுதிகளில் மக்கள் குடியயேற்றத்துக்கான முயற்சிகள் நடைபெறுவதை நாம் பாராட்டுகின்றோம். அதேசமயம் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுறுவதற்கு முந்திய மாதங்களில் இடம்பெற்றுள்ள போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆழமான விசாரணைகள் நடத்தப்பட்டு அதன் விவரம் ஐ.நா. சபையிடம் சமர்ப்பிக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். கால் நூற்றாண்டு கால நீடித்த போரின் பொறுப்புக் கூறலை நிவர்த்தி செய்வது இலகுவான விடயம் அல்ல. ஆனால் நல்லிணக்கத்துக்காகவும் ஜனநாயகத்துக்காகவும் அது தேவைப்படவே செய்கின்றது.

**அடாம் பீலன்: போலந்து:**

தமிழ்ப் புலிகளினால் இலங்கை மக்கள் பல ஆண்டுகாலம் பயங்கரத்தை எதிர்நோக்கியிருந்தார்கள். பிணக்கின் இறுதிக் காலத்தில், ஐ.நா.அறிக்கைகளின்படி இராணுவமும் குற்றம் புரிந்துள்ளது. இரண்டு தரப்பினரும் இரத்தக் கறை படிந்த வன்செயல்களைப் புரிந்துள்ளார்கள். பல மதத்தினரைக் கொண்ட இலங்கையின் அதிகாரிகள் அந்த நாட்டு மக்களை நல்லிணக்கத்துக்கு கொண்டு வருவதற்கு முடிந்த எல்லாவற்றையும் செய்தாக வேண்டும். அந்த நாட்டு அரசை நான் கேட்டுக்கொள்வது அரசியல், பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள செயற்பாடுகளை தொடர வேண்டும். இதற்கான அடிப்படை என்னவாக இருக்க வேண்டும் என்றார். அதிகார பரவலாக்கலே இதன் மூலம் ஒரே நாட்டுக்குள் உள்ளூர் நிர்வாகத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியும். அதே சமயம் குற்றச் செயல்களை தெளிவுபடுத்திக் கொண்டு சுதந்திரமான விசாரணை ஒன்றை ஆரம்பித்து குற்றங்களுக்குக் காரணமாக இருந்தவர்களை தண்டிப்பதும் அவசியமாகும். இலங்கையில் ஜனநாயகத்தை கட்டியெழுப்புவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவ முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

**அடைக்கலமாக வந்தோரைத் திருப்பி அனுப்ப முடியுமா?**

**மேரி கிறிஸ்டைன் வேர்ஜியட் அம்மையார் (பிரான்ஸ்)**

இலங்கையிலுள்ள சகல பிரச்சினைகளையும் இந்தத் தீர்மானம் தொட்டு நிற்பதாக இல்லை. நாம் இப்போது மனித உரிமைகள் சபையின் அறிக்கையைத்தான் ஆராய்கிறோம். இலங்கை அரசானது அதிகம் அதிகமாக எதேச்சாதிகாரத்தை நோக்கி நகர்வதாக கடந்த வருடம் நாம் கேள்விப்பட்டோம். அரசு சாராத நிறுவனங்கள் தெரிவிப்பதிலிருந்து அங்கு ஒடுக்குமுறைகள் அதிகரிப்பதாகவும், இதில் தமிழ் சமூகத்தினரே அதிகமாகப் பாதிக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்த நிலைமையில் ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் நாடி வந்திருப்பவர்களை நாம் எவ்வாறு திருப்பி அனுப்ப முடியும்? அங்கே அவர்களின் உயிர்களுக்கு ஆபத்திருக்கிறது. இந்த இடத்தில் அலன் சிவன் ராஜேந்திரம் என்பவரின் விடயத்தை குறிப்பிட விரும்புகிறேன்.

*(தொடரும்)*

# தமிழருக்காக குரல் கொடுக்க ஒருபோதும் தயங்கமாட்டேன்



**"இலங்கையில் தமிழ்மக்கள் தொடர்ச்சியாக துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்து வருகிறார்கள். தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் விடயத்தில் ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் தொடர்ந்தும் மெத்தனப் போக்கையே கொண்டுள்ளன. தமிழரை அடக்கி ஒடுக்குவதிலேயே அவர்கள் குறியாக உள்ளார்கள். இதனால், தீர்வின்றி தொடர்கின்றது தமிழர் பிரச்சினை. தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எதிராக குரல் கொடுப்பதற்கு நான் ஒருபோதும் தயங்கமாட்டேன்".**

**இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை. ஆயரின் குருத்துவ பொன்விழா இன்று சனிக்கிழமை கொண்டாடப்படுகிறது. இந்நிலையில் உதயனுக்கு அளித்த விசேட செவ்வியிலேயே ஆயர் இவ்வாறு கூறினார். அவரது செவ்வியின் முழு வடிவம் இங்கே.**

*கேள்வி : குருத்துவ வாழ்வில் 50 ஆண்டுகளை நிறைவு செய்யும் நீங்கள் குருத்துவம் என்பதை எவ்வாறு அனுபவித்துள்ளீர்கள்?*

குருத்துவம் ஓர் இறை அழைப்பு. இதனை இறைவன் எனக்குக் கொடுத்த ஓர் கொடையாகவே கருதுகின்றேன். இவ் அழைப்பை ஏற்று கடந்த 50 ஆண்டுகளாக அனைவரும் இன்புற்றிருக்க என் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்துப் பணி செய்தேன். அதில் நிறைவும் மகிழ்வும் கண்டேன்.

*கேள்வி :- குருத்துவத்தில் பொன்விழா காணும் நீங்கள் இன்றைய குருக்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?*

மாறிவரும் இவ்வுலகில் ஆன்மிகம் இன்றி நற்செய்தி விழுமியங்கள் மழுங்க டிக்கப்பட்டு உலக மயமாக்கல் முதன்மைப்பட்டு வருகின்றது. இந்நிலையில் குருத் துவ அழைப்பு மிகவும் சிக்கலாகவும் கடினமானதாகவும் சவால்கள் நிறைந்த தாகவும் இருக்கின்றது. எனவே இதை எதிர்கொள்வதற்கு ஆழமான இறை பற்றும் தியாக மனப்பான்மையும் கட்டுப்பாடு கொண்ட வாழ்க்கை முறையும் அவசியமாகின்றது.

குருத்துவ அழைத்தலில் நிலையாக நின்று அர்ப்பணிப்புடன் தொண்டாற்ற, செப வாழ்வு, அனுதின திருப்பலி, தியான நாள்கள், ஆன்மிக குருக்களின் வழிகாட்டல் போன்ற ஆன்மிகக் கடமைகள் மிக மிக முக்கியமானவை என்பதை குருக்கள் உணர வேண்டும்.

*கேள்வி :- 50 ஆண்டுகளாக மிகவும் கஷ்ட மான சூழலில் குரு வாக, ஆயராக பணியாற் றினீர்கள், உங்களுடைய ஆழமான கஷ்டங்கள், சவால்கள் என்பவற்றை எவ்வாறு எதிர்கொண் டீர்கள்?*

என் பணி வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள் என்பவற்றுக்கு முகம் கொடுக்க மிகவும் உதவியது செப வாழ்வு, குருக்களின் குழுத் தோழமை உறவு, திருச்சபையில் என் மேலதிகாரிகளின் அறிவுரைகள், உரையாடல்கள், உடன் பணியாளர்களின் செபம் நிறைந்த ஒத்துழைப்பு என்பன பெரும் உதவியாயிற்று.

மிகவும் இக்கட்டான நிலைமைகளை சந்தித்தபோது என்னை அழைத்த இறைவன் என்னைக் கைவிடமாட்டார் என்ற உறுதியான நம்பிக்கை எனக்குப் பலமாக இருந்தது என்பேன்.

*கேள்வி :- யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் ராஜதந்திரிகள் உங்களையும் சந்தித்துப் பேசுகின்றனர். இதன்போது, நீங்கள் அவர்களிடம் சுட்டிக்காட்டும் விடயங்கள் என்ன?*

இங்குவரும் ராஜதந்திரிகளுக்கு நான் தமிழர்களின் அவல வாழ்வையே சுட்டிக்காட்டுகின்றேன். ஆட்சிக்கு வரும் அரசுகளால் தமிழர்கள் தொடர்ச்சியாக அடக்கி ஒடுக்கப்பட்டு வருகிறார்கள். தமிழர்களுக்குத் தீர்வை வழங்காமல், அவர்களை அடக்குவதி லேயே அரசுகள் குறியாக உள்ளன. இப்போதும், பலர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியா மல் உள்ளனர். அவர்கள் படும் இன்னல்கள் ஏரா ளம். இவற்றை எல்லாம் அரசு கண்டு கொள்வ தில்லை. இந்த நிலைமையை இங்கு வரும் ராஜதந்திரிகளுக்குத் தெளிவாக எடுத்து ரைக்கிறேன்.

*கேள்வி:- அரசுக்கு எதிராக குரல் எழுப்புவதால், உங்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றனவா?*

தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு நான் ஒருபோதும் தயங்கியதில்லை. இனியும் தயங்கப் போவதில்லை. தமிழர்களுக்கு ஒரு நிலையான நிரந்தர தீர்வு கிட்டவேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

*கேள்வி :- நீங்கள் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளீர்கள். உங்களின் ஓய்வின் காலம் பற்றிக் கூறுங்கள்?*

ஆயர் பணியில் இருந்து இளைப்பாறினாலும் எனது குருத்துவப் பணியை இறை மக்கள் மத்தியில் தொடர்ந்து ஆற்றிக் கொண்டே இருப்பேன். இறை அனுபவத்திலும் செபத்திலும் முதிர்ச்சியும் வளர்ச்சியும் காண எனது காலத்தைச் செலவிடுவேன்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மன துக்குப்பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துச் சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**இடபம்:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள். வியாபாரத்தில் வரவேண்டிய மிகுதிகளை விரைந்து பெறுவீர்கள்.

**மிதுனம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப் படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**கடகம்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும்.

**சிங்கம்:** ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்கக் கூடும். அயலார் சிலரின் செயற் பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். உத்தியோகத் தில் சக ஊழியர்களால் மறைமுகப் பிரச்சினைகள் வரக்கூடும்.

**கன்னி:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.

**விருச்சிகம்:** உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் பெருகும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**தனுசு:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். அநாவசியமாக அடுத்தவர்கள் விவகாரத்தில் தலையிட வேண்டாம். தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.

**மகரம்:** ஆரவாரமின்றிச் சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும். கன்னிப்பெண்கள் பெற்றோரின் சொல்படி கேட்டு நடப்பார்கள்.

**கும்பம்:** மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக் குரியவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். வெளியூர்ப் பயணங்கள் மகிழ்ச்சி தரும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**மீனம்:** அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

# விடுதலை




விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

கர்மம் என்னும் சொல், செயல் என்ற பொருளைத் தருவதோடு, மனோதத் துவப்படி காரண காரியத் தொடர்பு (Causation) என்னும் பொருளையும் குறிக்கும் என்பதை முன்பே கண்டோம். எந்தச் செயல், எந்த வேலை, எந்த எண்ணம் விளைவுகளை ஏற்படுத்து கிறதோ, அது கர்மா என்று சொல்லப் படும். எனவே, கர்மாவின் விதி என்பது காரண காரியத்தின் விதியே ஆகும். எங்கெல்லாம் ஒரு காரணம் இருக்கி றதோ, அங்கெல்லாம் அதனுடைய விளைவும் இருந்தே தீரும். இப்படி உண்டாகின்ற விளைவைத் தடுக்கவே முடியாது. நம்முடைய தத்துவத்தின் படி, இந்தக் கர்மாவின் விதி பிரபஞ்சம் முழு வதுக்கும் பொருந்துவதாகும். இந்தப் பிரபஞ்சத்தில் நாம் என்னவெல்லாம் பார்க்கிறோமோ, உணர்கிறோமோ , செய்கிறோமோ – பிரபஞ்சத்தில் ஏதாவது ஒரு மூலையில் என்ன நடக் கிறதோ, அவை ஒரு வகையில் கடந்த காலச் செயல்களின் விளைவுகளாகவும், வேறு வகையில் , எதிர் காலத்தில் ஒரு விளைவை உண்டாக்குவதற்குக் காரணங்களாகவும் அமைகின்றன. இப் போது விதி என்னும் சொல்லின் பொரு ளையும் அறிதல் அவசியமாகின் றது. ஒரே செயல் திரும்பத் திரும்பப் பலமுறை தொடர்ந்து ஒரே மாதிரியாக, தானாகவே நிகழும் தன்மையே விதி எனப்படும். நாம் ஒரு நிகழ்ச்சி இன் னொரு நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடப் பதைக் காணும்போதும், சில நேரங் களில் ஒன்றோடு ஒன்றாகப் பல நிகழ்ச் சிகள் ஒரே நேரத்தில் நடப்பதைக் காணும் போதும், இவை முடிவில் லாமல், தொடர்ந்து நடக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

நம்முடைய பழங்காலத் தர்க்க ஆசிரி யர்களும் , நியாயத் தத்துவவாதி களும் இப்படி நாம் எதிர் பார்ப்பதையும், அது அப்படியே நிகழ் வதுமாகிய விதிக்கு, 'வியாப்தி' என்று பெயரிட்டு அழைத் தனர். இந்த வியாப்தி தத்துவப்படி, நம் முடைய எண்ணங்கள் யாவும் ஓர் எண்ணத்தோடு மற்றொரு எண்ணம் சேர்வதால் தோன்றும் என்ப தாகும். ஒரு பொருளைப் பற்றிய தொடர்ச் சியான சில நிகழ்ச்சிகள் வரை முறை யற்ற ஒரு வகையில் நம் மனதில் ஆழப் பதிந்துள்ளன.

# பால்வெளியைப் படம்பிடிப்பதற்கான ஐரோப்பியத் திட்டம்



விண்வெளி ஆய்வு வரலாற்றில் மிகவும் பேரார்வம் மிக்க ஒரு திட்டம் என்று தம்மால் வர்ணிக்கப்படும் திட்டத்தை ஐரோப்பிய விண் ஆய்வு நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

பிரன்ஞ் கயானாவில் இருந்து கயா என்னும் விண் தொலைநோக்கி வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளது.

இது சுற்றுவட்டப்பாதையை அடைந்தபின்னர், அங்கிருந்து பால்வெளி நட்சத்திரக் கூட்டத்தை முப்பரிமாணத்தில் படம்பிடித்து முன்னெப்போதும் இல்லாத வகையில் அதன் வரைபடங்களைத் தரும்.

கோடிக்கணக்கான நட்சத்திரங்களின் நகர்வை அளந்து, அது அந்த வரைபடத்தைத் தயாரிக்கும்.

நட்சத்திரங்களில் இருந்து மிகவும் தூரத்தில் இருக்கும் அவற்றின் துணைக்கோள்கள் உட்பட விண்வெளியில் உள்ள லட்சக்கணக்கான புதிய விடயங்களையும் இது கண்டு பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இந்தப் பால்வெளி பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் உருவானபோது இருந்த நிலைமைகள் குறித்து, காலத்தால் பின்சென்று விஞ்ஞானிகள் ஆய்வு செய்யவும் இந்தத் தொலைநோக்கி உதவும்.



## நாளை

மார்கழி-07

ஞாயிற்றுக்கிழமை 22.12.2013

திதி: பஞ்சமி பி.இ.12.45 வரை

நட்சத்திரம்:

ஆயிலியம் மு.ப.11.19

சுபநேரம்:

09.25- 10.55 வரை

இராகுகாலம்:04.55 -06.25 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | | 8 | 6 | 5 |
| 7 | | | 6 | 4 | | | | |
| | 1 | | | 5 | 9 | | 7 | 4 |
| | | | | | 1 | | 8 | |
| 5 | 4 | 3 | 7 | | 6 | 1 | 2 | 9 |
| | 2 | | 4 | | | | | |
| 1 | 8 | | 3 | 6 | | | 4 | |
| | | | | 1 | 2 | | | 7 |
| 3 | 6 | 2 | | 7 | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள் கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 2 | 9 | 5 | 6 | 8 | 7 | 4 |
| 4 | 9 | 7 | 2 | 3 | 8 | 5 | 1 | 6 |
| 6 | 5 | 8 | 4 | 1 | 7 | 2 | 3 | 9 |
| 3 | 1 | 6 | 8 | 9 | 4 | 7 | 2 | 5 |
| 5 | 8 | 4 | 3 | 7 | 2 | 9 | 6 | 1 |
| 2 | 7 | 9 | 1 | 6 | 5 | 3 | 4 | 8 |
| 9 | 6 | 1 | 7 | 8 | 3 | 4 | 5 | 2 |
| 7 | 2 | 5 | 6 | 4 | 9 | 1 | 8 | 3 |
| 8 | 4 | 3 | 5 | 2 | 1 | 6 | 9 | 7 |


*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில [illegible] ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible] வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல் [illegible] தன் பொரு[illegible] தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன[illegible] இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## கருணையையும் கற்றுக் கொள்ளுங்கள்!

அண்மையில் பேருந்தில் பயணித்தபோது, ஓர் இளம் தாய், பச்சிளம் குழந்தையுடன் ஏறினாள். அனைத்து இருக்கைகளும் நிரம்பிஇருந்ததால், பலரும் நின்று கொண்டே வந்தோம். ஆனால், குழந்தையுடன் நிற்க முடியாமல் தவித்த அந்தத் தாய், பிரத்தியேக வகுப்பில் நடந்த கதைகளைச் சொல்லி அரட்டையில் மூழ்கியபடி அமர்ந்திருந்த மாணவிகள் சிலரிடம், இடம் தருமாறு கேட்க... அவர்களோ காதில் வாங்காததுபோல பேச்சில் மூழ்கி இருந்தனர். அடுத்த இருக்கையில் அமர்ந்தி ருந்த வயதான பெண்மணி, சட்டென்று எழுந்து... இளம் தாய்க்கு இடம் கொடுத்தார். நாளைய தாய்மார்களே... கல்லூரிப் பாடம் மட்டும் படித்தால் போதாது... கொஞ்சம் கருணையையும் கற்றுக் கொள்ளுங்கள் வாழ்க்கைக்கு!



## பெண்கள் அதிகம் பேசுவது ஏன்?

பெண்கள் அதிகம் பேசுவது ஏன் என்பதற்கான பதில் அண்மைக் கால ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஓர் உயிரியின் தோற்றம், செயல், பண்பு என்ற அனைத்தையும் கட்டுப்படுத்தும் காரணிகளாக அவ்வுயிரியின் மரபணுக்கள் அமைகின்றன. இம்மரபணுவின் வெளிப்பாடனது, உடலில் உற்பத்தி செய்யப்படும் புரதத்தின் மூலம் அமைகின்றது. ஓர் உயிரியில் காணப்படும் மரபணுவானது அவ்வுயிரியின் பெற்றோர்களிடமிருந்து இன செல்கள் வழியே பெறப்படுகின்றன. எனவே குழந்தைகளின் செயலும் தோற்றமும் அவற்றின் பெற்றோரைப் போல அமைகின்றன. இப்பண்புகளின் மாறுபாட்டில் சூழ்நிலையும் ஒரு குறிப்பிட்ட அளவில் தமது பங்கினைச் செலுத்தும் என்பதும் உண்மையே. ஒருசில பண்புகள் ஆண் பெண் என இனப் பாகுபாட்டுடன் காணப்படுகின்றன. ஆண் பெண்களுக்கிடையே உடல்ரீதியான அமைப்பு, நடை, குரல் முதலிய பண்புகளில் தெளிவான வேறுபாடுகள் காணப்படுகின்றன.



பொதுவாக ஆண்களைக் காட்டிலும் பெண்கள் அதிகமாகப் பேசுபவர்களாக உள்ளனர். அறிவியலாரும் இதனைப் பால் சார்ந்த பண்பாக ஏற்றுக் கொண்டுள்ளனர். பெண்கள் ஆண்களைவிட அதிகம் பேசுவதற்கான காரணத்தை அறிய மேற்கொள்ளப்பட்ட அண்மைக் கால ஆய்வின் முடிவுகள் கடந்த வாரம் நியுரோ சயன்ஸ் என்னும் ஆய்வுப் பத்திரிக்கையில் வெளியிடப் பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள மேரிலாண்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நரம்பியல் ஆராய்ச்சியாளர் மார்க்ரட் மெக்கார்த்தி மற்றும் உளவியலாளர் ஜெமைக்கேல் பவ்வர் மனிதன் மற்றும் எலிகளில் மேற்கொண்ட விரிவான சோதனைகளின் முடிவின்படி பாக்ஸ்பி2 (Foxp2) என்னும் புரதமே இவ்வேறுபாட்டுக்குக் காரணம் எனக் கண்டறிந்தனர். பாக்ஸ்பி2 புரதத்தை மொழிப் புரதம் என அறிவியலளர்கள் அழைக்கின்றனர். இப்புரதம் உற்பத்தி செய்யக் காரணமான பாக்ஸ்பி2 மரபணுவானது 2001 ஆண்டு கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்ட பல சோதனைகளும் மொழி குறித்த வேறுபாட்டுக்கான காரணத்தை உறுதி செய்தன.

பாக்ஸ்பி2 மரபணுவின் வெளிப்பாட்டினால் சுரக்கப்படும் பாக்ஸ்பி2 புரதம் பெண்களின் மூளையில் அதிகம் காணப்படுவதால் பெண்கள் ஆண்களைக் காட்டிலும் அதிகமாகப் பேசுகின்றனர். பெண்குழந்தைகளும் தமது வயதை ஒத்த ஆண்குழந்தைகளைக் காட்டிலும் விரைவாக அதிக வார்த்தைகளைக் கற்றுக் கொள்வதும் இதனால்தான்! சராசரியாக நாளொன்றுக்கு சுமார் 13000 வார்த்தைகளை ஆண்களைக் காட்டிலும் பெண்கள் பேசுகின்றனர் என்கிறது புள்ளி விவரம்.

## நோயாளியை செத்துப் போ என்று கூறிய கடிகாரம்

இங்கிலாந்தில் உள்ள மருத்துவமனை ஒன்றில் நோயாளியைப் பார்த்துக் கடிகாரம் செத்துப் போ என்று கூறியதால் பரபரப்பு ஏற்பட்டது. இங்கிலாந்தின் யார்க்ஷயரில் உள்ள ஷெப்பீல்டில் ராயல் ஹாலம்ஷயர் என்ற மருத்துவமனை செயற்பட்டு வருகிறது. இங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளி ஒருவரைப் பார்த்து, கடந்த 10ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) செத்துப் போ என்று கூறியுள்ளது. மருத்துவமனை சுவரில் மாட்டப்பட்டிருக்கும் ஜேர்மன் கடிகாரம். செத்துப்போ என்று கூறியதை நாங்களும் கேட்டோம் என்று ஸ்டூவர்ட் கார்டர் மற்றும் பியோனா பாத்ராப் ஆகிய மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

டயன்ஸ்டாக் என்றால் ஜெர்மானிய மொழியில் செவ்வாய்கிழமை என்று அர்த்தம், அதன் சுருக்கத்தைத் தான் அந்த கடிகாரம் டை என்று வெளிப்படுத்தும் செய்திகள் தெரிவித்துள்ளது. இதன் பிறகு கடிகாரம் வெளிப்படுத்தும் செய்திகள் ஆங்கில மொழிக்கு மாற்றப்பட் டது என்று அந்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.

## விண்வெளியில் தங்கினால் எப்படி இருக்கும்?

விண்வெளி ஓடங்களில் பயணிக்கும்போது, விண்வெளி வீரர்கள் அனுபவிக்கும் சில அடிப்படை அனுபவங்களைப் பார்க்கலாம். ஒரே நாளில் சுமார் 16 சூரிய உதயங்களைப் பார்க்கலாம்! விண்வெளியில் பயணிக்கும்போது 90 நிமிடங்களுக்கு ஒரு முறை என்ற ரீதியில் சூரிய உதயத்தைப் பார்க்கலாம். இதனால், விண்வெளி வீரர்கள் தூங்குவதற்கு சிரமம் ஏற்படுகிறது. உயரம் அதிகரிக்கும்!

வெளியில் புவியீர்ப்பு விசை இல்லாமையால், பயணிப்பவர்களின் உயரம் 5 தொடக்கம் 8 சென்றி மீற்றர் வரை உயரம் அதிகரிக்கும். இதனால், இடுப்புவலி - நரம்புப் பிரச்சனைகள் ஏற்படும். குறட்டைத் தொல்லை இல்லை! பூமியில் குறட்டை விட்டுத்தூங்கும் விண்வெளி வீரர்கள், விண்வெளியில் குறட்டைச்சத்தமில்லாது தூங்குகிறார்கள். இதற்கான காரணம் புவியீர்ப்பு விசையாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

### உப்பில்லை மிளகில்லை!

விண்வெளி வீரர்கள் உண்ணும் உணவில் தூவுவதற்கு உப்போ, மிளகோ கொடுக்கப்படுவதில்லை. காரணம், அவற்றை உணவில் கொட்டிச் சாப்பிட முடியாது. அதனால், உப்பும் மிளகும் திரவ வடிவிலேயே கொடுக்கப்படும். எனினும், அத்திரவம் அடைக்கப்பட்ட பைகள் விண்ணோடத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதால் இப்போது தவிர்க்கப்படுகிறது. பெரும்பாலும் மாத்திரைகளாகப் பயன்படுத்தப்படுகிறது. விண்வெளியில் பயணித்தவர்களில், கிட்டத்தட் அனைவருமே அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

புவியீர்ப்பு விசை இல்லாமையால், தமது உடல் தலைகீழாக இருப்பதாக உணர்வுடன் அவர்களின் கால், கை உட்பட்ட பாகங்களின் உணர்திறன் குறைப்பாட்டையும் உணர்கிறார்கள.

1995 ஆம் ஆண்டில், Valeri Polyakov என்ற ரஷ்ய விண்வெளியாளர் சுமார் 438 நாள்கள் விண் ணில் இருந்து நீண்ட காலம் விண்ணில் இருந்தவர் என்ற சாதனையை ஏற்படுத்தியுள்ளார். கிட்டத்தட்ட 1000 விண்வெளி வீரர்கள் இதுவரை விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டிருந்தாலும், இதுவரை 3 விண்வெளியாளர்கள் மாத்திரமே விண்வெளியில் சாவடைந்துள்ளார்கள். 18 பேர் விண்ணோட விபத்திலும், 11 பேர் பயிற்சியின் போதும் சாவடைந்துள்ளார்கள்.


விண்வெளி வீரர்கள் உண்ணும் உணவில தூவு வதற்கு உப்போ, மிளகோ கொடுக்கப்படுவதில்லை. காரணம், அவற்றை உணவில் கொட்டிச் சாப்பிட முடியாது. அதனால், உப்பும் மிளகும் திரவ வடிவி லேயே கொடுக்கப்படும்.



# மரண அறிவித்தல்

## அருணாசலம் நமசிவாயம்

(இளைப்பாறிய ஆசிரியர்- புல்லாங்குழல் வித்துவான்-கலாபூஷணம், வேணுகானமணி)



யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் நமசிவாயம் 17-12-2013 செவ்வாய்க்கிழமை தெகிவளையில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நமசிவாயம் சிவமுத்து அவர்களின் அன்புக் கணவரும், சிவசுந்தரி சிங்கராஜா, கலாவதி தியாகராஜா (பிரான்ஸ்), வாசஸ்பதி (பிரான்ஸ்), தயாபரசுந்தரி மகேஷரட்ணம், தயாபரன் (கனடா), தர்மவதி சிவகுமார் (ஐக்கிய அமெரிக்கா), ஸ்ரீசத்திய நாராயணன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கமணி வேலாயுதபிள்ளை, கதிரமலைநாதன், கலைவாணி திருநாவுக் கரசு, காலஞ்சென்ற பொன்னம்பலநாதன் ஆகியோரின் மூத்த சகோதரரும், சிங்க ராஜா, தியாகரரஜா, கந்தராஜி, மகேஷரட்ணம் (சிங்கர்), சுதர்சினி, சிவகுமார், சாந்தி ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம், கனகரட்ணம், மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸாரங்கன், லலிதரூபன், அபிராமி, ராகவன், மனோசாந், நிரூசாந், ஆரபி, பிரணவி, சுஜீவன், வைஷ்ணவி, மேதா, மயூரன், பிரார்த்தனா, சந்தரஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (20-12-2013) வெள்ளிக்கிழமையிலிருந்து இன்று (21-12-2013) சனிக்கிழமை வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 8 மணி வரையிலும் நாளை (22-12-2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒருமணி வரையிலும் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் கல்கிசை மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொ.பே. 011 271 4755, 011 273 3084,
077 603 8860, 077 507 6082,
077 314 7961, 077 738 9696

(சி/10249) (2.6.3)

தகவல்: குடும்பத்தினர்

# கைவிடப்பட்ட வாகனங்களை உரிய முறையில் கையளிக்குக

*வன்னி மக்கள் கோரிக்கை*

வவுனியா, செப். 21

வவுனியா மாவட்ட செயலகத் தில் உள்ள, வன்னிப் பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்ட பொது மக்களின் வாகனங்களை உரிய வகையில் கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண் டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பகுதியில் இடம்பெற்ற போரின்போது அந்தப் பகுதி மக்கள் தம்மால் பாவிக்கப்பட்ட வாக னங்களைக் கைவிட்டு இடம் பெயர்ந்து வவு னியாவை வந்தடைந்தனர்.

இவர்களுடைய வாகனங்கள் அந்தப் பகுதியில் இருந்து இரா ணுவத்தினரால் அகற்றப் பட்டு அதில் ஒரு தொகுதி வவுனியா மாவட்டச் செயலகத்தில் நீண்ட காலமாக மழை, வெய்யிலின் மத்தியில் உருக்குலையும் நிலையில் நிறுத்திவைக்கப் பட்டுள்ளன.

வாகன இலக்கம், வாகன வகை உட்பட பல் வேறு தகவல்களை, உரிய வகை சம்பந்தப்பட்ட பகுதியில் எடுக்கப்பட்ட விவரங்களை வெளி யிடுவதன் மூலம் வாகன உரிமையாளருக்கு அந்த வாகனங்களை கைய ளிக்க முடியும் என பொது மக் கள் எதிர்பார்க்கின்றனர். பெறு மதி வாய்ந்த பல வாகனங்கள் வீணடிக் கப்படாது விரைவில் உரிய வகையில் அவற்றின் உரி மையாளர்களிடம் கையளிக்குமாறு வேண்டு கோள் விடுக்கப்பட்டு வருகிறது. (ந-402)

## வரவேற்பு நிகழ்வு

கல்வி மாணிப் பட்ட கற்கை நெறியின் 2013/ 2015 அணியின் புதுமுக மாணவர்களுக் கான வரவேற்பு நிகழ்வு இன்று சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில் த. செல்வகுமார் தலை மையில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபரும், கல்வி மாணிப்பட்ட கற்கை நெறியின் நெல்லியடி இணைப் பாளருமாகிய செ. சேதுராஜா கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-422)

## நீதிபதிகள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், செப். 21

சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றும் செ.லெனின் குமார் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதியாக இடமாற்றம் செய் யப்பட்டுள்ளார்.

இவரது இடத்துக்குப் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

2014 ஜனவரி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நீதிச் சேவைகள் ஆணைக் குழு வினால் இந்த இடமாற்றங்கள் வழாங் கப்பட்டுள்ளன. (ந-9)

## வலிப்பு ஏற்பட்டு சிறுவன் சாவு

வலிப்பு ஏற்பட்டு 8 வயதுச் சிறுவனொருவன் உயிரிழந்தான். நோய் வாய்ப்பட்டிருந்த அந்தச் சிறுவனுக்கு நேற்று வெள்ளிக் கிழமை அதிகாலை வலிப்பு ஏற்பட்டதை அடுத்து வைத் தியசாலைக்கு கொண்டு வரும் வழி யில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. மிரு சுவில் தவசிக்குளத்தைச் சேர்ந்த ரமேஸ் தனுஸ் (வயது-8) என்னும் சிறுவனே உயிரிழந்தவர் ஆவார்.

சிறுவனின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலை சவச்சாலையில் வைக்கப் பட்டுள் ளது. கொடிகாமம் பொலிஸார் விசா ரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-9)

## சட்டமாணிக் கருத்தரங்கு

இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி அனுமதிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இந்த முறையும் நாடு தழுவிய ரீதியில் இடம்பெற வுள்ளது.

கடந்த காலங்களில் கணிசமான மாணவர்களை தமிழ்மொழி மூலம் சித்தியடையச் செய்த சட்டத் தரணி எம்.ஐ.உவைசுர் ரஹ்மான் தலைமை யிலான வளவாளர்கள் இதனை ஏற்பாடு செய்துள்ளனர்.

இதன் முதலாவது கருத்தரங்கு எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண் டபத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். (ந)

## 2 மணி வரை வங்கி

வருட இறுதித் தினமான டிசெம்பர் 31 ஆம் திகதி வங்கி நடவடிக்கைகள் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும் என்று மக்கள் வங்கி யின் சாவகச்சேரி கிளையினர் அறிவித் துள்ளனர். குறித்த தினத்தில் வாடிக்கை யாளர்கள் நேரத்துடன் வங்கியில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## பொதுக் கூட்டம்

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய பழையமாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடை பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற உள்ளது. பழைய மாணவர்களை இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு செயலாளர் இ.திருப்புகழுர்சிங்கம் கேட்டுள்ளார். (ந-250)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் துரைச்சாமி சந்திரபாலன்

**சிரார்த்தம்: 21.12.2013 சனிக்கிழமை**

*திதி:நிர்ணய வெண்பா*

ஆண்டு நல் நந்தன ஆனமார்கழிசே ரபரபக்க
பூண்ட சதுர்த்தித் திதிதன்னில் - நீண்ட புகழ்
கொண்டேசந் திரபாலன் தன்மருதடிவி நாயகரை
வேண்டி விரைந்திட்ட நாள்



ஆண்டு ஓராண்டானாலும் அப்பா உங்கள் நினைவு அகலவில்லை ஒருபோதும்
மீண்டும் நீங்கள் வர ஏங்கும் எங்கள் மனம் உங்கள் வரவு நிஜமல்ல என ஏற்க மறுக்கிறது
கண் நிறைந்த உங்கள் தோற்றம் உயரிய குணம் கனவினில் வந்து வருத்துகிறது
எண்ணமெல்லாம் நிறைந்த தந்தையே ஏங்குகின்றோம் உங்கள் இழப்பால்
காலம் கடந்து வந்தாலும் நாங்கள் கலங்கிய விழிகளோடு தான் வாழ்கின்றோம்
அன்பின் திருவுருவாய் குடும்பத்தின் தலைமகனாய்
மனம் நிறைந்த கணவனாய் பாசமிகு தந்தையாய்
உறவினரின் பாசமலராய் ஊர் போற்றும் உத்தமனாய்
நீங்கள் வாழ்ந்த காலங்கள் நெஞ்சில் என்றென்றும்
பசுமையாய் நிலைத்திருக்கும்

தோற்றம் 29.11.1965 — மறைவு 01.01.2013

**மனைவி - வடிவாம்பிகை, மகன் - நிர்மலராஜா, மகள்மார் - இளவேனி, கீர்த்தனா.**

2ஆம் குறுக்கு வீதி, பருத்தித்துறை.

(42701)(12.3.6)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

**தம்பையா கந்தையா** (துரையப்பா)



கடந்த 12.11.2013 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் சடங்கில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், தந்தி தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி அனுப்பி எமது துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் மேலும் உதயன் பத்திரிகை நிறுவனம், நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு

நாளை (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை சுழிபுரத்திலுள்ள

*எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

பத்திரகாளி கோயிலடி,
சுழிபுரம். (42796)(2.6)

**குடும்பத்தினர்.**

---

## இரண்டாம் ஆண்டு அஞ்சலித்தீபம்



## அமரர் கந்தையா பொன்னையா

(வர்த்தகர்)

ஜனனம் 15 * 04 * 1927 — சிவபதம் 13 * 01 * 2012

*திதி: அபரபக்க சதுர்த்தி (21.12.2013)*

அப்பா என்ற உறவு எமைப் பிரிந்து ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறவில்லை எம் மனதில் உங்கள் நினைவுகள்
தோளினிலே தாலாட்டி நெஞ்சினிலே உறங்க வைத்து
பாரினிலே எமையிங்கு நற்பாதையிலே நடக்க விட்ட அப்பாவே!

அப்பாதையையே நாம் தொடர்வோம் எந்நாளும்
ஆழ்கடலில் துரும்பாகி அலறுகின்றோம் அப்பாவே!!
ஏழ் பிறப்பிலும் உங்கள் நினைவுகளுடன் வாழ்ந்திடுவோம்
என்றும் உங்கள் நினைவுகள் நீங்காமல் எம் மனதில் நிலைத்திருக்கும்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு. (42866)(2.6)

**குடும்பத்தினர்.**

---

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 . 07 . 1940 — இறப்பு 21 . 12 . 2007



## தம்பிப்பிள்ளை செல்வரத்தினம்

**எங்கள் இதய தெய்வமே சின்னையாவே!**
**தன் அடியை இருட்டாக்கி**
**ஒளியைப் பரவவிடும் விளக்கைப் போல**
**உங்களை இருட்டாக்கி**
**எங்கள் வாழ்வை ஒளிர விட்ட**
**எங்கள் தெய்வம் சின்னையாவே!**
**ஆறு ஆண்டுகள் கடந்தால் என்ன?**
**இன்னும் பல ஆண்டுகள் கடந்தாலும்**
**எங்கள் எண்ணங்களில் என்றென்றும்**
**ஒளி விடுவீர்கள்.**

அல்வின் வீதி,
காரைநகர்.

ஐயாத்துரை (காந்தி)
குடும்பத்தினர்.

---

## பிரபஞ்சக் கல்வியும் பிணியற்ற வாழ்வும்

காரைநகர், டிசெ.21

காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் பிரபஞ்சக் கல்வியும் பிணியற்ற வாழ்வும் என்ற தொனிப்பொருளில் யோகாசனம் மற்றும் கலை நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யோகா ஆரண்ய குரு முதல்வர் ந.ஆறுமுகம் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கமும் சிறப்பு விருந்தினராக பிரிட்டனில் இருந்து வருகை தந்துள்ள சிறி யோகிராம் சுந்தரும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செய லாளர் ப.விக்னேஸ்வரன், தீவகக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் ஆரண்ய பிரசாதம் நூல் வெளியீடும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ந-250-7)

## கலந்துரையாடல்

சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் இலங்கை சமசமாஜக் கட்சியின் 78 ஆவது வருட நினைவாக 'சமதர்ம இயக்கமும் சமகால அரசியலும்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.டி.எம்.எஸ். தனியார் கல்வி நிறுவனத்தில் ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறும். ஆரம்ப உரையை சொ.சிவபாலன் நிகழ்த்துவார். (ந)

### தைப் பொங்கல் வரை வர்த்தக நிலையங்கள் திறந்திருக்கும்

நத்தார் மற்றும் புதுவருட தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண வர்த்தகர்கள் தங்களது வர்த்தக நிலையங்களை 15.12.2013 ஆம் திகதி முதல் 01.01.2014 ஆம் திகதி வரை திறப்பதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கியிருந் தது. தற்போது வர்த்தகர்களின் வேண்டு கோளுக்கமைவாக இந்தச் சலுகைக்காலத்தை 14.01.2014 தைப் பொங்கல் வரை நீடிக்க யாழ். வணிகர் கழகம் அனுமதியளித்துள்ளது.

எனி னும் விடுமுறை தினங்களில் பணியாற்றும் ஊழியர்களின் நலன்கள் பேணப்பட வேண்டும் என வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. (ந)

## உள்ளக வீதிகள் புனரமைப்பு

### *9 மில்லியன் செலவில்*

கிளிநொச்சி வட்டக்கச்சி சிவிற் சென்ரர் உள்ளக வீதிகள் நெல்சீப் 2013 திட்டத்தின் கீழ் சுமார் ஒன்பது மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள வட்டக்கச்சி சிவிற் சென்ரர்கிராமத்தின் கிராமிய வீதிகள் நீண்டகாலமாக புனரமைக்கப் படாது இருந்து வந்துள்ளன.

தற்போது கரைச்சிப் பிரதேச சபை நெல்சீப் திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் இந்த உள்ளக வீதிகளைத் தெரிவு செய்து புனர மைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ந-6)

## மெல்பேர்ணில் நாகமாலை இறுவட்டு வெளியீடு

வரலாற்றுச்சிறப்புமிக்க வடமராட்சி நாகர் கோயில் பூர்வீக நாக தம்பிரான் சுவாமி ஆலயத்தின் பெருமைகளையும், சிறப்புக்களையும் வெளிப்படுத்தும் பத்துப் பாடல்கள் கொண்ட நாகமாலை இறுவட்டு வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை ஆஸ்திரேலியா மெல்பேர்ணில் நடைபெறவுள்ளது.

நாகர்கோயில் விஜயரத்தினம் அருள்ஜோதியும், தென்னிந்திய பிரபல பாடகர்களான எஸ்.பாலசுப்பிரமணியம், சீர்காழி சிவசிதம்பரம், உன்னிகிருஷ்ணன், அனுராதா ஸ்ரீராம், ஹரிசினி, மாலதி, வசந்தவி, ஆனந்து ஆகியோர் பாடல்களைப் பாடியுள்ளனர். (ந-8)

---

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**வல்லிபுரம் இராசமணி**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



தோற்றம் 27*03*1924 — மறைவு 13*01*1993

ஆண்டுகள் இருபது ஓடி
மறைகின்றன
யாண்டும் உம் நினைவுகள் எம்
நெஞ்சில் நிறைகின்றன.

என்றென்றும் மாறாத
நினைவுகளுடன்

இல.100 நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (42757)(3.6.4)


**குடும்பத்தினர்.**

---

## 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சீ. செல்லத்துரை**

*(முன்னாள் - மேற்பார்வை உத்தியோகத்தர்*
*யாழ்.போதனா வைத்தியசாலை)*



தோற்றம் 09.02.1957 — மறைவு 21.12.1987

குடும்பத்தின் குலவிளக்காய்
கருணையினை நெஞ்சில் வைத்து
குவலயம் போற்ற சிறப்புற்று வாழ்ந்து
எம்மையெல்லாம் ஆளாக்கிய எம்
அன்புத் தெய்வமே! உங்களை நாம்
மறப்பதெப்படியோ!!!

(42862) (7.6)

ஈஸ்வரி வாசம்
உரும்பிராய் மேற்கு,
[3 கோயிலடி] உரும்பிராய்.

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

---

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் முத்துராசா இளங்கோ

(தச்சந்தோப்பு,கைதடி)

பூ மலர்ந்தது 28.04.1988 — பூ உதிர்ந்தது 23.09.2013

கடந்த (23.09.2013) அன்று சிவபதமடைந்த எமது செல்வப் புதல்வன் முத்துராசா இளங்கோ அவர்களின் வீட்டுக் கிருத்தியம் இன்று (21.12.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தச்சந்தோப்பு (கைதடி)** (42795)(3.6.4) **குடும்பத்தினர்.**

---

சிவமயம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 22.11.2013 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்



**சதாசிவம் விசுவலிங்கம்**

(துரை 4647)

அன்னை மடியில் 04.10.1943 — இறைவன் அடியில் 22.11.2013

**அன்னாரின் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரணம் நாளை (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதமாக வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (42860)(12.6)

**குடும்பத்தினர்.**

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு: 021 5671111 advt@uthayan.com

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும்
திருமதி குயிலினி சுரேஸ் அவர்களின் அன்புத் தந்தை
**கிருஸ்ணர் கமலசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய உத்தியோகத்தர்**
**நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.**

(42799) (7.6)

## மரண அறிவித்தல்

### திருமதி பூலோகநாயகி தங்கவடிவேல்



யாழ். வட்டுக்கோட்டை சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா Abbey Wood ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பூலோகநாயகி தங்கவடிவேல் 12-12-2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா-தங்கமணி தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-சிவபாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், தங்கவடிவேல் அவர்களின் பாசமிகு மனைவியும், ஜானகி(பிரித்தானியா), யோகன்(பிரித்தானியா), மேனகா(பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சற்குணவதியம்மா, தீபதூபநாதபிள்ளை மற்றும் நாகேஸ்வரியம்மா, கமலநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பொன்னையா, காலஞ்சென்றவர்களான அருட்சிகாமணி, பாலசுப்பிரமணியம் மற்றும் நச்சினார்க்கினிய சிவம், காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் பூலோகரம்பை ஆகியோரின் மைத்துனியும், இராமேஸ்வரன், சிவனேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிந்துஜாவின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**கணவர், பிள்ளைகள்.**
பொ.ரவிச்சந்திரன்
வட்டுக்கோட்டை
சிவன்கோயிலடி.

No. 28 Brinkburn Close,
Abbey Wood,
SE 2 9EJ.

(சி/10381)(7.6.3)

## இலட்சார்ச்சனை பெருவிழா இன்று ஆரம்பம்

இணுவில், மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் இலட்சார்ச்சனைப் பெருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

தினமும் காலை 9 .30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து இலட்சார்ச்சனை நடைபெறும். பகல் 11.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ. வை.நித்தியானந்த சர்மா "கம்பராமாயணம்" பற்றி தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நிகழ்த்துவார். தினமும் பகல் அன்னதானம் நடைபெறும் என ஆலய ஆதீன கர்த்தா அறிவித்துள்ளார். (ஒ)

## யாழ். மாநகரசபையின் ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிசெ.21.

யாழ். மாநகர சபையினரால் முன்னெடுக்கப்படும் ஒளிவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாநகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவின் போது ஒளிவிழா தொடர்பாக கலாசாரப் பிரிவினரால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கான பணப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படும். (ந)

## யோகா பயிற்சி அறிமுக நிகழ்வு

'யாழ். யோகா அரங்கத்தினர்' நடத்தும் யோகா பயிற்சியின் அறிமுக நிகழ்வு அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் (நல்லூர் தேரடி அருகே) நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோக அரங்க இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் ஆரம்பமாகின்றது.

யோகா பயிற்சி வகுப்புக்கள் காலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை தொடர்ந்து 20 நாள்கள் நடைபெறும். உடல், உள ஆரோக்கியத்துக்கு மிகவும் அவசியமான ஆசனப் பயிற்சிகள், சூரிய நமஸ்காரம், பிராணாயாமம், சாந்த வழிமுறை மற்றும் தியானப் பயிற்சிகள் தெரிவு செய்யப்பட்டு அனுபவமுள்ள யோகா ஆசானால் நுட்பமாகப் பயிற்சி வழங்கப்படுவதுடன் கையேடுகளும் வழங்கப்படும். ஆர்வமுள்ள அனைவரும் பயிற்சி நெறியில் இணைந்து பயன் பெற முடியும் என்று யாழ்.யோகா அரங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ)

## மரண அறிவித்தல்



### செல்வி கந்தையா தங்கலெட்சுமி

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை, மாதங்காவத்தை, இல 32 - 3/4இல் வசித்தவருமான செல்வி கந்தையா தங்கலெட்சுமி 14.12.2013 மு.ப.10.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், க.மகாலிங்கம் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் - லண்டன்), காலஞ்சென்ற சோதிலிங்கம் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்), திருமதி சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருமதி நாகரத்தினம், பொ.இராசரெத்தினம் (இளைப்பாறிய இலிகிதர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமதி திலோத்தமை (கனடா), திருமதி சரோஜா (பிரான்ஸ்), சற்குருநாதன் (ஜேர்மனி), திரிலோகநாதன் (ஜேர்மனி), திருமதி விஜிதா (கனடா) ஆகியோரின் அன்புச் சிறியதாயும், திருமதி மைதிலி (கனடா), திருமதி மாலதி (பிரான்ஸ்), திருமதி மாலினி (பிரான்ஸ்), திருமதி ரஜனி (கனடா), கதிர்காமலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், பிரசன்னா, பிரவீன், பிரியங்கா, பிரியங்கன், நிவாசினி, வினோஜா, வித்தியா, யோகினி, ஆகாஷ், அபிஷா, அஸ்வினா, பிரித்திக்கா, பிரகாஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.12.2013) சனிக்கிழமை மு.ப.9.00 மணிக்கு கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.7.00 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இல.32 - 3/4, மாதங்காவத்தை,
Rasika Tower, வெள்ளவத்தை.
2365697

தகவல்
**பொ.இராஜரெத்தினம்**
**(மைத்துனர்).**

(பெ10388)(12.6)

# மரண அறிவித்தல்

## இராஜநாதன் கிருபராஜா



சாவகச்சேரி நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டன் Harrowவை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜநாதன் கிருபராஜா 18.12.2013 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜநாதன் மற்றும் ஞானமுத்து (BiBiteacher) தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், நவரத்தினம்-தேவஞானி(மின்தறிஆலை சாவகச்சேரி) தம்பதியினரின் பாசமிகு மருமகனும், சிவசக்தியின் அன்புக் கணவரும், நிருபா, கிருஷ்ணி, விதுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஞ்சிதனின் அன்பு மாமனாரும் விக்னராசா, ஜெயராஜா, அமிர்தா, காலஞ்சென்றவர்களான தேவராஜா, ரூபராஜா ஆகியோரின் அன்புச்சகோதரரும், காண்டீபன், சுதர்சினி, செல்வராணி, சுகிர்தா, கலைமதி, சிவானந்தன், காலஞ்சென்ற நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2013) சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு (Hendon Creuatorium, Holders, Hill Road, Mill Hill, NW 71 NB லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சக்தி:00447894748845/
00447956280938

தகவல்:
**மாலினி நடேசன்**
**சாவகச்சேரி.**

(33046)(3.6.4)

## நெஞ்சைவிட்டகலா நினைவுகளில் முதலாம் ஆண்டு நினைவு



உயிர்ப்பு 16.09.1949 — சங்கமம் 01.01.2013

அமரர் சபாபதி
### அருமைரத்தினம்
(சன் ஆட்டோ உரிமையாளர்)

திதி: 21.12.2013

ஊர் போற்ற வாழ்ந்தீர்கள்
உறவுகள் மகிழ்ந்திட நடந்தீர்கள்
பிள்ளைகள் உயர்ந்திட
உழைத்தீர்கள்
இறுதியில் கண்ணீரில்
நனையவிட்டு சென்றீர்கள்

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (42669)(10.6) குடும்பத்தினர்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஜெகநாதன் சிவவதனி
(ஆசிரியை - கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம்)



தோற்றம் 17.04.1977 — மறைவு 21.12.2006

கருணைக்கடலாய் பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
ஊர் போற்றும் உத்தமியாய்
பண்புள்ளம் கொண்டு
உயிரோடு உறவுதந்து
பிரியாத பாசமும் தந்து -
வெள்ளைநிறப்பூவாக எங்கள்
உள்ளக் கமலத்தில்
உறைந்திருக்கும் வதனியே!
பாதியில் எமைப் பிரிந்து
கடந்தது ஏழு ஆண்டுகள்
ஆறாத் துயருடன் தவிக்கின்றோம்.
மீண்டும் வருவாய்
எம்மிடம் என்ற நம்பிக்கையில்.

உன் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.
முருகமூர்த்தி கோயிலடி, உடுவில். (42872)(12)(6)

## மரண அறிவித்தல்

### அண்ணாமலை பொன்னுத்துரை



கூழாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தையிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாமலை பொன்னுத்துரை 17.12.2013 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கெங்காதேவியின் கணவரும், காலஞ்சென்றவர்களான அண்ணாமலை-சுந்தரம் தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், தம்பையா, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தையிட்டி சீனியர்-வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், பண்டாரியின் மைத்துனரும், காலஞ்சென்ற அருமைநாயகம் மற்றும் சௌந்தரநாயகம், அன்னலட்சுமி, நாகேஸ்வரன், பரமேஸ்வரன், இராசலட்சுமி ஆகியோரின் அன்புத்தந்தையும், கனகரத்தினம், யோகேஸ்வரி, புஸ்பதேவி, வனஜா, கார்த்திகா, சிவராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சா, மதன்றாச், கோமதன், கிருத்திகா, சஞ்சிகா, சதீஸ்வரன், கோபிநாத், பிருந்தா, பிரேமிகா, ஐஸ்வினி, அபிவரன், குணரதன், அற்சகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை புழுதிப்பாக்கம் இந்தியாவில் நடைபெறும்.

T.P:00919940545700 இந்தியா (42852)(3.6.4)

நான் கர்த்தருடைய வீட்டில் நீடித்த நாள்களாய் நிலைத்திருப்பேன்
சங்- 23:6

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சிவலிங்கம்



வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் ஸ்ரீநாராயணா வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிவலிங்கம் நேற்று (20.12.2013) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு-பாக்கியம் தம்பதியரின் அன்புமருமகளும், சிவலிங்கத்தின் அன்புமனைவியும், சிவரூபி (றூபி), சுதர்சினி (சுதா), சசிகரன் (றோசன்), சுஜாரத் (றேகன்), சுவர்ணராஜ் (ராஜ்), சுவர்ணமுகி (மேனகா) ஆகியோரின் அன்புத்தாயும், கௌசலா தனுஷா (தனு), விஜியகுமார் (விஜி), கஜிபன் (கஜி), தர்சினி (அவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், செல்வராசா-குஞ்சுராசா மகாதேவி காலஞ்சென்றவர்களான சின்ராசா மகாலட்சுமி ஆகியோரின் அன்புசகோதரியும், சாருஜன்-பிரியதர்சினி, விகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை இன்று (21.12.2013) சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் கோண்டாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக கோண்டாவில் கொட்டைக்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சிவலிங்கம் (கணவர்), சி.றேகன் (மகன்).
T.P.No:0776699283

ஸ்ரீநாராயணா வீதி,
கோண்டாவில். (42861)(10.6)

## கூட்டுறவுச் சங்கத்தை புனரமைத்து வழங்கவும்

*மன்னாகண்டலில் கோரிக்கை*

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள மன்னாகண்டல் கூட்டுறவுச் சங்கத்தைப் புனரமைத்து சகல பொருள்களையும் மக்கள் பெற்றுக்கொள்வதற்கு ஆவன செய்யுமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த போரின் போது மன்னா கண்டல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சேதமடைந்தது. மக்கள் மீளக்குடியமர்ந்த போதிலும் இந்தச் சங்கம் இது வரை புனரமைக்கப்படாது ஒரு கிளையுடன் மட்டுமே வேறொரு இடத்தில் இயங்கிவரு கிறது. தற்போது சேதமடைந்த நிலையில் காணப்படும் போதிய இட வசதிகளைக் கொண்ட இந்தச் சங்கத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் மக்கள் காணப்படுகின்றனர்.

(க-500)

## பிச்சைப் பணத்தில் தள்ளாடியவர் வாங்கிக் கட்டினார்


மதுபோதையில்பிச்சை கேட்டு வந்த ஒருவருக்கு தர்ம அடி வழங்கப்பட்ட சம்பவம் அண்மையில் வவுனியா பஸ் நிலையத்தில் இடம்பெற்றது. வவுனியா பஸ் நிலையத்தில் பஸ்கள், பஸ் தரிப்பிடங்கள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் பெருமளவு பிச்சைக்காரர்கள் பிச்சை எடுத்துவருகின்றனர். இவர்களில் வறுமையில் வாடும் மாற்றுத் திறனாளிகளும் உள்ளனர். சிலர் மது அருந்துவதற்காகவும் பிச்சை எடுக்கிறார்கள்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை வர்த்தக நிலையமொன்றில் பணம் தருமாறு மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவருக்கு இரங்கிய வர்த்தகர் ஒருவர் இருபது ரூபாவைக் கொடுத்தார். பின்னர் இவர் மது போதையில் தள்ளாடி வருவதை அவதானித்த அந்த வர்த்தகர் இது தொடர்பாகக் கேட்ட போது மதுபோதையில் இருந்தவர் தகாத வார்த்தைகளால் அவரைத் திட்டினார். இதனை அவதானித்த அந்த வர்த்தக நிலைய ஊழியர்கள் அவரை மடக்கிப் பிடித்து தர்ம அடி வழங்கினார்கள்.

(க-402)

After O/L
edexcel | University of Wolverhampton

யாழ் நகரில் சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்



பட்டப்படிப்புக்கான ஓர் அடிப்படை பாடநெறி

4 Certificates
with Communication Skills

Duration
3 Months, Full time

English + IT
Over 300 hrs Practical Training

IBP
Intensive Bridging Programe

ISO 9001:2008 CERTIFIED
15 Years of Trust & Excellence in Higher Education

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk


16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Corporate Office 32, Dharmarama Road, Colombo 06, Sri Lanka. Tel: 011 2501135
Kandy Campus 344, Peradeniya Road, Kandy, Sri Lanka. T: 081 2224731
Batti Campus 294, 1/4, Trinco Road, Batticaloa, Sri Lanka. T: 065 2228451
Wayamba Campus 103, Dambulla Road, Kurunegala, Sri Lanka. T: 037 2233339

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

## மரண அறிவித்தல்

### அம்பலம் சின்னத்துரை



பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் சிவன்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் சின்னத்துரை நேற்று முன்தினம் (19.12.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம் - இளையபிள்ளை தம்பதிய ரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், தம்பிஐயா, ஆச்சிப் பிள்ளை, செல்லாச்சி, சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரனும், சிவபாக்கியத் தின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி, நகுலேஸ்வரன், சிவநந்தினி, ஜெயநாதன், சிவயோகராணி, வசந்தராணி (பிரானஸ்), நந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறைசூடி, இராஜேஸ்வரி, சிவநாதன், அருந்ததி, செல் வேந்திரன் (லண்டன்), பிரபாகரன் (பிரான்ஸ்), கோகுலவேணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், சதாஜினி (ஆசிரியை), துவாரகா (முகாமைத் துவ உதவியாளர்), விஜிதரன், பதுமிகா, பானுஜன், நிலக்ஷன், பிந்துஜன், கவிராஜ், சங்கீத், சுஸ்மிதா, துவிகரன், டினுஸ்கா, கதுர்ஷிகா (பிரான்ஸ்), கதுர்ஷிகன் (பிரான்ஸ்), அபிரன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் அக்சியாவின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, நாளை (22-12-2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கொட்டியடி தூவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

சிவன் கோயிலடி, மட்டுவில். (சி/10391) (2.6.)

# அடுத்த ஆட்சியாளரை பௌத்தர்களே தீர்மானிப்பர்

*அமைச்சர் விமல் வீரவன்ச கருத்து*

கொழும்பு,டிசெ.21

இலங்கையின் அடுத்த ஆட்சி யாளர் சிங்கள - பௌத்த வாக்காளர்களாலேயே தீர்மானிக்கப்படுவர் என்று வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். பேலியகொடையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். எதிர்காலத்தில் நாட்டின் மக்கள் ஆணையைப் பெற திட்டங்களை வகுக்க வேண்டும். சிங்கள-பௌத்த மக்களே அடுத்த ஆட்சியாளரைத் தீர்மானிப்பர் என்று அவர் தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டு கிடைத்த மக்கள் ஆணைக்கு ஓர் அர்த்தம் இருந்தது. விடுதலைப் புலிகளை ஒழிக்குமாறு கோரியே அன்று அந்த மக்கள் ஆணை வழங்கினர் என்று அவர் குறிப்பிட்டார்.

வருங்காலத்தில் மக்கள் ஆணையை பெறத் திட்டங்களை வகுக்க வேண்டும். பௌத்த - சிங்கள வாக்காளர் களைக் கவர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித் தார்.(ச)

# ஒன்று கூடல்

இமையாணன் அ.த.க.பாடசாலை பழைய மாணவர்களுக்கான விசேட ஒன்றுகூடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத் தலைவர் சி. வசந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் த. விஜயசங்கர் கேட்டுள்ளார். (-400)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



15.12.2013இல் கலாசார அமைச்சினால் கௌரவிக்கப்பட்டு "கலாபூஷண" விருதைப் பெற்ற

**வயிரமுத்து சிவநேசன்**

அவர்கள் உடுவில் முருகமூர்த்தி ஆலயத்தில் பெரும் தொண்டனாகவும், ஓதுவாராகவும், புராண படனங்கள் செய்பவராகவும், பஜனைகள் திருவாச முற்றோதல் போன்ற புண்ணிய கருமங்கள் செய்பவராகவும் முருகன் மேல் அருட்பாடல்கள் இயற்றிப் பாடி ஆலய வளர்ச்சியில் அரும்பணி ஆற்றி வருகிறார் அவரை ஆலய நிர்வாக சபையினர் கோயில் சிவாச்சாரியர்கள் மனமார சகல செல்வங்களும் பெற வாழ்த்துகிறோம்.

Best Wishes

நிர்வாக சபையினர்
சிவாச்சாரியர்கள்
உடுவில் முருகமூர்த்தி ஆலயம்


## நம்ப முடியவில்லையா??? அதிசயம் ஆனால் உண்மை !!!

- நீங்கள் கருமை நிறம் உடையவரா? or சற்று நிறம் குறைந்தவர்களா?
- உங்கள் கன்னங்கள் குழிவிழுந்தவையா? or கரு வளையம், பருக்கள் நீண்ட கால தழும்புகள், கரும்புள்ளிகள், பாலுண்ணிகள் உடையவரா?
- உங்கள் உடல் பருமனாக அமைப்பில்லாமல் இருக்கின்றதா? or மெலிவான தோற்றமா? கவலையை விடுங்கள்!!!
- முடி உதிர்வு, பொடுகு, பேன், செம்படை போன்றவற்றால் அவஸ்தைப்படுகிறீர்களா? மற்றும் அழகிய முக அமைப்பை பெற விரும்புகிறீர்களா?

10 நாட்களில் தீர்வு நிச்சயம் முதற் பதிவு அவசியம் அழையுங்கள் 0777351954

இவற்றிற்காக நீங்கள் பல இடங்களில் சிகிச்சை பெற்றும் தீர்வு இல்லாமல் பணத்தையும் நேரத்தையும் வீண்செய்தீர்களா? கவலையை விடுங்கள் "எம்மை நாடுங்கள்"

முற்றிலும் ஆயுள்வேத சிகிச்சைகள் பக்கவிளைவுகளற்றவை

We care Always

சானியா கேபல் கெயர்
262, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை
நல்லூர், யாழ்ப்பாணம்.



## Christmas Offer from DELL & HP Laptops

Dell Inspiron 3521
I3-3rd Gen, 4GB, 500GB, Wi-Fi, Blue tooth, 15.5" with 2 Year Warranty-Free Caring Case
HP Pavilion 15
I3-3rd Gen, 4GB, 500GB, Wi-Fi, Blue tooth, 15.5" with 1 Year Warranty
**MEGA OFFER**
**Dell Laser Printer 9,400.00 Only**
STP Your Partner in IT Solution
# 49, 1st Cross Street (STP Junction), Jaffna
T.P:021 222 8147



## 2014 ஆம் ஆண்டுக்கான புதிய வேலை நியமனம்

வாழ்க்கையில் சந்தேகமா? O/L, A/L படித்த பின்பும் உங்களுக்கு வேலையின்மையா? அதற்காக எமது Innovage நிறுவனம் வடக்கில் 5 புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளது. (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா) ஒவ்வொரு பிரதேசத்தில் குறைந்தது 30 பேர் தெரிவு செய்யப்படுவார்கள். அனைவருக்கும் 4 - 6 மாதகால இலவசப் பயிற்சி வழங்கப்படும்.

- Customer Service
- Marketing Executive
- Marketing Asst. Manager
- Marketing Manager

*Note :* பயிற்சிக்காலத்தில் 10.000 - 15.000
பயிற்சியின் பின்னர் 30.000 - 50.000

அத்தோடு வெளிநாடு செல்லும் வாய்ப்புண்டு.
தங்குமிட வசதி உண்டு. (42874)(2.6)

T.P. யாழ்ப்பாணம் - 077 632 0962. Hotline: 077 789 2077
வவுனியா 024 790 0171 www.grantansrilanka.com



## வீடு வாடகைக்கு உண்டு

சகல வசதிகளுடனான 5 அறை கொண்ட மேல்மாடி வீடு, தனி மின்சாரம், தனி வழிப் பாதை, வாகனத் தரிப்பிடம் வசதியுடன் வாடகைக்கு உண்டு. நல்லூர் கோயிலுக்கு அருகில்.

தொடர்பு:-075 881 9730 (C/10390) (2.6)



## விற்பனைக்கு

8மாதம் பூர்த்தியான மினி பொமேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான பொமேரியன் குட்டிகளும், 1 வருட JC இன பசுக்கன்றும், டாசேன், வெள்ளாடியான், வன்ராம், வான்கோழி, மணிதாரா

தொடர்பு:- வி.மயூரன், ஆனைக்கட்டை பிள்ளையார் கோயில், முன்பாக, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, பூதராயர் கோயிலடி டபேலாக்ஸ் அருகில்

(12876)


## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் சிவபாலன்



யாழ்.சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா, பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் சிவபாலன் 20.12.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2013) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சிணாங் குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.103/1,
குவேப் மில் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா. (43557) (2.6.)

தகவல்:
குடும்பத்தினர்.
T.P.077 237 5320,
024 5673750

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
27 ★ 07 ★ 1976

விண்ணில்
21 ★ 12 ★ 2007



### அமரர் சிவபாலன்

ஆண்டுகள் ஆறு ஓடிவிட்டன
ஆனாலும் அழியவில்லை எம் மனத்துயரம்
அன்பையும் அரவணைப்பையும் எம்மீது கொட்டி
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த
எமது அன்புத் தெய்வமே போபி
எம்மையெல்லாம் துன்பக்கடலிலே தவிக்கவிட்டு
நீங்கள் சென்றாலும் நாம் என்றென்றும்
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம் அப்பா
உங்கள் பாலகன் தான் திருவரங்கன்
உங்கள் முகம் பார்க்க முன்னே எங்கு தான் சென்றீரோ!

ஐங்கரன் இல்லம்,
தொல்புரம், வழக்கம்பரை.

பிரிவால் துயருறும்:
சி. தயாளினி (மனைவி),
சி. திருவரங்கன் (மகன்).

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணம் முருகேசு



சாந்தை பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணம் முருகேசு நேற்று (20.12.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முரு கேசுவின் அன்பு மனைவியும், கால்ஞ்சென்ற லிங்கநாதன் மற் றும் தனேஸ்வரன் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி ஊழியர், மானிப்பாய்), காலஞ்சென்ற மனோரஞ்சிதமலர் மற்றும் தவேந் திரம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், தேவரஞ்சிதம், மதுரநாயகி, குமாரசிவம், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், குமணன், குகதீசன், கஜேந்திரன், நிஷாந்தினி, துகாஷினி, ஜெயகரன், மதுகரன், யசோதா, பிரதீபன், பிரகலா, கஜீபன், டினேஷாந், நிகர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21/12/2013) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில் துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு.
தொ.பே:- 021 205 1623

தகவல்: தனேஸ்வரன்
(மகன்- ஓய்வுபெற்ற இலங்கை வங்கி ஊழியர்)


## நத்தார், புதுவருட கால விசேட சலுகைகள் 2014ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும்மாணவச் செல்வங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்கள் ஸ்ரீலங்கா புத்தகசாலையில்...

- பாடப்புத்தகங்களுக்கு விசேட விலைக் கழிவு (15%) வழங்கப்படும்.
- ஏ. எஸ். ஜெஎபர் (SLTS)
- 1000/= மேல் (Stationary's) பொருள்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட அன்பளிப்பு வழங்கப்படும்.
- வாடிக்கையாளர் நலன் கருதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.


டயரிகள், கலண்டர்கள், பிரிண்டிங் செய்து தரப்படும்

அதிரடி விலைக்கழிவு
No-1
5 கட்டு - 47/=
4 கட்டு - 37/=

ஸ்ரீலங்கா புத்தகசாலை
இல.234, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2573

மீண்டும் திருவாதவூரடிகள் புராணம் இங்கே பெற்றுக்கொள்ளலாம். (சொற்ப பிரதிகளே கையிருப்பில் உள்ளன)

# முல்லை., வவுனியா மாவட்டங்களில் உயர்தரத்தில் சாதித்த மாணவர்கள்



அ.பிரவீன்
உயிரியல்
முல்லை மாவட்டம்
முதல் நிலை
புதுக்குடியிருப்பு
மத்திய கல்லூரி



தெ.மதுஷா
கலைப்பிரிவு
முல்லை மாவட்டம்
முதல் நிலை
புதுக்குடியிருப்பு
மத்திய கல்லூரி



ப.துஷானி
வர்த்தகம்
வவுனியா மாவட்டம்
முதல் நிலை
இறம்பைக்குளம்
மகளிர் வித்தி.



சி.தாட்சாயினி
உயிரியல்
வவுனியா மாவட்டம்
முதல் நிலை
இறம்பைக்குளம்
மகளிர் வித்தி.

# கொலையுண்ட மாணவனுக்கு உயிரியலில் 2ஏ, சி சித்தி

யாழ்ப்பாணம், டிசெ. 21

இனந்தெரியாதோரின் கோடாரி வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த உடுவிலைச் சேர்ந்த, யாழ். இந்துக் கல்லூரி மாணவனுக்கு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 2 ஏ. சி பெறுபேறு உயிரியல் துறையில் கிடைக்கப் பெற்றுள்ளது.

சண்முகாநந்தன் யதுஷன் என்ற மாணவன் கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு உயிரியல் பிரிவில் இரண்டாவது தடவையாகத் தோற்றியிருந்தார்.

இந்த மாத ஆரம்பத்தில் இவரது வீட்டுக்கு இரவு நேரம் சென்ற இனந்தெரியாதோர் கோடாரியால் யதுஷனை வெட்டியதில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவர் சிகிச்சை பலனின்றி கடந்த 7 ஆம் திகதி உயிரிழந்திருந்தார்.

நேற்றைய தினம் வெளியான க.பொ.த உயர்தர பரீட்சைப் பெறுபேற்றில் யதுஷனுக்கு 2 ஏ. சி பெறுபேறு கிடைத்துள்ளதுடன் அவர் மாவட்ட நிலையில் 96 ஆவது இடத்தினையும் பெற்றுள்ளார். (ங-5)



# மொழியுரிமை மீறலால் நீர்ப்பாசன உதவியாளர் நேர்முகத் தேர்வு பிற்போடப்பட்டது

நீர்ப்பாசனத் திணைக்கள உதவியாளர் வெற்றிடத்துக்கான நேர்முகப் பரீட்சையை தமிழ் மொழி மூலமானவர்களுக்கு பிறிதொரு தினத்தில் நடத்துமாறு கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குக்கடிதம் அனுப்பியுள்ளது.

மொழியுரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பில் ஊடகங்களினால் சுட்டிக்காட்டப்பட்டமையை அடுத்தே இந்த நடவடிக்கைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளை முன்னெடுத்ததாக இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உதவியாளர் வெற்றிடத்துக்கான நேர்முகத் தேர்வுகள் நேற்றைய தினமும், இன்றைய தினமும் இடம்பெற்று வருகின்றன. இதற்கான கடிதங்கள் தனிச் சிங்கள மொழி மூலம், யாழ்ப்பாணத்திலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நேற்று முன்தினமே அனுப்பப்பட்டிருந்தன.

இது தொடர்பில் ஊடகங்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

மொழியுரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப் பிரிவுக்கு, யாழ்.பிராந்திய இணைப்பாளரால் தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் சட்டச்செயலாளரினால் இந்த விடயம் தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், நேர்முகப் பரீட்சையை நிறுத்தி வைக்குமாறும் அல்லது தமிழ் மொழி மூல விண்ணப்பதாரிகளுக்கு தமிழ் மொழி மூலம் கடிதங்களை அனுப்பி பிறிதொரு தினத்தில் நேர்முகப் பரீட்சையை வைக்குமாறும் கோரி கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பிலான அறிக்கையை 27 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (ங-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### புலமைப் பரிசிலில்

இலங்கை ரீதியில் 6 ஆம் இடத்தையும் பெற்றுள்ள ஹாட்லிக் கல்லூரி மாணவன் சிவஞான செல்வம் தினேஸ்.

பருத்தித்துறை தம்பசிட்டியைச் சேர்ந்த சிவஞான செல்வம் - சிவசக்தி தம்பதியரின் மகனான தினேஸ் தனது சாதனைப் பெறுபேறு தொடர்பான எண்ணப்பதிவுகளை உதயனோடு பகிர்ந்து கொண்டார்.

"வெற்றிக்குக் காரணம் எனது அப்பாவே தான். எனக்கு சிறு வயதிலிருந்து நம்பிக்கை, துணிவு, முயற்சி என்பதனை ஊட்டி வளர்த்தார்.

எனது அப்பா மக்கள் வங்கியில் முகாமையாளராக இருந்து தற்போது ஓய்வு பெற்று விட்டார். அப்பாவின் வருமானத்திலேயே நாம் கல்வி கற்றோம். எனக்கு 6 சகோதரர்கள் உள்ளனர். 6 பேரும் கல்வி கற்றுகொண்டிருக்கிறார்கள்.

எனது அண்ணாவும், அக்காவும் தற்போது மருத்துவ பீடத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

நான் முதலாம் ஆண்டு தொடக்கம் தரம் 3 வரை தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், தரம் 4 இல் கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்திலும் மீண்டும் தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலையிலும் தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை ஹாட்லிக் கல்லூரியிலும் எனது கல்வியை தொடர்ந்துள்ளேன்.

நாம் நடுத்தர வருமானமுடைய குடும்பம் ஆகையால் எனது கல்வியையும் கஷ்டத்தின் மத்தியிலேயே தொடர்ந்தோம். அண்ணாவையும் அக்காவையும் போல நானும் மருத்துவராக வேண்டும் என்ற இலட்சியத்தோடு உயிரியல் துறையையே தேர்ந்தெடுத்தேன். எனது முயற்சிக்கு பலனாக இன்று 3 'ஏ' சித்திகளோடு மாவட்டத்தில் முதல் நிலையை பெறமுடிந்தது.

இதற்கு எனக்கு உறுதுணையாக நின்றவர்கள் என் பெற்றோரும், எனது கல்லூரியின் அதிபர், ஆசிரியர்களும், அயலவர் களும் தான்.

நான் அதிக நேரம் படிப்பதில்லை. படிக்கும் விடயத்தை கிரகித்து வைத்துக் கொள்வேன். தரம் 5 ஆண்டு புலமைப் பரீட்சையில் நான் சித்தியடையவில்லை. அதேபோல் க.பொ.த (சா/த) பரீட்சையிலும் 7 'ஏ', 2 'சி' மட்டுமே என்னால் எடுக்க முடிந்தது. ஆனால் நான் துவண்டு விடவில்லை.

ரூசோவைப் போல எத்தனை தோல்விகள் வந்தாலும் முயற்சிக்க வேண்டும். அப்போது தான் நாம் வெற்றியைப் பெற முடியும். இதனை விட படிப்பில் ஏற்படும் சந்தேகங்களை கேட்பதற்கு ஆசிரியரிடம் நான் தயக்கம் காட்டியதில்லை.

தோல்வியைக் கண்டு மனம் தளராமல் தொடர்ந்தும் முயற்சித்தால் அது எவ்வளவு பெரிய இமாலய இலக்காக இருந்தாலும் அதனை நாம் அடைய முடியும்.

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஏழை மக்களுக்கும் சேவை புரியவே இத் துறையை தேர்ந்தெடுத்துள்ளேன். (ங-422)

### வெளியாகியது

தையும், வர்த்தகப் பிரிவில் அதே பாடசாலையைச் சேர்ந்த நிறோஜிதா ஜெகதீஸ்வரன் '2 ஏபி' பெறுபேறு பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் பெற்றுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த தாட்சாயினி சிவமைந்தன் '3 ஏ' பெறுபேறு பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும், வணிகப்பிரிவில் அதே பாடசாலையைச் சேர்ந்த துஷானி பத்மநாதன் '3 ஏ' பெறுபேறு பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் கணிதப்பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த த.திவாகர் '3 ஏ' பெறுபேறு பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

நேற்றிரவு வரை கிடைத்த முன்னணிப் பெறுபேறுகள் வருமாறு:-

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி

கணிதப்பிரிவு - '3 ஏ'

அ. அனற்ரூபிசா, சு. கவிதா, க.நிஷாந்தினி, ஜெ.கேதாரணி, ப.பிரவீனா.

உயிரியல் பிரிவு - '3 ஏ'

யோ. சாம்பவி, ரா.கார்த்திகா, த.நிவாகினி.

வணிகப்பிரிவு - '3 ஏ'

ஜெ.நிரூசா, ம.வைஷ்ணவி, பா.பானுஜா, ப.கஜானி, டொ. ஜெறின்சியா, பா. கீர்த்தனா, க. மதுரா, கு.சுகன்யா, மா.கஜலக்சுமி, கி.நிவேதிதா.

யாழ். இந்துக் கல்லூரி

கணிதப்பிரிவு -3 ஏ, ச.குருபரன் - மாவட்ட நிலை -4, சி. மேகலாதன், மாவட்ட நிலை - 5, ந.லவலோஜன் - மாவட்ட நிலை -8, ச.ராம்ராஜ் - மாவட்ட நிலை -9, கை.சுதாகர், கு.நிலஷன், தி.ஆதவயோகன், செ.கிரிஷாந், கு.கஜானன், பு.திவாகரன், ந.கேதீஸ்வரன், ச.சந்தோஷன்.

உயிரியல் பிரிவு - 3 -ஏ

இ.பிரணவன் - மாவட்ட நிலை - 2, தேசிய நிலை 8, து. ஆதவன் - மாவட்ட நிலை -5.

வர்த்தகத்துறை -3 ஏ

கி. சுபாங்கன் - மாவட்ட நிலை - 7, இ.ரமணன், கோ. குகரூபன். (ங-4-8-14,-86, -10 - 422 - 400 - 402)

### கற்றலில்

யில் முதலிடத்தினை பெற்றுக் கொண்ட யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் இராஜசேகரன் யதுசன்.

தனது உயர்தரப் பெறுபேறுகள் குறித்து உதயனோடு அவர் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் வருமாறு:-

என்து இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்த எனது பெற்றோருக்கும் நம்பிக்கைக்குரிய சத்திய சாய் பாபாவுக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறியே ஆகவேண்டும். மிகவும் மகிழ்ச்சியான இந்தச் சந்தர்ப்பம் போல் எதிர்காலத்திலும் எனது கல்விச் செயற்பாட்டிற்கு இவர்களது துணை அவசியம்.

உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் கல்விச் செயற்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால் மட்டுமே சிறந்த பெறுபேறுகளை பெற முடியும். எமது இளைய சமுதாயம் பாடசாலை கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதை குறைத்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இந்த நிலையை தவிர்த்து பாடசாலைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆசிரியர்களுக்கு மதிப்பளித்து எமது மாவட்டத்தின் கல்வி நிலையை உயர்த்த மாணவ சமுதாயம் முன் வர வேண்டும்" என்றார். (ங-10)

### தீர்வுக்கு

இந்நிலையில், எமது நாட்டுப் பிரச் சினைகளுக்கு பிற நாடுகளில் தீர்வைத் தேடுவதைவிட ஏனைய நாடுகளுக்கு முன் மாதிரியான வகையில் எமது பிரச்சினைகளை நாமே பேசி எமது நாட்டுக்குரிய தீர்வொன்றைக் காண வேண்டும்.

தேசிய நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திக்கு உள்நாட்டுக்குள் தீர்வைக் காண்பதற்கு நாடாளுமன் றத்தில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், வடக்கு மாகாணசபையில் முதலமைச்சர் விக்னேஸ் வரன் தலைமையிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கும் எம்மோடு கைகோர்த்து செயற்படுமாறு அழைப்பு விடுக்கின்றேன் - என்றார். (து-சி)

### நிறைவேறியது

வரை 23 நாள்களாக விவாதம் இடம் பெற்றது.

விவாதத்தின் இறுதி நாளான நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரை யாற்றியதன் பின்னர் வரவு- செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பை எதிர்க் கட்சிகளின் பிரதம கொரடாவான ஜோன் அமர துங்க கோரினார். இதையடுத்து, இதன் பின்னர் இடம்பெற்ற வாக்கெடுப்பின்போதே 95 மேலதிக வாக்குகளால் வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப் பட்டது. (து-சி)

### வீதியில்

திருக்கேதீஸ்வரம் செல்லும் வீதியில் குடிதண்ணீர் இணைப்பை வழங்குவதற்காக வெட்டப்பட்ட குழிகளிலிருந்த இந்த மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

தற்போது எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட பகுதியில் முன்னர் பெரிய இராணுவ முகாம் ஒன்று அமைந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடி தண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்காக இந்த வீதியின் ஓரத்தில் குழியை வெட்டிய போது இந்த மனித எலும்புக் கூடுகள் வெளிப்பட்டன. அங்கு பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் உடனடியாக இது குறித்து அருகிலுள்ள இராணுவ முகாமுக்கும், மன்னார் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த இராணுவத்தினரும், பொலிஸாரும் மூன்று மனித எலும்புக்கு கூடுகளையும் மீட்டனர்.

இதேவேளை அவ்விடத்துக்கு வருகை தந்த வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பிறிமூஸ் சிராய்வா, மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அந்தோனி சகாயம் ஆகியோர் மனித எச்சங்களைப் பார்வையிட்டதுடன் இந்தப் பகுதியில் மேலும் மனித எலும்புக் கூடுகள் காணப்படலாம் என்றும், அதனால் மன்னார் நீதிவான் முன்னிலையில் இந்தக் குழியை மேலும் தோண்டுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை அடுத்து தொடர்ந்து குழி தோண்டுவதனை பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

இன்று சனிக்கிழமை மன்னார் மாவட்ட நீதிவான் முன்னிலையில் குழியை தோண்டும் நடவடிக்கை இடம் பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (து-12-14-400)

### யாழ். வந்த

சேர்ந்த கே.கே. அஜந்த (வயது -34) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் எகலிய கொடப் பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸே தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சுற்றுலாப் பயணி ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் 25 க்கு மேற்பட்டோர்கள் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (து-400-435)

### இருநாட்டு

தென்பகுதி மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகளால் எமது மீனவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாவதாகவும், இந்திய, தமிழக அரசுகளுடன் பேசித் தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிகளை எடுத்துவருவதாகவும் அமைச்சர் டெனீஸ்வரன் மேலும் குறிப்பிட்டார். (து-7)

### ஐ.நா.

கைகள் இவற்றைக் கோடிட்டுக் காட்டுவனவாக உள்ளன.

இலங்கையில் ஐ.நா படிப்படியாக எவ்வாறு தோல்வியடைந்தது என்பதைத் தெளிவாகவே அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளனர்.

இதில் ஐ.நா செயலகம் மட்டுமல்ல உறுப்பு நாடுகளுமே தோல்வியைத் தழுவியுள்ளன. பாதுகாப்புச் செயலகமும் தோல்வியடைந்தது. அதற்கு அவர்கள் மாத்திரம் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அல்ல. ஆனால் நாங்கள் மேற்படி அறிக்கைகள், குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டு தோல்விகளிலிருந்து அவதானத்தைப் பெற்றுக் கொண்டுள்ளோம்.

நாங்கள் இனிமேல் தவறுகள் விடமாட்டோம் என்று சொல்கின்றோம் என்றால் தவறிழைத்திருக்கின்றோம் என்று தான் அர்த்தம். இலங்கையில் நடந்ததை இனிமேல் நடக்காமல் இருப்பதற்கு நாங்கள் என்ன செய்யப் போகின்றோம்?. இதற்காகத்தான் முன்னோக்கிய செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது- என்றார். (து-5)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.21
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சாந்தன். யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் வி.க. மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
அதில் இன்று சனிக்கிழமை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் வி.க. 'பி அணியை எதிர்த்து உதயதாரகை வி.க அணி மோதவுள்ளது.

★ ★ ★

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஊரெழு றோயல் வி.க. நடத்தும் யாழ்ப்பாணச் சமர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் வி.க. அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட்றேஞ்சஸ் வி.க. அணி மோதவுள்ளது.
தொடர்ந்து இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் வி.க. அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் வி. க அணி மோதும். (த-23)



வடக்கு மாகாண அமைச்சுகளுக்கு இடையிலான பெரு விளையாட்டில் ஓர் அங்கமான ஆண்களுக்கான எல்லே போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற உள்ளூராட்சி அமைச்சு அணியினர். (த-23)

## மேசைப்பந்து பயிற்றுநருக்கு பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், டிசெ.21
யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கங்கள் நடத்தும் மேசைப் பந்தாட்ட தரம் I பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 26 ஆம், 27 ஆம், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இந்தப் பயிற்சி முகாமில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 20 மேசைப்பந்தாட்டப் பயிற்றுநர்கள் பங்கு கொள்ளவுள்ளனர்.
இவர்களுக்கான பயிற்சி



களை சர்வதேச மேசைப் பந்தாட்ட சம்மேளனத்தின் அங்கீகாரம் பெற்ற மேசைப் பந்தாட்டப் பயிற்றுநர் வஜிர விக்கிரமசிங்க வழங்குவார். (த-23)

# சென். மேரிஸ்- பள்ளிமுனை லூட்சியா இறுதியாட்டத்தில் நாளை மோதல்




மன்னார் பள்ளிமுனை சென்.லூட்சியா

யாழ்ப்பாணம்,டிசெ.21
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை வதிரி டைமன்ஸ் விளை யாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இறுதி யாட்டத்தில் மன்னார் பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.



நாவாந்துறை சென். மேரிஸ்

இறுதியாட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்திய சீலன். சிறப்பு விருந்தினர்களாகப் பருத்தித்துறை 521 ஆவது படைப் பிரிவு அதிகாரி கே.டபிள்யூ. திசநாயக்கா, நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.என்.ரி. கங்காரு, ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை


" - "

இறுதியாட்டத்தில் மன்னார் பள்ளி முனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

உதைபந் தாட்ட லீக்கின் தலைவர் டி.எம். வேதாபரணம், கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் எஸ். நவநீத மணி, விளையாட்டு அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் எஸ். அனுரகாந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23-422)

# திருத்துவக் கல்லூரி- சென்.ஜோன்ஸ் மோதல் சமநிலையில் முடிவடைந்தது

யாழ்ப்பாணம்,டிசெ.21
கண்டி திருத்துவக் கல்லூரி அணிக்கும், சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 61 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் கஜீபன் 21 ஓட்டங்களையும் பிரிசங்கர் 45 ஓட்டங்களையும், துவாரக சீலன்



21 ஓட்டங்களையும்,ஜெனி பிளமிங் 27 ஓட்டங்களையும் ஏபிரகாம் அனோஷன் 27 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் கண்டி திருத்துவக் கல்லூரி அணி சார்பில் சச்சிரா றெமிந்தா ராகுல ஜய திலக, ஜொஷான் லியனகே துவிந்து திலகரத்ன துலாகன சிறிவர்த்தன, ரங்க சஜீத் ஆகியோர் முறை தலா ஓர் இலகினையும் இந்திரேஷ் 4 இலக்குகளையும் வீழ்த்தினார்கள்.
தனது முதலாவது இன்னிங்சிற்காகத் துடுப்பெடுத்தாடிய கண்டி திருத்துவக் கல்லூரி அணி 67.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் துலாகன சிறிவர்த்தன 20 ஓட்டங்களையும், துவிந்து திலகரத்ன 20 ஓட்டங்களையும், சிச்சிரா ஹமிந்த 20 ஓட்டங்களையும், கவிந்து திசநாயக்க 15 ஓட்டங்களை யும், இந்திரேஷ் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் துவாரகன் 2 இலக்குகளையும், கபில்ராஜ் ஓர் இலக்குகளையும், துவராகசீலன் 3 இலக்குகளையும் கானாமித்தன் 4 இலக்குகளையும் வீழ்த்தினார்கள்.
தனது 2 ஆவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 34.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.
இதில் சிந்துர்ஜன் 14 ஓட்டங்களையும் கபில்ராஜ் 15 ஓட்டங்களையும், கானாமிர் தன் 22 ஓட்டங்களையும், பிரிய சங்கர் 59 ஓட்டங்களையும், துவாரக சீலன் ஆட்டம் இழக்காமல் 33 ஓட்டங் களையும் பெற்றனர்.
பந்து வீச்சில் கண்டி திருத்துவக் கல்லூரி அணி சார்பில் இந்திரேஷ் ஓர் இலக்கினையும், துவிந்து திலகரத்ன 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.
தனது 2 ஆவது இன்னிங்ஸுக்காகத்துடுப்பெடுத்தாடிய கண்டி திருத்துவக் கல்லூரி அணி 35 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.
இதில் துலஜன சிறிவர்த்தனா 22 ஓட்டங்களையும், சானுகா 37 ஓட்டங்களையும், சச்சிரா ஹமிந்து ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும், கவிந்து திஸநாயக்க ஆட்டம் இழக்காமல் 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் துவாரகாந், ஏபிரகாம் அனோஷன், பிரியசங்கர் ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர். (த-23)

# ஷேன் வோர்ன் நடத்திய விருந்தில் ரியான் ஹரிஸுக்கு அனுமதி மறுப்பு

ஆஷஸ் வெற்றியைக் கொண்டாடும் வகையில் ஆஸ்திரேலிய முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் அளித்த விருந்து நிகழ்ச்சியில் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ரியான் ஹரிஸுக்கு அனுமதி மறுக்கப்பட்ட விவகாரம் பெரும் பிரச்சினையைக் கிளப்பியுள்ளது.

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற்ற 3ஆவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் வெற்றி கண்ட ஆஸ்திரே லியா 3-0 என்ற கணக்கில் ஆஷஸ் தொடரைக் கைப் பற்றியது. 4 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஷஸ் தொடரைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து பேர்த்தில் உள்ள க்ரெளன் கசினோ ஹோட்டலில் ஆஸ்திரேலிய வீரர்களுக்கு ஷேன் வோர்ன் விருந்து கொடுத்தார்.

அதில் ஆஸ்திரேலிய வீரர்கள் அனைவரும் தமது மனைவிமாருடன் பங்கேற்றனர். முன்னணி வேகப் பந்து வீச்சாளர் ரியான் ஹரிஸ் மது அருந்திவிட்டுச் சென் றதால் அவர் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. இத னால் கோபமடைந்த ஹரிஸ், பேர்த்திற்கு செல்பவர்கள் க்ரெளன் கசினோவுக்குச் செல்ல வேண்டாம். நீங்கள் குடித்திருந்தால் உங்களை உள்ளே அனுமதிக்கமாட் டார்கள் என டுவிட்டரில் குறிப்பிட்டிருந்தார். இந்த டுவிட்டர் கருத்து பின்னர் நீக்கப்பட்டாலும்கூட அதை ஏராளமானோர் பார்த்துவிட்டனர். அதைத் தொடர்ந்து அவருக்கு ஏராளமானோர் ஆறுதல் கூறியுள்ளனர்.


ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கேல் கிளார்க் மது அருந்திய போதும் விருந்து நிகழ்ச்சிக்கு அனுமதிக்கப் பட்டுள்ளார். சிறப்பான முறையில் விருந்து கொடுத்த வோர்னுக்கு நன்றி தெரிவித்துள்ள மைக்கல் கிளார்க், ஆஸ்திரேலிய வீரர்களும், அவர்களுடைய மனைவிமாரும் இந்த விருந்தை ஒருபோதும் மறக்கமாட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். கிளார்க்கின் மனைவி கெய்லி, என்னவொரு அற்புதமான விருந்து என கூறியுள்ளார். ஹரிஸ் அனுமதி மறுப்பு சம்பவம் நடைபெறுவதற்கு முன்னதாகவே நான் ஹோட்டலில் இருந்து கிளம்பி விட்டேன் என ஷேன் வோர்ன் குறிப்பிட்டுள்ளார். (த)



# 9 கோல்கள் அடித்து ரொனால்டோ சாதனை

ரியல் மட்ரிட் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ சம்பியன்ஸ் லீக் போட்டியில் சாதனை படைத்துள்ளார். அவர் கோபன்ஹேகனில் தனது அணியை 2-0 என்ற விகிதத்தில் வெற்றிபெறச் செய்தார். கிறிஸ்டியானோ ரொனால்டோவின் கோல் ரியல் மட்ரிட் அணியை வெற்றிபெறச் செய்தது. போட்டியில் அதிக கோல் அடித்து அவர் புதிய சாதனையை நிகழ்த்தி உள்ளார். இந்தப் பருவகாலத்தில் அவர் 9 கோல்கள் அடித்து உள்ளார். இதற்கு முன் பருவகாலத்தில் 8 கோல்கள் அடித்ததே சாதனையாக இருந்தது.

நான் என் ஒன்பது கோல்கள் கணக்கின் மூலம் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன் என ரொனால்டோ கூறினார், மேலும் அவர் கூறும் போது எனது சாதனை குறித்து மகிழ்ச்சி, எனது கோல்கள் மூலம் எனது அணிக்கு உதவ முடிந்தது. நான் அதிக கோல் அடிக்க விரும்பினேன் அது சாதனையாக அமைந்தது. ஆனால் நான் சாதனைகளை முறியடிக்க விரும்பவில்லை என்று கூறினார். (த)



# 7 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்ட புஜாரா




ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் இந்திய வீரர் புஜாரா 7 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டார். சர்வ தேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) சார்பில் டெஸ்ட் அரங்கில் சிறந்து விளங்கும் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசைப் பட்டியல் வெளியானது. தென் னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் சதம் அடித்த இந்திய வீரர் விராட் கோஹ்லி (634 புள்ளி) 20 ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

மற்றொரு இந்திய வீரர் புஜாரா (801) 7 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். ஏனைய இந்திய வீரர்கள் யாரும் முதல் 20 இல் இடம்பெறவில்லை. இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரில் சதம் அடித்த ஆஸ்திரேலிய வீரர்கள் வோர்னர் (11ஆவது), வொட்சன் (32), ஸ்டீவன் ஸ்மித் (37) முன்னேற்றம் அடைந்தனர். அணித் தலைவர் கிளார்க் (868) மூன்றாவது இடம்பிடித்தார்.

இங்கிலாந்தின் ஸ்ரோக்ஸ் (376 புள்ளி) 81 இடங்கள் முன்னேறி 73ஆவது இடம் பிடித்தார். இப்பட்டியலில் தென்னாபிரிக்க வீரர்களான டிவில்லியர்ஸ் (909 புள்ளி), அம்லா (898) தொடர்ந்து முதல் இரண்டு இடங்களில் நீடிக்கின்றனர்.

சிறந்த டெஸ்ட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில், இந்திய வீரர் அஷ்வின் (808) தொடர்ந்து 5ஆவது இடத்தில் உள் ளார். மற்றொரு இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஓஜா (756), ஓர் இடம் முன்னேறி 8ஆவது இடம் பிடித்தார். சிறந்த டெஸ்ட் சகலதுறை வீரர் பட்டியலில் இந்திய வீரர் அஷ்வின் (419) தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். (த)

# முதலிடம் தான் இலக்கு



தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு டெஸ்ட் தரவரிசையில் மீண்டும் முதலிடத்திற்கு வருவோம் என ஆஸ்திரேலிய அணித்தலைவர் கிளார்க் தெரிவித்தார். ஆஸ்திரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி, 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகிறது. முதல் மூன்று போட்டிகள் முடிவில், 3-0 எனத் தொடரை வென்ற ஆஸ்திரேலிய அணி, ஆஷஸ் கிண்ணத்தை மீண்டும் தன்வசப்படுத்தியது.

இது குறித்து அணித் தலைவர் கிளார்க் கூறியது:

ஆஷஸ் தொடரைக் கைப்பற்றியதற்கு மாயம் ஒன்றும் செய்யவில்லை. எங்கள் வீரர்களின் கடின உழைப்புக்கு கிடைத்த பரிசு இது. இதற்காக ஒவ்வொருவரையும் பாராட்ட வேண்டும். இத்தொடரை வொட்சன் மந்தமாக தொடக்கினாலும், மூன்றாவது டெஸ்டில் சதம் கடந்து அசத்தினார். இவர், இளம் வீரர்களுக்கு நல்ல உதாரணமாக திகழ்கிறார். இந்த வெற்றியை தொடர்ந்து, டெஸ்ட் தரவரிசையில் மீண்டும் முதலிடத்திற்கு வருவோம். இது தான் எங்கள் லட்சியம்-என்றார். (த)

# சர்ச்சையில் சிக்கிய ஸ்வான்

பேர்த்தில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றதுடன் தொடரையும் கைப்பற்றியது. இந்தத் தோல்வியால் இங்கிலாந்து வீரர்கள் கடுமையான விமர்சனத்துக்குள்ளாகி இருக்கிறார்கள். இந்த நிலையில் இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் புதுவிதமான சர்ச்சையில் சிக்கியிருக்கிறார். தனது சகோதரருடன் பேஸ்புக்' இணையதளம் வாயி லாகத் தகவல்களை பரிமாறிக் கொண்ட ஸ்வான், பேர்த் டெஸ்டில் அடைந்த தோல்வியை கற்பழிப்புடன் ஒப்பிட்டு சில கருத்துகளைக் கூறியிருந்தார். இது பத்திரிகையிலும் வெளியானதால் சர்ச்சையாக வெடித்தது. இதையடுத்து தனது கருத்து யாருடைய மனதையும் புண்படுத்தி இருந்தால் அதற்கு மன்னிப்பு கேட்டுக்கொள்வதாக ஸ்வான் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (த)



# நியூ சயன்ஸ் அக்கடமி

வதிரி நெல்லியடி

யாழ். முன்னணி ஆசிரியர்களுடனும் வடமராட்சி முன்னணி ஆசிரியர்களுடனும் 2016 G.C.E. (A/L) கணித விஞ்ஞான வகுப்புக்கள்

**ஆரம்பம் 28.12.2013 (காலை - 8.00 மணி)**

**PHYSICS**
- திரு. S.சோதிலிங்கம் (யாழ்.மத்திய கல்லூரி)
- திரு. T.சந்திரப்பிரகாசம் (யாழ்.மத்திய கல்லூரி)

**CHEMISTRY**
- திரு. S. தங்கராசா (யா/ஹாட்லிக் கல்லூரி)
- திரு. K. சிவத்திரன்

**COM. MATHS**
- திரு. K. அருளானந்தம் (யா/ ஹாட்லிக் கல்லூரி)
- திரு. P. விமலநாதன் (யாழ். இந்துக் கல்லூரி)

**BIOLOGY**
- திரு. T. கெங்காதரன்

குறிப்பு
1) தவணைப்பரீட்சைக்குரிய வகையில் பாடத்திட்டம் முடிக்கப்படும்
2) மாதாந்த பரீட்சைகள் நடத்தப்படும்
3) பின்தங்கும் மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள் நடைபெறும்
4) பெற்றோர் ஆசிரியர்களை சந்திப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

மீட்டல் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

# உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## Sky Computers (Pvt) Ltd

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.

Ms office 2013, Web Design, Hardware, Kids Programs, Mobile Repairing, DTP, Video Mixing, Internet & E-mail, Graphic Design, Computer Type Setting.

TP:021-222-1417 மேலதிக விபரங்களிற்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

சிங்களம், ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பம்
89, கண்டி றோட், யாழ்ப்பாணம். (கச்சேரிக்கு அருகாமையில்)

## வேலையாள் தேவை

அலுவலகம் ஒன்றுக்கு கணினித் துறையில் குறைந்தது இரண்டு வருட அனுபவம் உள்ள பெண் தேவை.
(சி/10347) (7.6.3)

தொடர்பு: 075 041 6274

# NEW SCIENCE HALL

KANNATHIDDY JAFFNA

DAY CLASS- வாரத்தில் 7 நாள்களும்

**CHEMISTRY**

K.சிவத்திரன் BSc(Hons)

**INORGANIC**

MON→FRI-11.00-1.00 SAT→SUN-2.30-4.00

**PHYSICS**

G.பிரபா BSc

MON→FRI-9.00-11.00 SAT→SUN-4.00 -5.30

ஆரம்பம்:23.12.2013 MON
(சி/10385)(7.6.3)

# NEW SCIENCE HALL

KANNATHIDDY JAFFNA

2016 A/L * கணித உயிரியல் பிரிவு*

PHYSICS

| | |
|---|---|
| திரு. S. சோதிலிங்கம் | திரு. G. பிரபா |
| திரு. N. கபிலன் | திரு. K. செல்வன் |

CHEMISRTY

| | |
|---|---|
| திரு. K. சிவத்திரன் | திரு. M. மகேஸ்வரன் |
| திரு. G. BENO | திரு. T. சுசாந்தன் |

BIOLOGY

| | |
|---|---|
| திரு. T. தம்பிராஜா | திரு. T. கெங்காதரன் |

வழமையான ஆசிரியர்

COM. MATHS

| | |
|---|---|
| திரு. S. செந்தில்ராஜ் | திரு. S. செந்தில்நாதன் |

திரு. சிவகரன்

ஆரம்பம் 28.12.2013 SATURDAY 8.30 A.M

## A/L பரீட்சை முடிவுகள் திருப்தியா / இல்லையா?

படித்துக் கொண்டே பல இலட்சம் வெளிநாடுகளில் சம்பாதிக்கலாம்

LAPTOP இலவசம்- நிபந்தனைகளுடன்

A/L தேவையில்லை சர்வதேச ஆங்கிலப் பரீட்சை IELTS தேவையில்லை பின்வரும் நாடுகளுக்கு பறக்கலாம்.

* ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படித்துக்கொண்டே உறுதியாக ஒரு இலட்சம் உழைக்கலாம்.
* நியூசிலாந்தில் படித்துக் கொண்டே பல இலட்சம் சம்பாதிக்கலாம் 2வருடத்தில் PR பெற்று ஆஸ்திரேலியா குடிபெயரலாம்.
* போலந்தில் படிக்க உழைக்க வெறும் 7லட்சம் போதும்.

எதிர்வரும் 25/12/2013 வரை 20% கட்டணக்கழிவு
மடிக்கணினியும் இலவசம்- நிபந்தனைகளுடன்

திசைகாட்டி (பிறை) லிமிட்,
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090.



# மாதாந்த தொடர் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள்

# NEW SCIENCE WORLD

NAVALAR ROAD JUNCTION, BROWN ROAD, JAFFNA.

*Victory Must*

## உயிரியல் - 2015 A/L S. பொன்திவாகரன்

| No | Name | Marks | Rank | School |
|---|---|---|---|---|
| 01. | யாழினி கைலாயபதி | 90 | 1 | J/VGHS |
| 02. | யாழினி சார்ல்ஸ் | 90 | 1 | J/VGHS |
| 03. | சுலக்சனா முருகதாஸ் | 89 | 3 | J/VGHS |
| 04. | தனுசியா கருணாகரன் | 88 | 4 | J/VGHS |
| 05. | கார்த்திகாயினி வர்ணகுலராஜா | 88 | 4 | J/VGHS |
| 06. | தனன்சிகா சின்னராசா | 87 | 6 | MU/PCC |
| 07. | ரவிலோஜன் கிஷோர் | 85 | 7 | JHC |
| 08. | சரணியா நடேசகாந்தன் | 84 | 8 | J/VGHS |
| 09. | மாதுரி முத்துகிருஸ்ணன் | 82 | 9 | J/CGC |
| 10. | நாகசாயினி சூரியகுமார் | 82 | 9 | J/VGHS |
| 11. | அபிராமி சின்ராசா | 81 | 11 | J/UGC |
| 12. | பிரியங்கா ஜெயகாந்தன் | 81 | 11 | J/VGHS |
| 13. | சிவசோதி சிவசெந்தூரன் | 79 | 13 | JHC |
| 14. | கிருஸ்ணானந் கீர்த்தனன் | 79 | 13 | JHC |
| 15. | தமயந்தி ரங்கநாதன் | 79 | 13 | JHLC |
| 16. | டிஜீர்த்தனா ஜெயானந்தராஜா | 78 | 16 | JHLC |
| 17. | பிலோமினி அக்கினேஸ்வரன் | 76 | 17 | MU/PCC |
| 18. | தனுசியா யோகரட்ணம் | 73 | 18 | JHLC |
| 19. | கருணாநந்தன் அனோபன் | 73 | 18 | JHC |
| 20. | ஆனந்தராஜா யதுஷன் | 73 | 18 | JHC |
| 21. | மதுஷா சண்முகரட்ணம் | 73 | 18 | J/VGHS |
| 22. | அக்ஷனி சந்திராசா | 72 | 22 | J/VGHS |
| 23. | மிதுசா சண்முகாநந்தன் | 72 | 22 | J/CGC |
| 24. | கீர்த்திகா ரவீந்திரன் | 71 | 24 | J/VGHS |
| 25. | தனுஷியா மகேந்திரன் | 70 | 25 | J/VGHS |
| 26. | சரண்யா லோகநாதன் | 70 | 25 | J/VGHS |
| 27. | சுகன்யா சிவகுமாரன் | 70 | 25 | J/VGHS |
| 28. | வினோஜி வாமதேவன் | 70 | 25 | J/UGC |
| 29. | சுபலக்ஷி செல்வராஜா | 70 | 25 | J/HLC |
| 30. | கீர்த்திகா ராஜ்குமார் | 69 | 30 | J/CGC |
| 31. | துளசி தவராசா | 69 | 30 | J/UGC |
| 32. | சிந்துஜா தனபாலசிங்கம் | 69 | 30 | MU/PCC |
| 33. | ஜோன்சன் எல்மார் | 68 | 33 | JHC |
| 34. | ஆரண்யா சிவகுமாரன் | 67 | 34 | J/VGHS |
| 35. | ரவிலவிஷ்வனாத் டயானல்ட் | 67 | 34 | JHC |
| 36. | பிரணவி சச்சிதானந்தம் | 67 | 34 | J/UGC |
| 37. | கிஷானா ஜெகானந்தம் | 67 | 34 | J/VGHS |
| 38. | சிந்துயா அருட்செல்வன் | 67 | 34 | J/VGHS |
| 39. | சரணியா செல்வநேசன் | 67 | 34 | J/VGHS |
| 40. | வஸ்னியா ஜோர்ஜ் | 66 | 40 | J/SVC |
| 41. | சகானா ஜெயராஜா | 66 | 40 | J/HFC |
| 42. | தர்மிலா குணரத்தினம் | 65 | 42 | J/VGHS |
| 43. | பானுஜா பாலகிருஷ்ணராஜா | 65 | 42 | J/UGC |
| 44. | தனேஸ்வரன் பார்த்தீபன் | 65 | 42 | JHC |

## இரசாயனவியல் - 2014 A/L T.சிவகுமார்

| No | Name | Marks | Rank | School |
|---|---|---|---|---|
| 01. | கந்தசாமி யதுசன் | 97 | 1 | J/CC |
| 02. | சிவபாஸ்கரன் சாரங்கன் | 89 | 2 | J/HC |
| 03. | சண்முகம் சாமுவேல் | 89 | 2 | J/CC |
| 04. | சற்குணராசா டொனேஷ் | 89 | 2 | J/VHC |
| 05. | ஜெயகுமார் ஷஜீஹன் | 86 | 5 | J/HC |
| 06. | பத்மராசா தனுசன் | 86 | 5 | J/HC |
| 07. | சிறீதரன் திவாகரன் | 86 | 5 | J/KHC |
| 08. | சகாயநாதன் குலாஸ் ஈபன்போகோ குலாஸ் | 86 | 5 | MN/FMMV |
| 09. | திருச்செல்வம் யதூர்ஷன் | 86 | 5 | J/HC |
| 10. | சிறீதரன் சிறீதர்ஷன் | 84 | 10 | J/KHC |
| 11. | சண்முகலிங்கம் துசிந்தன் | 84 | 10 | J/KHC |
| 12. | கருணாநிதி கஜானன் | 84 | 10 | J/KHC |
| 13. | சந்திரசேகரம் டிலக்சன் | 84 | 10 | J/HC |
| 14. | நடேசன் பிரசாந்த் | 84 | 10 | J/HC |
| 15. | நிக்சலா நடேசன் | 84 | 10 | J/UGC |
| 16. | பரராஜசிங்கம் றுஷாந்தன் | 80 | 16 | J/KHC |
| 17. | நேசகுமார் குருபரன் | 80 | 16 | J/KHC |
| 18 . | சர்மினி சிவராஜா | 80 | 16 | J/HLC |
| 19. | சுப்ரமணியம் யாதவன் | 76 | 19 | J/HC |
| 20. | கயிலாயஇந்திரன் கபிலேஷ் | 76 | 19 | St.JC |
| 21. | நவரட்ணம் சரண்ராஜ் | 76 | 19 | J/MHC |
| 22. | S. தர்ஷன் | 76 | 19 | J/KHC |
| 23. | சிவசுப்ரமணியம் நிஷாந்த் | 76 | 19 | J/HC |
| 24. | கருணாமூர்த்தி துலக்சன் | 74 | 24 | KN/PMV |
| 25. | பிரியங்கா அருள்வதனன் | 74 | 24 | J/UGC |
| 26. | திருநாவுக்கரசு நிருபன் | 71 | 26 | J/HC |
| 27. | அமிர்தலிங்கம் கிருஷிகன் | 71 | 26 | J/HC |
| 28. | கணேசலிங்கம் நிதுர்ஷன் | 68 | 28 | |
| 29. | நந்தகுமார் கஜேந்திரன் | 68 | 28 | J/IMV |
| 30. | வாசவன் வினோதன் | 64 | 30 | J/HC |
| 31. | அருளானந்தம் கஜேந்திரன் | 64 | 30 | J/KHC |
| 32. | தெய்வேந்திரகுமார் தணூஜன் | 64 | 30 | J/KHC |
| 33. | பவித்திரா கோகுலானந்தன் | 64 | 30 | J/VGHC |
| 34. | திவ்யா ஜெனானந்தராஜா | 64 | 30 | J/VGHC |
| 35. | சங்கீதா வரதன் | 64 | 30 | J/VGHC |
| 36. | விக்னேஸ்வரன் குகானன் | 60 | 36 | J/HC |
| 37. | அருள்றொபின்சன் நிஷாந்தன் | 60 | 36 | J/MHC |
| 38. | செல்வகுமார் ஜெயராஜ் | 60 | 36 | J/MC |
| 39. | கிருபைநாதன் சிந்துஜன் | 60 | 36 | J/MC |
| 40. | ஜெகநாதன் மயூரன் | 60 | 36 | J/MC |
| 41. | தர்சியா துரைரட்ணம் | 60 | 36 | J/MC |
| 42. | வினுசியா புவனேந்திரராஜா | 60 | 36 | J/VGHS |
| 43. | மோகனராஜீ சதீஸ்வரன் | 60 | 36 | J/MC |

## 2016 - A/L Science

ஆரம்பம் - 28.12.2013 (சனி)

நேரம் - 7.30 A.M

**பௌதிகவியல்**
R. குமரன்
R. குகன்

**இரசாயனவியல்**
டயஸ் (Tamil&English Medium)
T. சிவகுமார்

**உயிரியல்**
S. பொன் திவாகரன்
V. உமாசங்கர்

(42867)(10.6)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.